

பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 21

அம்மான்
ஆண்டி
அகிலன்
டர்பன் ச. மு. பிள்ளை
வழிப்போக்கன்
தமிழரசன்
வெ. குருசாமி
வ. சம்பந்தன்
விசு. திருநாவுக்கரசு
மு. அண்ணாமலை
தில்லை வில்லாளன்
ரா. தணலன்
அத்தான்
வேத்தரசன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 விலை அணா 5
கார்த்திகைத் திங்கள் 25-ம் நாள் 10—12—49

தீப தரிசனம்

காற்றையும் தீயையும் தன்வசமாக்கிக்
காட்டினர் மேலே நாட்டினோர்—திரு
நீற்றையும் மண்ணையும் குழைத்து நெற்றியில்
தீட்டினர் நமது நாட்டிலே!

கண்டபுதுமைக் கங்கே காட்சிசாலைகள்
வைத்திடுவார் மக்கள் மொய்த்திடுவார்—இந்தக்
கண்டத்தில் உள்ளவர் கடவுளைத் தேடிச்
சென்றிடுவார் கூடி நின்றிடுவார்!

அரைநொடியில் ஒருபாலம் ஆற்றைக் கடக்க
அமைத்திடுவார் படை நடத்திடுவார்—நாம்
ஒருதேரைச் செப்பனிட ஆண்டுகள்பல
போக்கிடுவோம் நலம் நீக்கிடுவோம்!

காசொன்றைப் போட்டால்நம் கனத்தைக் காட்டும்
இயந்திரங்கள் அங்கே விந்தையில்லை!—நம்
தேசத்திலே உண்டியலில் காசைப் போட்டால்
திருநீற்றையே அள்ளித் தருவார்களே!

அருமையாய்ப் பறவைக்கப்பல் ஐநூறுபேரை
ஏற்றிச்செல்லும் அதைப் போற்றிநிற்பார்—நாம்
திருவண்ணா மலைக்கார்த்திகை தீப தரிசனம்
கண்டு நிற்போம்—நல்ல மண்டுகள் போல்!

(காற்றையும்........

—அம்மான்



இலங்கைத் தமிழர் நிலை

இலங்கை தனி நாடு; தனக்கென உரிமைகளோடு இயங்குவதாகும். அந்நாடு தன் வளம் பாதுகாக்கப்பட, வேண்டிய கட்டுப்பாடுகள் செய்து கொள்வதை நாம் மறுப்பதற்கில்லை.

ஆனால் அக்கட்டுப்பாடுகள் அந்த நாட்டில் வாழும் அனைவருக்கும் சம உரிமை அளிப்பதாயிருக்க வேண்டும். வெளிநாட்டைச் சேர்ந்தவர்கட்கு இடும் தடைகளைப் பற்றிப் பேச்சில்லை. எப்பொழுதோ சில காலம் வருவது, போவது என்ற நிலையிலுள்ளாரைப் பற்றியும் கவலை இல்லை. ஆனால் இலங்கையையே தங்கள் தாயகமாகக் கொண்டு விட்டவர்கள், அவர்கள் எந்த நாட்டிலிருந்து குடியேறியவர்களாக இருந்தாலும், சம உரிமை அளிக்கப்பட வேண்டியவர்களே!

இலங்கை அரசினர், இந்தியாவினின்றும் அங்கு குடியேறி, அந்நாட்டு வளப்பத்திற்கு அடிப்படை எழுப்பிக் கொடுத்த, இந்திய மக்கட்குக் குடியுரிமை அளிப்பதில் புதுப்புதுக் கட்டுப்பாடுகள் விதித்து வருகின்றனர். அதே நேரத்தில் சிங்களவர் எளிதில் குடியுரிமை பெற வாய்ப்பளித்திருக்கின்றனர். குடியுரிமைச் சட்டம், இவ்வாறு விதம் விதமாக அங்கு நிறைவேற்றப் பெற்றிருக்கிறது.


இலங்கை மக்கள் தொகை 60 லட்சம் எனில், அதில் 10 லட்சம் பேர் இந்தியர்கள். இவர்களில் பெரும்பான்மையோர் நம் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்—தமிழ் மக்கள். இவர்களில் தேயிலை, காப்பித் தோட்டங்களில் வேலை செய்யத் தொழிலாளராகச் சென்றிருப்போரே பெரும்பான்மையோராவர். இவர்கள் தலைமுறை தலைமுறையாக இலங்கை வளம்பெறப் பாடுபட்டிருக்கின்றனர். ஆனால் பலன் துயர்நிறைந்த

சோகக்கதைதான். 'தேயிலைத் தோட்டம் — அங்கே தொழிலாளர் நிலை' என்று சுருக்கமாகச் சொன்னால் போதும். அங்கே அவர்கள் படும் அவதி நம் மனக் கண் முன்னே படமாக விரியும். இவர்கள் இப்போது பெற விரும்புவதெல்லாம் அந்த நாட்டின் குடியுரிமை தான். இலங்கை அரசினர், அவர்கட்கு எப்படி யெப் படித் தடையிட்டுக் குடியுரிமை பெறாமல் தடுக்கலா மென்று ஆராய்ந்து ஆராய்ந்து சட்டமியற்றியிருக்கின் றனர். பத்து லட்சம் பேரில் சுமார் 300 பேரே குடி யுரிமை பெற்றிருக்கின்றனரென்றால் அச் சட்டத்தின் கடும் விதிகளை நாம் ஒருவாறு ஊகித்துக் கொள்ள லாம்.

தமிழகம், தன் மக்கட்குப் பிழைப்பழிக்க விதி யற்று, அண்டை நாடுகட்குக் கூலிகளாக அனுப்பும் நிலையே எண்ண எண்ண வெட்கம் தருவதாகும். தன் வளத்தை மாற்றார் சுரண்ட விடுத்து, தன் மக்கள் உழைப்பைப் பிற நாட்டார் சுரண்டத் தந்து நிற்கும் தமிழகம் வாழ்வு பெறும் நாள் எந்நாளோ? சுதந் தரம் பெற்ற நாடு என்றும் குடியரசு அமைத்தோம் என்றும் வீறாப்புப் பேசும் தலைவர்கள், இலங்கைக் குக் கூலிகளை அனுப்பும் இழி நிலை இன்னும் மாற் றப்பட வில்லையே என்று எண்ணிப் பார்ப்பதில்லை; மாற்ற முயற்சிப்பது மில்லை. இவ்வகை முயற்சி களில்லா விட்டாலும், அங்கு சென்று வாழும் தன் மக் கள் பொருட்டாவது ஆவன செய்ய முனைந்தாரெனில் அதுவும் இல்லை.

வெளிநாட்டு விவகாரம் மத்திய சர்க்காரிடம் இருக் கிறது; எனவே இலங்கைப் பிரச்னை அவர்கள் கவனிக்க வேண்டியதொன்று. ஆனால் அவர்கட்கு இப் பிரச்னையில் அவ்வளவு அக்கறை இருக்கக் காரண மில்லை. வடநாட்டு மக்கள் வாழ்வு வதங்கினால்தான் அவர்கள் துடித்தெழுவர். அகதிகள் பிரச்னையில் அவர்கள் காட்டிய பரிவு நாம் அறிந்ததே! ஆனால் பெரும்பாலும் தென்னாட்டார் என்ற நிலையிலுள்ள இலங்கை இந்தியர் அவதியைச் சென்னை அரசினர் கவனிக்கலாமென்றால், கவனிக்க அதிகாரம் இல்லை. 'ஐக்கிய இந்தியாவில்' சென்னை மாகாணத்துக்குள்ள அதிகார வரம்பு இதுதான். தன் மாகாண வாசிகள் அண்டை நாட்டில் அவதிப்படுகிறார்கள்; அதைத் தடுக்க அதிகார மில்லாத நிலையில் தான் மாகாண சுயாட்சி நடைபெற்று வருகிறது.

அண்மையில், சென்னை சட்டசபையில், இவ்விஷயம் குறித்து வேண்டுகோள் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறார்கள். பண்டித நேரு, காமன்வெல்த் மாநாட்டிற்கு இலங்கை செல்ல இருக்கிறாரல்லவா? அப்போது இலங்கை இந்தியர் பிரச்னை குறித்து நல்லதொரு முடிவுகாணும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்; அவருக்கு ஆலோசனை சொல்லச் சென்னை அரசினர்சார்பில் ஒரு தூதுக்குழு ஒன்றையும் அழைத்துச் செல்லும்படி கோரியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் நிறைவேற்றும் அளவுக்காவது சென்னை துணிந்ததற்கு நம் பாராட்டு. இத்தீர்மானம் காரியத்தில் நிறைவேறும்படி பார்ப்பதும் சென்னை அரசினரின் கடமையாகும். இந்திய சர்க்காரின் கவனம் எத்தனையோ பிரச்னையில் அலைமோதுண்டு கிடக்கிறது! அவர்கட்கு இப்பிரச்னை பெரும் பிரச்னையாகப் படாது. அவர்கட்கு உணர்த்தும் பொறுப்பு நம் சென்னை அரசினரையே சேர்ந்ததாகும்; மேலும் இலங்கைத் தமிழர்படும் அல்லல்களைக் களைவதில் முனைந்து செயலாற்றுவதும் இவர்கள் கடமையேயாகும். இலங்கை அரசினர் தங்கள் போக்கை மாற்றிக் கொண்டு, நேர்மைக்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டு நடப்பரென்றும் நாம் நம்புகிறோம்.



இலங்கை இந்தியர் அவதியைச் சென்னை மந்திரிசபையினர் பண்டிதநேருவுக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

காலமும் கருத்தும்

இந்துத்தொகுப்பு மசோதா

டாக்டர் அம்பேத்காரின் இந்துத் தொகுப்பு மசோதா எத்தனையோ மாதங்கட்கு முன்பே நிறைவேறியிருக்க வேண்டியதொன்ருகும். ஆனால் பழமை விரும்பிகள் அம் மசோதாவை நிறைவேற விடாது தடுத்தே வந்திருக்கின்றனர். டாக்டர் பட்டாபி சீதாராமையா, டாக்டர் ராஜேந்திரப்பிரசாத் இந்தப் பெருந்தலைகள் எல்லாம் இத் திருப்பணியில் ஈடுபட்டன என்ருல் மசோதா நிறைவேருததில் வியப்பொன்றுமில்லை. மசோதா அப்படியொரு தீவிர நோக்கங் கொண்டதுமல்ல. மிகச் சாதாரணச் சீர்திருத்தங்களை நடைமுறைக்குக் கொண்டுவர எழுந்ததேயாகும். இதற்கே இத்தனை எதிர்ப்பு என்ருல், நம் எதிர்காலம் எப்படி யிருக்குமென நாம் தீர்மானிக்கவே முடியாதிருக்கிறது. பிரதமர் நேரு, அண்மையில் இம் மசோதாவை எப்படியும் நிறைவேற்றி விடவேண்டும் என்று துடிதுடித்துப் பேசியிருக்கிருர். இம் மசோதா நிறைவேறுவதில் தான் என் சர்க்காரில் உங்கட்கு நம்பிக்கை இருக்கிறது, இல்லையென்பது புலனுகவேண்டும் என்றும் ஆவேசமாகக் கூறியிருக்கிருர், அவருக்குள்ள ஆர்வத்தைப் பாராட்டுகிருேம். ஆனல் மசோதா, பிற்போக்கான திருத்தங்களுடன் நிறைவேறுவதைக் காட்டிலும் நிறைவேருதிருப்பதே நல்லது. எனவே மத்திய சட்டசபையிலிருக்கும் முற்போக்கு எண்ணங் கொண்டோரின் ஆதரவு பண்டிதருக்குக் கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது, மசோதா நிறைவேற்றம். பழமை விரும்பிகள் தங்கள் போக்கை மாற்றிக் கொண்டு, காலத்தை ஒட்டி நடந்து கொள்வது மிக மிக அவசியமாகும்.

புதிய அரசியல் திட்டம்

வரும் ஜனவரி 26-ல் இந்தியா குடியரசாகப் போகிறது. அன்று முதல் புது அரசியல் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும். இந்திய அரசியல் நிர்ணய சபை புது அரசியலை வகுத்து முடித்து விட்டது. இந்த அரசியல் இந்திய மக்கள் மேம்பாட்டுக்கு எத்தனை தூரம் பயன்படப் போகிறதென்பது ஒருபுறமிருக்க, அது நிறைவேறிய நாளில், டாக்டர் அம்பேத்கார் கூறிய எச்சரிக்கைகள் நாட்டு மக்கட்குப் பயன் தருவதாக இருக்கின்றன. நமக்குக் கிடைத்திருப்பது வெறும் அரசியல் சுதந்திரம் தானென்பதை அவர் வெட்ட வெளிச்சமாக்கி யிருக்கிருர்; பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும் ஏற்றத் தாழ்வுகள் நிலவுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிருர். இந்த ஏற்றத் தாழ்வுகள் நீக்கப் படாவிட்டால் அரசியல் சமத்வம் அர்த்தமற்றதாகி விடுமென்றும் எச்சரிக்கை செய்திருக்கிருர். ஒடுக்கப்பட்டோரின் உரிமை

கள் கவனிக்கப் படாவிட்டால் அவர்கள் கொதித்தெழுந்து இப்போது நிறைவேறியுள்ள அரசியல் திட்டத்தையே தகர்த்து விடுவரென்றும் எடுத்துக் காட்டியுள்ளார். தலைவரைப் பெரிதாகக் கருதிப் பூசிக்கும் மனப்பான்மை இந்தியரிடம் அதிகமிருக்கிற தென்றும், இது மாருவிட்டால் ஜனநாயகம் சரிவர நடைபெற முடியாது என்றும் விளக்கம் தந்துள்ளார். டாக்டர் அம்பேத்காரின் இந்த அறவுரைகள் "தேசியத் தோழர்களுக்கு"க் கசப்பாக இருக்கலாம்; என்ருலும் உண்மை நிலையை ஒப்புக்கொள்ளத் தானே வேண்டும். புது அரசியல் திட்டம் போதுமான பிரதிநிதித்துவமற்ற சபையாரால் நிறைவேற்றப் பட்டிருப்பதொன்று; மத்திய சர்க்காருக்கு அதிகாரங்களைக் குவித்து, மாகாணங்களைக் கேவலம் "எடுபிடியாக" ஆக்கியிருப்பது இரண்டு; இந்தக் குறிப்பிட்ட காரணங்களால் பெரும்பான்மையோரால் ஒப்புக்கொள்ள முடியாததாகிறது. வருங்காலம் அதன் நிலையைத் திட்டமிடுமென்று நம்பலாம்.

மதுவிலக்கு கரைகிறது

அண்மையில் சென்னை சட்டசபையில் மது விலக்கு மசோதாவுக்கு ஒரு திருத்தம் நிறைவேறியிருக்கிறது. அதன்படி ராணுவத்திலுள்ளவர்கள் மதுவைப் பயன்படுத்த வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது; மேலிடத்து ஆலோசனைப்படியே இத் திருத்தம் நிறைவேற்றப் பட்டிருக்கிறதாம். மது விலக்கினுல் சென்னை அரசினர் 17 கோடி ரூபாய் வருமானம் இழந்ததைத் தவிர உருப்படியான பலனென்றும் இல்லை. மது விலக்கு நிர்வாகம் தோல்வியையே கண்டு வருகிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. சட்டம், அதை அமுல் நடத்தும் முறைக்கேட்டினுல் தூங்குகிறது. சர்க்காருக்கு இந்தக் கள்வர்களைக் கண்டு பிடிக்கத் திறமை இல்லையென்று சொல்ல வேண்டும்; அல்லது திறமை யிருந்தும் வேண்டுமென்று விட்டுக் கொண்டிருக்கிருர்கள். மது விலக்கு வழக்குகள் சர்க்கார் தோல்வியை அப்பட்டமாய்ப் பறை சாற்றுகின்றன. இந் நிலையில்தான் ராணுவத்தார் குடிக்கலாமென்று திருத்தம் கொண்டு வந்திருக்கிருர்கள் சென்னை அரசினர். கள்ளத்தனமாக நடப்பது ஒரு பக்கம்; சட்டப்படி அனுமதிப்பது மற்ருெரு பக்கம். இச் சூழ் நிலையில் மது விலக்கு வெற்றி பெறுவது என்னவோ குதிரைக் கொம்புதான்! மக்களிடம் மதுவிலக்கின் பெயரைச் சொல்லி வரி விதித்ததுதான் நடை முறையில் கண்ட மிச்சமாயிருக்கிறது. அரசாங்கம் ஒன்று மது விலக்கைக் குற்றங் குறையின்றி அமுல் நடத்த வேண்டும்; அல்லது முற்றும் எடுத்து விடவேண்டும்; ராணுவத் தோழர்களிடம் காட்டிய இரக்கத்தை எல்லோரிடமும் காட்டி விடலாமல்லவா?

முத்து பொங்கல் மலர் 1950

விலை அணு எட்டு

○○○

பார்க்கப் பார்க்க அழகான படங்கள், படிக்கப் படிக்க ஜோரான கதைகள், பாடிக்கொண்டே யிருக்க வைக்கும் பாட்டுக்கள், இன்னும் வேடிக் கைச் சித்திரங்கள், விடுகதைகள் எல்லாவற்றுடனும் வெளிவருகிறது.

○○○

தபாலில் பெற விரும்புவோர் 10 அணு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். சந்தாதார் 8 அணு அனுப்பினுல் போதும்

○○○

முத்து அலுவலகம்

கீழராச வீதி :: புதுக்கோட்டை



"பத்திரிகைகளில் புதிய செய்தி உண்டா?" என்று விசாரணையைத் தொடங்கினான் இளங்கோ.

"ஏன் இல்லை? காஷ்மீர் பிரச்னை, ஐ.நா.வில் தென் ஆப்பிரிக்க சர்க்காரின் குட்டு அம்பலம் ஆந்திர மாகாணப் பிரிவினை—சென்னை சர்க்கார் ஏற்பாடுகள்..." என்று வழுதி பெரிய 'லிஸ்டை' ஒப்புவிக்க ஆரம்பித்து விட்டான்.

"போதும் நிறுத்து. 'நம் வம்பு மடத்திற்குச் செய்தி உண்டா?' என்று கேட்டால் ஏதேதோ உளறுகிறாயே!" என்று மடக்கி வழுதியின பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான் இளங்கோ.

"தோழரே, ஏன் மௌனம் சாதிக்கிறீர்? உரையாடலில் கலந்து கொள்ளாதிருப்பதன் காரணம் என்னையோ?" என்று என்னைக் கிளறினான் வழுதி.

"பூரியில் நம்ம கவர்னர் ஜெனரலுக்குப் 'பாரத பாஸ்கர்' என்று பட்டம் கொடுத்தார்களாமே, தெரியுமா சேதி" என்றேன் நான்.

"பூரியில் யுனிவர்ஸிட்டி ஒன்றுமில்லையே! அப்படியிருக்க யார் பட்டம் கொடுத்தார்கள்?"

"ஜெகன்னாதர் ஆலயத்தைச் சேர்ந்த பண்டிதர் சபை தான் அந்தப் பட்டத்தைக் கொடுத்திருக்கிறது"

"பாரத பாஸ்கர் என்றால் என்ன பொருள்?"

"இந்தியாவின் சூரியன் என்று அர்த்தம்"

"சரி. சரி. நல்ல பட்டமாச்சே! ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு சூரியன் இருந்தால் எவ்வளவு நல்லது"

"நிறுத்தப்பா—ஆச்சாரியார் 'ஒரு சூரியன் இருக்கும்போது இன்னொரு சூரியனை ஏன் தேடுகிறீர்கள்?' என்று சொல்லிப் பட்டத்தை வேண்டாமென்று மறுத்து விட்டாராம்"

"பூரிப் பண்டிதர்கள் எவ்வளவு வருத்தப்பட்டிருப்பார்கள்?"

"அவர்கள் ஏன் வருத்தப் படுகிறார்கள்? இந்துமகா சபைத் தலைவர் வரும்போது கொடுத்து விட்டுப் போகிறார்கள்; அவ்வளவுதானே!"



"பாருங்களேன், நம் நாட்டில் 'பாரத பாஸ்கர்' என்று பட்டத்தைத் தயாரித்துக் கொண்டு 'யார் வருவார்? அளிப்போம்' என்று காத்துக்கொண்டிருக்கிறோம். அமெரிக்காவில் சூரிய ஒளியைக் கொண்டு எப்படி மோட்டார் ஓட்டலாமென்று ஆராய்ச்சி பண்ணுகிறார்கள். நமக்கும் அவர்கட்கும் எவ்வளவு வித்தியாசம்?"

"வித்தியாசமில்லாமலா, அங்கே விளைந்துள்ள தானியங்களை உரமாகப் போடுகிறார்கள்! நாம் அரை வயிற்றுக்குமில்லாமல் தாளம் போடுகிறோம்."

"சூரத்தில் ஒரு விசித்திரமான நிகழ்ச்சி. பால் சாப்பிடும் விரதத்தை இருவர் மேற்கொண்டிருக்கிறார்களாம்"

"இதிலென்ன விசித்திரமிருக்கிறது? கிடைத்தால் எல்லோரும் தானே பால் சாப்பிடுவார்கள்?"

"அப்படியில்லே, உணவு தானியக் கட்டுப்பாடு நீங்கும் வரை வெறும் பால் மட்டுமே சாப்பிடுவது என்று அவர்கள் தீர்மானித்திருக்கிறார்களாம்"

"நல்ல விரதமப்பா—வாரத்தில் ஒருநாள் உணவைச் சாப்பிடாதே என்று கோஷமிட்டுக் கொண்டு ஆள் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். இப்போது 'பால் சாப்பிடுக' என்று தொடங்கியிருக்கிறார்கள். வேடிக்கை தான்"

"மைசூர் அரசாங்கம் நியூயார்க்குக்கு இரண்டு யானைகள் அனுப்ப இருக்கிறதாம்" என்று வேறு விஷயத்திற்கு உரையாடலைத் திருப்பினேன் நான்.

"முந்தி ஜப்பானுக்கு இரண்டு அனுப்பி யிருக்கிறார்களே, அவர்கள்"

"ஆமாம், டோக்கியோவுக் கொன்றும், கோபேக் கொன்றுமாக இரண்டு. இப்போது நேரு, நியூயார்க்குக்கு அனுப்பும்படி மைசூரைக் கேட்டுக்கொண்டிருக்கிறாராம்"

"சரியாய்ப் போச்சு. மைசூருக்கு, யானை அனுப்புவதே பிழைப்பாய் விடும்போலிருக்கிறது. மைசூர் யானைகள் உலகமெங்கும் சென்று தங்கும் வரை பண்டித நேரு ஓயமாட்டார் போலும்!"

"இந்தியில் தந்தி அனுப்புவதென்று சில மாகாணங்களில் ஏற்பாடு செய்தார்களல்லவா?"

"ஆமாம் இந்தி பேசும் மாகாணங்களுக்கிடையே அந்த ஏற்பாடு அமுலுக்கு வந்தது. அதற்கென்ன?"

"அதற்கென்ன? அந்தத்திட்டம் படுதோல்வியாம். நூற்றுக்கு ஒரு தந்திகூட இந்தியில் அனுப்பப்பட வில்லையாம்"

"என்னப்பா, இச் செய்தியிலிருந்து இந்திய தேசிய மொழிக்கு அதுபேசும் பகுதிகளிலேயே ஆதரவில்லையென்றல்லவா புலப்படுகிறது!"


"எனக்கும் உனக்கும் புலப்படலாம், இந்த உண்மை இந்திய சர்க்காருக்குப் புலப்பட வேண்டுமே"

"புலப்படாமல் என்ன?"

"நன்கு பேசுகிறாய்! இந்தியில் தான் தந்தி அனுப்ப வேண்டுமென்று சட்டம் போட்டு விடுகிறார்கள். அப்புறம் அவர்கள் நினைப்பது நிறைவேறி விடுமல்லவா?"

"நீ சொல்வது சரிதான் அவர்கள் அப்படித்தான் செய்வார்கள். இந்தியைப் பரப்பத்தான் வேறு வழியில்லையே!" என்று முடித்தேன் நான்.

"சரி. நாங்க வருகிறோம்" என்று இளங்கோவும் வழுதியும் தத்தம் வீடு சென்றனர்.



புதிய அரசியல் திட்டம் என்னவோ உருவாகி விட்டது. ஆனால் பொருளாதார, சமுதாய சமத்துவம் மட்டு நிறுவப்படவில்லை.

..பொது மேடை..

போத்தனூர்
1.12.49

★ வரிக்காக மதுவிலக்கா?

மதுவிலக்கு வெற்றியளிக்கவில்லை என்பது மாநில மக்களும், நாடாளும் அமைச்சர்களும் நன்கறிந்த தொன்றாகும். அதைக் குறித்து முதலமைச்சர் முதல் கடைசிக் கதர்க்குல்லாய்த் தொண்டர் வரை கூறும்போது, 'மக்கள் ஒத்துழைக்க வில்லை—ஒத்துழைத்தால் கள்ளச் சாராயமே இல்லாதொழித்து மதுவிலக்கை வெற்றிகரமாக்குவோம்' என வாய்ப்பறை சாற்றுகின்றனர். ஆனால் உண்மை என்னவெனில் ஆளவந்தார்களுக்கே இதில் போதுமான சிரத்தை இல்லை என்பது கூர்ந்து நோக்குங்கால் புலனாகும். மதுவிலக்குச் சட்டம் கொண்டுவந்தால், மதுவினால் கிடைக்கும் வருமானம் ரூ 17 கோடியும், சட்டத்தை அமுல் நடத்த ஆகும் நிர்வாகச் செலவு ரூ 3 கோடி, ஆகமொத்தம் ரூ 20 கோடி அரசாங்கத்திற்கு நஷ்டமானாலும் சரி, அதை வேறு துறையில் மீட்டுக் கொள்ளலாம். ஏழைகள் துயர் தீர்ந்து நல்வாழ்வு பெற்றால் அதுவே நாட்டிற்கு நன்மை செய்ததாகும் என மக்கள் கருதிச் சட்டத்தை வரவேற்றதற்கு மாறாக, இன்று அரசாங்கம், ஏழைகள் துயரை அதிகரிக்கவே வழிகோலி வருகிறது.' அரசாங்கம் கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க முழுமுயற்சி செய்யவில்லை என்பதற்குச் சான்றாக, குடிபோதையிலிருந்ததாக நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்படும் குற்றவாளிகளை, நீதிபதி விசாரணை செய்கையில், அவர்கள் குடித்தார்கள் என்பது உண்மையா என்று மட்டும் தெரிந்து கொள்கிறாரே தவிர, எங்கு, யாரிடம் பெற்று அருந்தினார்கள், என்பதைப் பற்றி அறிந்து கொள்ள முயற்சிப்பதே கிடையாது என்பதை நீதிமன்ற விசாரணையை நேரில் கண்டவர்கள் அறிந்திருக்கலாம். அப்படிக் கள்ளச் சாராயம் கிடைக்குமிடத்தை அறிந்து கொண்டாலல்லவா, அதன் நடமாட்டத்தை அடியோடு தடுக்கவும், குடிப்பவர்களே இல்லாமல் செய்யவுமான முயற்சி வெற்றி பெறும். அதை விடுத்து, குற்றவாளிக்கு, அவன் சக்திக்கு மேற்பட்டு ரூ 300, 400 என்று அபராதம், அதைச் செலுத்தாவிடில் 6 மாதம் சிறைத் தண்டனை என்று தீர்ப்புக்கூறினால், எந்தஒருஏழையும் சிறைக்குச் செல்ல விரும்பாமல், தன்வசமுள்ள மாடு, கன்று, வீடு எதையாவது விற்று அபராதத் தொகையைக்கட்டிவிட்டு வெளியே வரவே முயற்சிக்கிறான். இதைப் பார்க்கும்பொழுது, அரசாங்கம் மதுவிலக்கைக் காரணமாகக் கொண்டு புதுப்புது வரிகள் பல போடவும், மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் வரும் குற்றவாளிகளிடமிருந்து லட்சக் கணக்கான ரூபாய்கள் அபராதம் என்ற முறையிலே பெறவுமான வழிவகைகளைச் செய்து தனது வருமானத்தை அதிகரிக்கும் செயலில் ஈடுபட்டிருக்கிறது என்றே கருதவேண்டியிருக்கிறது. மற்றும் இவ்வாறு குற்றவாளிகளுக்கு அவர்களின் சக்திக்கு மேற்பட்டு அபராதம் போடுவதால், ஏழைக் குற்றவாளிகளின் குடும்பங்கள் வறுமையிலுழன்று முன்னிலும் அதிக அளவு அல்லலுறவே வழி ஏற்பட்டிருக்கிறது-ஆளவந்தார்கள் புதுப்புது வரிகள் போடுவதைப் பார்த்தால் மதுவிலக்குக்காக வரியா, அல்லது வரிபோடுவதற்காக மதுவிலக்கா என்ற ஐயம் ஏற்படுகிறது. மது

விலக்குச் சட்டத்தின் தற்போதைய அமுல் நடத்தும் முறையால் ஏழைகள் துயர்தீருமா? இனியாவது தீர்க்க முழுமனதோடு அரசாங்கம் முன்வருமா, என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

ச- வேலுசாமி.

○●○

சிங்கப்பூர்
18 12-49

குறை தீர்ந்தது

மக்களின் மடமையைப் போக்க, அறிவீனத்தை அகற்ற, பகுத்தறிவை வளர்க்கப் பொன்னி ஓர் சிறந்த இதழெனக் கூறுகிறேன், பெருமையுடன் மகிழ்ச்சிப் பெருக்கால். பொன்னியில் வரும் கதைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் படிக்கும்போது அங்கு அறியாமை எனும் மூடப் பழக்க வழக்கங்கள், அறிவின் ஈட்டிகளான பொன்னியில் வரும் எழுத்தோவியங்களுக்கு அஞ்சி ஓடி ஒளிந்து கொள்கின்றன. வந்து கொண்டிருந்த 'சிறுவர் அரங்கம்' இடையில் நின்றுவிட்டதே என்று எண்ணி ஓர் குறையைக் கண்டேன். ஆனால் இன்று அக்குறை தீர்ந்தது. புராணக் கதைகளையும் மந்திரக் கதைகளையும் படித்து அறிவைப் பாழாக்காமல், அறிவிற்கேற்ற சிறுவர் அரங்கம் மீண்டும் 10—11—49ந் தேதிய இதழிலிருந்து வருகிறதென்ற நற்செய்தியை அறிந்து எண்ணிய குறை தீர்ந்ததென மகிழ்ச்சி கொள்கிறேன்.

க. சு. துரைசாமி.

○●○

குன்னூர் R. S.
3-12-49

அந்த நாள்

அண்மையில் எங்களூரில் 'இளைஞர் விழா' என்ற படக்காட்சி நடைபெற்றது. ஜூலை 14 உலகப் பாட்டாளியின் வெற்றிநாள். மாளிகையும், மதோன்மத்தர்களும் மருண்ட நாள். ரஷ்யா, முதலாளித்வ நாடுகளுக்கு ஒரு கிலி. உலக அவையில் கூட இந்த நாட்டைப் பற்றி உத்வேகமான பேச்சு. இந்த நிலையிலேதான் 'ரஷியாவில் இளைஞரின் இன்ப நாள்' எது. திருவண்ணாமலைத் தீப அலங்காரமல்ல, சேலம் செருப்படி மாரி விழாவல்ல, சீரகத்துப் பெருமான் துலுக்க நாச்சியார் வீடுசெல்லும் வைபவமல்ல......உணவிற்கும், உயர்விற்கும் வழி தேடிய நாள். அந்த நாளில் மாஸ்கோ வீரன் ஸ்டாலின் வருகை...பாலன் முதல், நரை திரை மூத்த முதியோர் வரை ஒரே குதூகலம்...ஒளி இழந்த கண்களைக் காண முடியுமா? ஒட்டிய வயிறும், குழிவிழுந்த கன்னங்களும் உண்டா...? அது பரதகண்டத்தின் பாரம்பரைச் சொத்தல்லவா? அங்கு எப்படி இருக்க முடியும்? கனிமொழி பேசும் மாதரின் கம்பீரமான அணிவகுப்பு, வீராங்கனைகளின் விளையாட்டு, மக்களின் ஆரவாரம், தலைவருக்கு மரியாதை, நாட்டின் நாயகர்கள், புண்பட்ட உள்ளங்களுக்குப் புதுமை ஊட்டிய ஸ்டாலின், மாலடோ; இவர்களுக்கு, செங்கோல் கொடுத்தார்களா? கோலாட்சியின் கொடுமையினின்று குடியாட்சிக்கு வந்தவர்களாயிற்றே எனக் கோயில் கட்டிக் குந்தவைத்தார்களா? அது கோமள வள்ளிகளுடன் கும்மாளமடிக்கும் இடமென்று அவர்கட்கு நடைமுறை பாடம் கற்பித்ததே. நாட்டின் தியாகிகளுக்கு அவர்கள் கொடுத்தது ஓர் மலர்மாலை. சூட்டிய கரங்கள், நம் நாட்டைப் போலப் பொட்டிட்டுப் பூரிக்கும் கைகளா? அதுதான் இல்லை. இளைஞர் ஆண், பெண் இருவர். பயமறியாத வாலிபப் பருவம். தள்ளாடிய நடையிலே ஒரு விறுவிறுப்பு. புன்னகையுடன் அவ்விரு குழவிகளும் மாலை அணிவிக்கும் காட்சி மனக்கண்ணை விட்டு அகலவே இல்லை. அவர்களை எடுத்து மாவீரர் மாலடோவும், ஸ்டாலினும் மக்களுக்கு அறிமுகப்படுத்தும் குதூகலக் காட்சி! வறுமை, பிணி, சாக்

காடு, விதி இவைகளை மீறிய நாட்டின் நிகழ்ச்சி! அந்த நாள் யாரும் மறக்க முடியாத நாள். அக் காட்சியைப் பார்த்த மக்கள் இந்த உபகண்டம் இந்த வழியைப் பின்பற்றும் நாள் என்னுளோ என்று ஏங்கித்தான் வெளியேறுகின்றனர். அந்த வழியைப் பின்பற்றும் நாளைக் கூடிய சீக்கிரம் 'பொன்னி' உண்டாக்கித் தருவாள் என்ற உறுதியுடன் இக்கடிதத்தை முடிக்கிறேன்.

மார்க்ஸ்பித்தன்

○●○

பாண்டவர்மங்கலம்
13-11-49

விரிசுடராய் ஒளிர்க

புதுக் கன்னிபோல் மின்னி வந்தாள் 'பொன்னி' நல்லாள். அதிகப் பக்க ஆடைதாங்கி, புதுப்பகுதி பொன்னணிகுலுங்க மென்மலர் இதயம் புகுந்தாள். அவள் அழகிற்கு என் வாழ்த்து, அருமைக்கு என் வணக்கம். ஆரிய ஏடுகளிற் சில ஆரியர் எழுதும் அம்மாமித் தமிழ்ச் சிறு கதைகளையே ருசி பார்த்த தமிழர்கட்குத் "தமிழின் இனிமை இது, சிறுகதைச் சிறப்பு இது" எனக் காட்டத் தோகை விரித்துப் பறந்தாள். மாதமிருமுறையாக வேண்டும், என்று விரும்பியவர்களே பக்கம் குறைந்ததும் கதைகள் இல்லையே என்றனர்; இக்குறை நீக்கிய கறையறு மதியென இன்று விளங்குகிருள் பொன்னி; 'இதழ் செய்வது எமவர்க்கே உரியது' என்று இறுமாந்திருந்த கூட்டம் ஏமாற 'யாமார்க்கும் குடியல்லோம்' என முரசொலி கிளப்பினுள். தாள் வசதி தனக்குக் குறைவெனினும் துணிந்து தோகை விரித்தாள். மாதம் ஒரு முறையில் வந்தாலும் மலர் சிறந்து மாற்ருர் மருள விளங்க வேண்டுமென்பது எனது அவா; அதிகப் பக்கங்களில் அதிக விலையில் அதிகப் பகுதிகளில் பேச்சாளர் பகுதி, இளம் எழுத்தாளர் பகுதி, காவியப் பகுதி, நாடகப் பகுதி, இசைப் பகுதி முதலிய புதுப் பகுதிகளில் இலங்கும் ஒரு விரிசுடராய்ப் பொன்னி ஒளிர வேண்டுமென்பது என் பேரவா! வெல்க!

அ. செ. மாணிக்கம்

○●○

பசுமலை
5-11-49

வரவேற்கிறேன்

பொன்னியைப்பற்றிய கருத்துக் கூறவேண்டுமென எண்ணினுல் பொன்னியில் அடங்கியுள்ள பக்கங்களே போதாதாகும். சுருங்கக் கூறின் 'பொன்னி' சகலமும் நிறைந்த ஓர் கலைப் பொக்கிஷம். கவி, தலையங்கம், காலமும் கருத்தும், தொடர்கதை, வம்புமடம், சிந்தனையைத் தூண்டச்சிலப்பதிகாரக் காட்சிகள், உல்லாச புரியைத் தாக்க 'உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு', பகுத்தறிவைத் தூண்டும் ஓர் சிறுகதை, கலை அரங்கம். எத்தனை கருத்துக்களைத் தாங்கி வெளிவருகிறது! ஆனல் ஒன்று, சீர்திருத்தம் செய்யப் பகுத்தறிவு என்னும் மருந்தைக் கதை என்ற அனுபானம் மூலமாகச் செலுத்துவதை நான் வரவேற்கிறேன். மேலும் அரசியல், பொருளாதார, சமூகச் சீர்திருத்தங்கள் தாங்கும் கட்டுரைகள் ஒவ்வொரு பொன்னி இதழிலும் வர இருப்பது வரவேற்புக்குரியது. இதை அறிந்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அட்சயன்

○●○

பீளமேடு
28-11-49

ஆந்திர மாகாணம்

அமைக்கப்படப்போகும்ஆந்திரம் புதிய அரசியலின் படி யாதொரு உருப்படியான காரியத்தைச் சாதிக்க முடியாவிட்டாலும் தமிழர் ஆந்திரர் பேதத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி என்பதையும், "எனக்கு ஒரு கண் போனலும் அவனுக்கு இரு கண் போகவேண்டும்" என்ற முறையில் ஆந்திரத் தோழர்கள்

சென்னை எங்களுக்கில்லாவிட்டாலும் போகட்டும் டில்லி ஆட்சிக்கு என்ற குறுகிய எண்ணங் கொண்டதையும் விளக்கியுள்ளீர்கள். சென்னையை ஆந்திரருக்குத் தற்காலிகத் தலைநகராக ஏற்படுத்துவதன் மூலம் தரணி ஆண்ட தண்டமிழனுக்குச் சென்னை மீதுள்ள உரிமை குறைத்தே மதிப்பிடப்படும் மேலிடத்தாரால் இந்த உண்மையைத் தங்கள் தலையங்கம் தெற்றெனக் காட்டுகிறது. மொழிவாரி மாகாணம் அமையவேண்டும் கூடிய விரைவில்! உருவாகும் தமிழ் மாகிலத்தில் கேரளத்தின் பெரும் பகுதித் தமிழர்களும், சென்னையும் நிச்சயமாக இணைக்கப்படவேண்டும்! சென்னையிலே நான்கு மொழிவாரி மாகாணங்களும் ஏற்பட்ட பிறகு வடவர் ஆதிக்கத்தால் ஏற்படுகின்ற பொருளாதாரச் சிக்கலையும், சுரண்டல் முறையையும் நம்மை விட ஆந்திரர்களும், மற்றவர்களும் நன்றாக உணர்வார்கள்! அப்பொழுது அவர்கள் எண்ணுவார்கள் "ஆகா! திராவிட இயக்கம் நாட்டிலே பிரசாரம் செய்தது எவ்வளவு உண்மை" என்று! அப்பொழுது நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கை கொடுப்போம்! அப்பொழுது கூறுவோம் நாம் இன்று கூறிக் கொண்டிருப்பது போல. "திராவிடத் தோழர்களே! தேயிலைத் தோட்டத்திலே வேலை செய்யும் நம் மக்களைப் பாருங்கள்! வளமான வாழ்வு பாழாவதைப் பாருங்கள்! வறண்ட ராஜபுதன பாலைவனம் குபேர புரியாவதைப் பாருங்கள் ஏனப்பா இந்தத் தொடர்பு என்று கேட்போம்!" அன்று அவர்கள் உண்மை உணர்ந்து மாசு துடைப்பார்கள். நம் ஒற்றுமை பெருகும்! அதன் முடிவு நம் இலட்சிய பூமி! அந்த நாள் நம் வாழ்விலே விடிவெள்ளி பூத்த நாள்! அது ஏற்பட்டுத்தான் தீரும்.

இரா. ஆ நமசிவாயம்

○●○

தொட்டியம்
22-11.49

நல்ல தீர்ப்பு!

10-11-49 'பொன்னி'' இதழ் கண்டேன். களித்தேன் அதிலுள்ள "வாராய் நெஞ்சே" என்ற கவிதைக்காக. தமிழ் நூல்களுள் சிறந்த தொன்றான "குறுந்தொகை"யின் பல பிரிவுகளையும் ஒன்று சேர்த்து, அதன் தெளிவை இவ்வோரே கவிதையில் அமைத்திருப்பது திறமான கற்பனை! 'கண் சுழலக் கஞ்சாவைத் தின்று விட்டுக் கவியெழுதும் கவிஞன் அவனியொரு காற்சந்தி; வந்த ஆட்களெல்லாம் வழிப்போக்கர் ஆவர், அவள் மட்டும் அழியாத சிலையா என்ன? அவள் போனால் ஆயிரவர் மாதருண்டே! அவனியிலே கிடைக்காத சரக்கா என்ன' என்ற இடங்கள் மேலைநாட்டுப் பிறமொழிக் கவிஞர்களின் தரத்தையும் மீறிச் சென்று விட்டது! சமுதாயத்தில் கவிதையின் பொருளை ஒட்டி எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்து வருதல் வெள்ளிடை மலை, அதனாலேற்படும் கோரவிளைவுகள் தூக்குக் கயிறு போட்டுக்கொள்ளல், பாழுங் கிணற்றில் விழுதல், புகை வண்டி முன் விழுதல் நஞ்சுண்ணல் முதலியன இருதயத்தின் வெடிப்பில், சிந்தனையின் உச்சத்திலெழும் வேதனைகள் காதலர்களின் தற்கொலை நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகின்றன. ஆசைகாட்டி மோசம் செய்யும் தன்மைப் பட்ட ஓர் காதலியைப் பற்றின சிந்தனை காதலனுக்கு ஏற்பட்டு ஏக்கப்படுவதாகச் சித்தரித்துள்ளார். அப்பேற்பட்டவர்களுக்கு "இவர்ந்து வரும் காட்டிற் கேற்ப உனைத்திருத்தி இன்பத்தைப் பருகுதற்கு வாராய் நெஞ்சே" என்று கவிஞர் கொடுக்கும் "நல்ல தீர்ப்பு" இழந்த காதலடைந்தவர்கள் வரவேற்கத் தக்கதாகும்!

வ. க. இராமமூர்த்தி.

○●○

மதுரை
23-11-49

போர் முரசு

எங்கள் பொன்னியின் அட்டைப் படத்தில் வள்ளுவன் முரசு கொட்டுவது போல் வரைந்திருப்பது "வில்லேருழவர் பகைகொளினுங் கொள்ளற்க சொல்லேருழவர் பகை" என்று "வள்ளுவன்" அரசாங்கத்திற்குப் பறை சாற்றுவது போலிருக்கிறது. வள்ளுவன் தன் குறள் முரசால் தமிழ் ஒலியை வையமுழுதும் பரப்பினன் என வள்ளுவன் முரசு கொட்டுவது போலிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆரியத்தை வெல்ல வாகை சூடிப் புறப்பட்டு விட்டனர் என்பதை வள்ளுவன் முரசு கொட்டுகிருன் முகப்புச் சித்திரத்திலே! ஆரியத்தின் சுரண்டற் போருக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தும்பைப் பூவைச் சூடிவிட்டது, என்பதை வள்ளுவன் முரசால் அறிவிக்கிருன் மக்களுக்கு. பறையில் ஒலி கேட்டதும் வெற்றி கொள்ளும் வேட்கையுடையவராய்ப் போர்க்களஞ் செல்வர் எம் வீரர் எனத் திராவிட முன்னேற்றக் கழகம் போர்முரசு கொட்டுகிறது. 'தமிழ் தாழ்த்தப் படுகிறது, உலகான உனது தாய் உயிர்வாதையடைகிருள். உதவாதினியொரு தாமதம், உடனே விழித்தெழு தமிழா!' என கண்ணன் புரட்சிக் கவிஞராகிப் பின் வள்ளுவனுகி என்னே, இல்லே, தமிழர்களை மொழிப்போருக்குப் புறப்படப் பறைசாற்றுகிருர். அவர் வாழ்க! அவர் தம் ஓவியக் கருத்தை வெளியிடும் பொன்னி வாழ்க! உட்பொருளைக் கண்ணுற்ற பின்தான் செங்குட்டுவன் வடநாட்டு ஆரிய அரசர்களை வீழ்த்தப் போருக்குப் புறப்படுகிருர் என வள்ளுவன் பறைசாற்ற அறிந்தேன்.

சு. முனிசாமி

தூத்துக்குடி
21-11-49

உவமை இல்லை

தமிழ் நாட்டின் தலைசிறந்த கலை வளர்க்கும் பத்திரிகையாகிய பொன்னிக்கு இடு இணை எதுவும் இல்லை. பொன்னிக்கு உவமை காட்ட வேறேதுவும் இல்லை. சந்திரனைப்போல் வளர்கிறது என்று சொல்லப்போனுல், சந்திரன் கொஞ்ச நாளைக்குத்தான் வளர்கிறது பின்னர் தேய்கிறது. சூரியனைப் போல் பிரகாசமாக இருக்கிறது என்றுலும், சூரியன்நடுப்பகலில் தொழிலாளர்களை மனவேதனைக்குள்ளாக்கி வெறுப்பைப் பெறுகிறது. தென்றலுக்கு ஒப்பாக என்றுலும் சிற்சில சமயங்களில் தான் தென்றல் வீசி இன்பம் தருகிறது பொன்னி எப்பொழுதும் இன்பம் தந்துகொண்டேயிருக்கிறது. பொன்னியில் வரும் ஓவியங்கள் யாவும் மிகக் கண்கவரும் முறையில் இருக்கின்றன. பார்த்து ரசித்துக்கொண்டே யிருக்கலாம். அவ்வளவு மகிழ்ச்சியூட்டுகிறது. சரி பொன்னியை மலர்களின் மணத்திற்கு ஒப்பிடலாமென்றுல், பொன்னிக்கு இருக்கும் மணம் மலர்களுக்கு இல்லை. மற்றவைகளின் தன்மையை வருணித்து விடலாம். ஆனல் பொன்னியின் பெருந்தன்மையை வருணிக்க இயலாது. எனவே தான் பொன்னிக்கு இணையாகவேறெதுவுமில்லை என்றேன், பொன்னியைப் புது உவமையாகவே கருதுகிறேன்.

சீ. செல்லத்துரை

○●○

பரிசு பெற்ற கடிதம்: ச. வேலுசாமி போத்தனூர். ரூ 5/- அனுப்ப, உரியவர் முழு முகவரி தெரிவிக்க வேண்டுகிறேம



காதல் இறந்த கதை

அகிலன்

முன்னுரை: ஐயா, அம்மா, அன்புள்ள வாசகர்களே, கதையை முழுவதும் ஒரு தரத்திற்கு இரண்டு தரம் படித்துவிட்டுக் 'கதைக்கும் தலைப்புக்கும் என்ன சம்பந்தம்?' என்று என்னைக் கேட்டு வைக்காதீர்கள். 'காதலாவது மண்ணாங்கட்டியாவது! ஒன்றையுமே காணோமே' என்று முணுமுணுக்காதீர்கள். இந்தக் கதையில் காதலும் வருகிறது; மண்ணாங்கட்டியும் வருகிறது. காதல் உங்களையும் என்னையும் போன்ற சாதாரண மனிதருடைய காதல் அல்ல; மனிதத் தன்மைக்குப் புறம்பானவரின் காதல்; புனிதப் பெருமகனின் காதல்! அது இப்படித்தான் இருக்கும்.

அப்புறம் இதில் வரும் மண்ணாங்கட்டிகளும் லேசுப்பட்டவையல்ல; புதைகுழிகளில் 'காதலிகளின்' சவங்களைத் தழுவி மூடும் மண்ணாங்கட்டிக்ள். — கதாசிரியன்.

ஃ ஃ ஃ

இந்தக் காலத்து இளைஞர்கள் சிலர் வழக்கமாக 'நான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை' என்று இரண்டு வருஷங்களுக்கோ அல்லது இரண்டு மாதங்களுக்கோ 'பிகு' பண்ணிக் கொள்வது போல நானும் அப்போது கொஞ்சம்

விம்பு செய்து கொண்டிருந்தேன். சுமார் மூன்று வருஷ காலம் 'பிரம்மச்சாரி வேஷம்' போட்டேன். வேஷம் என்றால் அப்போதைக்கு அது அப்படித் தோன்ற வில்லை. கடைசி வரையிலும் ஒற்றைக் கட்டையாகவே இருந்து இந்த உலகத்தைப் புரட்டி விடுவது என்று தீர்மானம் செய்து கொண்டிருந்தேன். அந்தக் காலத்தில் பலபேர் பலவித யோசனைகள் சொல்லி என்னைப் 'பந்தத்தில் மாட்டிவிடப்' பார்த்தார்கள். அப்படிப்பட்டவர்களில் தொண்ணூறு வயதான என் தாத்தாவும் ஒருவர். கிராமவாசியாகிய அவர் என்னிடம் அவருடைய தாததாவைப் பற்றி ஒரு கதை சொன்னார். அந்தக் கதைதான் இது.

ஃ ஃ ஃ

கன்னங்கரேலென்ற இருட்டு. யுவதிகளின் கருவிழிகளைப் போலவும், அவர்களுடைய விழிகளுக்குக் கோலமிடும் வண்ணக் கருமை போலவும் அத்தனை கருப்பாக இருந்தது அந்த நடுநிசிப் பொழுது. அமாவாசையானதால் அன்றைக்குச் சந்திரன் உதிக்கவும் இல்லை; மறையவும் இல்லை— ஊரை அடுத்து இரண்டுமைல் தூரத்தில் இருந்த தென்னந்தோப்பு மிகவும் பயங்கரமாக இருந்தது. ஒவ்வொரு தென்னை மரமும் ஒரு பேயாக வளர்ந்து தலைவிரித்தாடியது. நூற்றுக்கணக்கான தென்னம் பேய்கள் அந்த காற்றோடு கலந்து கூச்சல் போட்டுக் கொண்டிருந்தன.

தென்னந்தோப்பின் ஒரு மூலையில் இடிந்துபோன ஒரு அரைகுறைக் கட்டிடம். அது பாழடைந்த கோவிலோ, சத்திரமோ, வீடோ தெரியவில்லை. அந்தக் கட்டிடத்தில் ஒரு கருங்கல்லைத் தலைக்கு வைத்துக் கொண்டு முரட்டுப் பேர்வழி ஒருவன் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். ஆள நல்ல வாட்ட சாட்டமானவன். வயதும் அதிகம் இல்லை. இருபத்தைந்துக்குமேல் முப்பதுக்குள் இருக்கும். கருப்புப் போர்வை ஒன்று அவன் தலைக்கடியில் கருங்கல்மேல் மடித்து வைக்கப் பட்டிருந்தது. இடுப்பில் மட்டும் ஒரு நாலு முழத்துணி. மேல் உடம்பில் ஒன்றுமே இல்லை. அருகில் ஒரு பித்தளைச் செம்பும், சூழ்ந்துக் கழியும் மூங்கில் தடி ஒன்றும் இருந்தன. அவன் மடியில் பத்திரமாக நெருப்புப் பெட்டி ஒன்று இருந்தது. அப்போதுதான் புதிய அதிசயமாக அந்தப் பகுதியில் நெருப்புப்பெட்டி உபயோகத்திற்கு வந்திருந்தது.

தென்னந் தோப்பிற்குள் ஏதோ மண்வெட்டியின் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தான் அந்த வாலிபன். கண்களைத் துடைத்துக் கொண்டு நன்றாகப் பார்த்தான். நெஞ்சு 'திக்' கென்றது. ஒருவேளை கனவுதான் காணுகிறோமோ என்று அவனுக்குக் கொஞ்சம் சந்தேகம். நிதானமாக எல்லாவற்றையும் தொட்டுப் பார்த்தான்; நினைத்துப் பார்த்தான் அவன் கனவு காணவில்லை.— அந்தப் பாழடைந்த கட்டிடம், அந்தக் கரிய இருள், அதைப் பிளந்துவரும் அந்த மண்வெட்டிச் சத்தம், அந்தச் சத்தம் பிறக்கு மிடத்தில் தோன்றும் கோரக்காட்சி— எல்லாம் உண்மையே! அவன் அசைய

வில்லை, அப்படியே இருந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கரங்கள் மட்டும் அவனையறியாமலேயே மூங்கில் தடியையும் சூழ்ந்துக் கழியையும் இறுகப் பற்றின.

மண் வெட்டிகள் அசையும் இடத்தில் கொஞ்சமாக நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. காய்ந்து போன தென்னங் கிற்றுகளைக் கூட்டி நெருப்புப் பற்றவைத்திருந்தனர். அந்த வெளிச்சத்திற்குப் பக்கமாக ஒரு உருவம தெரிந்தது; மனித உருவம் ஒன்று படுத்துக் கிடப்பது போல் காணப்பட்டது. இரண்டு மனிதர்கள் வேக வேகமாக மண்வெட்டியால் தரையை வெட்டிக் கொண்டிருந்தனர். 'மங் மங்' கென்று தரை மண்வெட்டியின் கொடுமை தாங்காமல் அலறிக் கொண்டிருந்தது.

இளைஞன் சத்தம் செய்யாமல் எழுந்தான். கருப்புப் போர்வையை முக்காடிட்டுப் போர்த்துக் கொண்டான். கரங்களில் அகப்பட்ட மூங்கில் தடியையும், சூழ்ந்துக் கழியையும் பத்திரமாகப் பிடித்துக் கொண்டு மெதுவாக இருளில் நடந்தான். மண் வெட்டுமிடத்திற்குச் சமீபமாக மரங்களின் பின்னால் மறைந்து மறைந்து வந்தான். கடைசியாக அவன் பத்திரமாக நின்று வேடிக்கை பார்க்க வசதியான ஒரு சிறு தென்னை மரம் கிடைத்தது. அதன் பின்னால் உடலை மறைத்துத் தலையை மட்டும் வெளியே நீட்டி நடப்பதைக் கவனித்தான். எரிந்து கொண்டிருந்த நெருப்பின் அருகில் படுக்க வைக்கப் பட்டிருந்தது ஒரு பெண்ணின் உருவம். உயிருள்ள உடல் அல்ல; செத்துப் போன தேகம்; பச்சைக் கிளி போன்ற வாலைக்குமரி ஒருத்தியின் சவம். கண்கள் பாதி திறந்தவைபோல் இருந்தன. இதழ்களில் புன்னகை மறையாது அப்படியே உறைந்து விட்டது. இறந்துபோன பிணமாகவே அவளை நம்ப முடியவில்லை. ஆழ்ந்த நித்திரையில் கனவு கண்டு கொண்டிருக்கும் கன்னிப் பெண்ணுகவே அவள் அங்கு படுத்துக் கிடந்தாள்.

ஒளிந்து நின்ற வாலிபனின் உடல் ஒரு தரம் குலுங்கி விழுந்தது. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. உற்று அந்தப் பெண்ணின் பிரேதத்தையே நோக்கினுன். பிரேதமா அது? மணவறையில் உட்காரவைக்க வேண்டிய புது மணப் பெண்ணின் கோலத்தில் அல்லவா இருக்கிறுள்!

வாசனைத் திரவியங்களின் மணம் அந்த உடம்பிலிருந்து 'கம கம' வென்று வீசியது. சந்தனம், ஜவ்வாது, புனுகு, அத்தர் அத்தனையும் அதில் கலந்திருந்தன. தலை நிறைய மல்லிகைப் பூ வைத்திருந்தாள். மலர்ந்த குட மல்லிகை; நெற்றியிலே ஜவ்வாதுப் பொட்டு; கண்களிலே கருமை; கூந்தலில் என்னவோ ஒரு விதத் தைலம். நகைகள் மட்டும் அந்த உடலில் ஒன்று கூடக் காணவில்லை. அரக்கு வளைகள் மட்டும் கரங்களை அலங்கரித்திருந்தன.

வாலிபன் யோசனை செய்தான்: வழிபபறிக் கொள்ளைக் காரர்களோ என்னவோ? புது மணமாகிப் போகும் தம்பதிகளில், பெண்ணை மட்டும் நகைகளுக்காகத் தூக்கி வந்து

கொலை செய்திருக்கிறார்கள் போலும்! அப்படியிருந்தால் அக்கரையோடு அவனுக்குக் குழிவெட்டிப் புதைக்கவேண்டிய அவசியம் என்ன? — அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

அதற்குள் அவர்கள் இரண்டுபேருமே தங்களுக்குள் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

"சன்னிதானத்துக்கு என்ன கவலை? ஒரு நாழிப் பொழுது சந்தோஷந்தான் அதுக்கு முக்கியம்."

"நாழிப் பொழுது என்னடா, நாழிப் பொழுது? விநாடிப் பொழுதுன்னு சொல்லு."

"ஆமாண்ணே! கால் நாழித் தினவுக்கு ஒரு பச்சைக் கிளி உசிரைக் குடித்துட்டாண்ணே..."

"ஒரு கிளியா?–டேய், மறந்து போச்சா? தண்ணி வேகத்திலே எல்லாத்தையும் மறந்திட்டியா? இது எத்தினையாவது தெரியுமா?"

"மறப்பேனாண்ணே? மறக்க முடியுமா? இது ஒன்பதாவதில்லே! இந்த உசிரு கட்டையிலே இருக்கிறதுக்குள்ளே, இன்னும் இப்படி எத்தனையோ!"

"நல்ல பொழைப்புடா இது? சே!— சரி, சரி, பேசாமல் காரியத்தைப் பார். பகல்லே பார்த்துப் பேசணும்; ராத்திரியிலே அதுவும்பேசப்படாது."

"பேசினா என்ன அண்ணே? பிசாசுகளைத் தவிர இங்கே ஒண்ணுமே இந்த நேரத்திலே வராதே!"

பிசாசு என்று கேள்விப் பட்டவுடன் மற்றவன் நடுங்கினான். "டேய், பிசாசுகளைப் பத்தி இப்போப் பேசாதேடா! மனுஷன ஆயிரம் பேருவந்தாலும நான் ஒருத்தனச் சமாளிப்பேன். ஆனால் பிசாசுன்னா..."

"நம்ம புதைச்ச எட்டுப் பேரும் இங்கே பிசாசுகளாத் தானே அண்ணே அலைவாங்க? இந்தப் பொண்ணுகூட இன்னிமே..."

"போதுண்டா, நிறுத்து!" என்று பயத்தால் அலறினான் மற்றவன். பிசாசுப் பேச்சைக் கேட்டவுடனேயே அவனுடைய மண்வெட்டி வீச்சுத் தடுமாற ஆரம்பித்தது.

மறைந்து நின்ற வாலிபனுக்கு எல்லாம் மீண்டும் கனவு நிகழ்ச்சியாகத் தோன்றின. வெறுக்கத்தக்க, ஆத்திரமூட்டக்கூடிய கனவு. அவன் பயம என்பதையே அறியாதவன். புலனடக்கத்தாலும், அரிய சாதனைகளாலும் அவன் சாதாரண உணர்ச்சிகளுக்கு அப்பாற் பட்டிருந்தான். அடுத்த விநாடி என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி யோசனை...

இளைஞனின் சூழ்ந்துக்கழி எரிந்து கொண்டிருந்த நெருப்பில் தலைநீட்டியது. குபீரென்று அது பற்றியவுடன் வேகமாக அதை ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு மரத்திற்குப் பின்புறமிருந்து வெளியே வந்தான். வலது கையிலிருந்து மூங்கில் தடி 'படா' ரென்று மண் வெட்டிய ஒருவன் தலையில் விழுந்தது. "ஐயோ!" என்று அவன் கத்திக் கொண்டு குப்புறத் தரையில் சாய்ந்தான். மற்றவன் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

"ஐயையோ! பிசாசுடோய்! கொள்ளிவாய்ப் பிசாசு!..." என்று கூவிக்கொண்டே கால் தரையில் பாவுவதுகூடத் தெரியாதபடி ஓட்டமெடுத்தான். தென்னந்தோப்பைத் தாண்டி அதற்கப்பாலும் வழி நெடுக அவன் ஓடிக்கொண்டிருந்தான்.

அடிபட்டு விழுந்தவனைத் தூக்கி உட்கார வைத்துக்கொண்டு, "சொல்லு! என்ன விஷயம்? உள்ளதை மறைக்கப் பார்த்தாயோ, நீ வெட்டிய இந்தப் புதைகுழியில் உன்னையே போட்டு மூடிவிடுவேன். உண்மையைச் சொன்னால் பிழைத்துப் போவாய்" என்றான்.

அடிபட்ட மயக்கம் தீர்ந்து அவன் நிதானமாய் விழித்துப் பார்த்தான். பக்கத்தில் சாவின் சர்வாதிகாரியாக உட்கார்ந்து தன்னை அதட்டுபவனை ஓரக்கண்களால் நோக்கினான். அவனுக்குக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் போன உயிர் திரும்பி வந்தது.

"நீங்க வந்து சாலையூர்ப் பெரியபண்ணைப் பிள்ளைவாளில்லே?" என்றான்.

இளைஞனுக்கு இதைக் கேட்டவுடன் ஒருமாதிரியாக இருந்தது. உண்மைதான். சாலையூர்ப் பெரிய பண்ணைக்குரிய ஒரே வாரிசான தணிகாசலந்தான் அவன். தணிகாசலத்திற்கு அவன் யாரென்று தெரியவில்லை. தெரிந்திருக்க வழியுமில்லை. ஆனால் வழக்கமாக அவனைப் பலபேர் தெரிந்து வைத்திருந்தார்கள். பெரிய பண்ணைக்காரனென்றால் சுற்று வட்டாரத்திற்குக் கொஞ்சமும் தெரியாமலா இருக்கும்? அதிலும் தணிகாசலத்தைப் பற்றிச் சாலையூரில் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். கிட்டத்தட்ட முப்பது வயதாகியும் அவன் கல்யாணம் செய்துகொள்ளவில்லை. கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை என்று வேறே சொல்லிக்கொண்டிருந்தானும். பண்ணைச் சொத்து முழுவதையும் ஏதாவது கோவில், குளம், அல்லது மடத்திற்கு எழுதி வைத்துவிட்டுச் சாமியாராய்ப் போனாலும் போகக் கூடும் என்று சொன்னார்கள்.

தணிகாசலம் அந்த வேலையாளின் பேச்சைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. "நான யாராயிருந்தால் உனக்கென்ன?—சொல்? இந்தப் பெண் யார்? இவள் எப்படிச் செத்தாள்? இதற்கு மட்டிலும் நேரடியான பதிலைச் சொல். வேறு ஏதாவது பேசினாயோ அப்புறம்..." என்று அவன் தோளைப் பிடித்துப் பலமாகக் குலுக்கினான்.

∴ ∴ ∴

வேலையாள் சொல்லி முடித்த கதையைக் கேட்டபோது தணிகாசலத்தின் மனம் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. பண்பட்ட அவன் உள்ளம் அப்படியே நெகிழ்ந்து விட்டது. அருகில் கிடக்கும பெண்ணின் பால்பொங்கும் முகத்தைக் கண்ணிமைக்காது கவனித்தான். அவளுடைய உதடுகள் பேசுவதற்காக, அவள் அறிந்திருந்த இன்ப துன்ப ரகசியங்களைத் தணிகாசலத்திடம் கூறுவதற்காக, துடிதுடிப்பனவபோல் காணப்பட்டன. சில நாழிகைகளுக்கு முன்பு

டஞ்சணையில் கிடந்த அவள் இப்போது மண்புழுதியில் கிடந்தாள். மல்லிகையின் மலர்க்குவியலிலே புரண்ட அவள் மெல்லுடல் இப்போது முள்ளின் மேல் துவண்டிருந்தது. வாழ்வின் அமிர்தத்தைப் புகட்டி இன்பத்தின் சிகரத்தில் ஏற்றப்பட்ட அவள் மறு கணமே விஷத்திற்கு உண வாகித் துன்பப் படுகுழியில் மீளாத மரணத்தின் நித்திரை யில் தள்ளப்பட்டிருக்கிருள்.

"உனக்கு இடங்களெல்லாம் நினைவிருக்கிறதா?" என்ருன் தணிகாசலம. "இல்லே" என்று அவன் மழுப்பினுலும் இவன விடுவதாக இல்லே.

"வெட்டு: நாம் இருவருமே சேர்ந்து வெட்டுவோம. வெளளி முளைப்பற்குள்ளே. இங்கு ஏற்கனவே புதைக்கப் பட்ட எட்டு உடல்களும் தோண்டப்பட வேண்டும்...... இல்லாவிட்டால் நீ பத்தாவது உயிர்!" என்ருன்.

மண்வெட்டிகள் மும்முர மாக வேலே செய்தன. தரை அவ்வளவு கடினமாக இல்லே. முனனதாகவே வெட்டி மூடப் பட்டிருந்தது ஒரு காரணம். தவிரவும சில தினங்களுக்கு முன்புதான் மழை பெய்து ஓய்ந்திருந்தது.

மண்வெட்டிகளுக்கு ஓய்வு கிடைத்தபோது அங்கே அந்தத் தென்னந் தோப்பின் மையிருட்டில் எட்டு மண்டை ஓடுகள, மரத்திலிருந்து காற் றில் விழுந்த தேங்காய் நெத் துக்கள போல் கிடந்தன. அவற்றை எல்லாம் எடுத்து ஒரு இடத்தில் சேர்த்து விட்டு 'அப்பாடா!' என்று சற்றே ஓய்வு எடுத்துக் கொண்டான தணிகாசலம். வேலேக்கார னுக்கு உடம்பு ஒன்றுமே சரி யாக இல்லே. சுருண்டு விழுந்து விட்டான். காய்ச்சல் வரும் போல் அவன் நெற்றி நெருப் பாய்ச் சுட்டது. அவனே மெது வாக இழுத்துக் கொண்டு போய்ப் பாழடைந்த கட்டிடத் தில் தள்ளிவிட்டுத் தணிகா சலம் திரும்பவும் பழைய இடத் திற்கு வந்தான்.

பொழுது பல பல வென்று விடிவதற்குள் அந்தத் தென் னந் தோப்பில் வெட்டப்பட்ட குழிகளேத் தவிர வேருென்றும் காணவில்லே. கருப்புப் போர் வையால் கட்டப்பட்ட ஒரு பெரிய மூட்டையைச் சுமந்து கொண்டு தணிகாசலம் ஊருக் குள் புறப்பட்டான். மூட்டை கனமாகத்தான் இருந்தது. அதனுடைய பாரம் அவன் முதுகை அதிகமாகப் பாதித் தது. என்ருலும் அவன அதைச் சட்டை செய்யவில்லே. ஊருக்குள் நடந்தான்—பெரிய பண்ணேயின் ஒரே வாரிசான தணிகாசலம், சுமக்க முடியாத பெருஞ்சுமையைச் சுமந்து கொணடு ஊருக்குள் நடந் தான்!

கைலாச வாசலின் — அது தான் அந்த ஊரின் பெயர்—பிர சித்தி பெற்ற ஆஸ்தானத்தின். தலேவாசலே அடைந்தான். காவற்காரனிடம் சாலேயூர்ப் பெரிய பண்ணேயின் பெயரைக் கூறியவுடன் அவன் பயபக்தி யுடன் வழியை விட்டான. ஆனல் அவனுக்கு ஒரே ஆச் சரியம். பெரிய பண்ணேப் பிள்ளேவாளா இப்படித் தாமே ஒரு மூட்டையைச் சுமந்து வரு கிருர்! இருந்தாலும் இருக்கும. சன்னிதானத்துக்குக் காணிக்

கையாக இருந்தால் அதை அவரே சுமந்து வருவதில் தானே உண்மையான பக்தி இருக்கிறது!

தணிகாசலத்தின் வரவை உள்ளே தம்பிரான்களில் ஒரு வர் சன்னிதானத்திடம் வினயத்தோடு அறிவித்தார். சன்னிதானம் அளவுக்கு மீறிய சந்தோஷம் அடைந்தது. முன்னாலேயே சன்னிதானத்துக்குப் பெயரளவில் தணிகாசலத்தைத் தெரியும். சீக்கிரம் ஒரு நாள் அந்தக்கட்டை இங்கே வந்து தம்பிரானாக அடைக்கல மாகப் போகிறது என்பதையும் கேள்விப் பட்டிருந்தது. ஆகை யால் "வரச் சொல்!" என்று உத்தரவிட்டு, தமக்குரிய பீடத்தில் பத்மாசனத்தில் சின்முத்திரையுடன் அமர்ந்தது. ஸ்ரீலஸ்ரீயின்—[வாசகர்கள் மன்னியுங்கள். அதற்குப்பிறகு உள்ள அந்த மாபெரும் சன்னிதானத்தின் நீண்ட அழகிய பெயர், எனக்குக் கதை சொல்லிய என் தாத்தாவுக்கே மறந்து விட்டது]—உருவம் அப்போது தேவலோகமாய்த்தான் இருந்தது.

சர்வாங்கமும் தரையில் படும் படி விழுந்து வணங்கினான் தணிகாசலம். பிறகு எழுந்து பிரசாதம் பெற்றுக் கொண் டான்.

"அப்பனே! யார் நீ? சும்மா தரிசனத்துக்குத் தானே வந்தாய்?" என்று திருவாய் மலர்ந்தருளியது சன்னிதானம்.

"அடியேன் தரிசனத்துக் காக மட்டிலும் வரவில்லை. அடைக்கலமாகவும் வந்து விட்டேன். சைவத்துக்கும் தமிழுக்கும் இந்தக் கட்டையை அர்ப்பணம் செய்ய நினைத்து இங்கே வந்தேன்."

"ரொம்ப சந்தோஷம்; ஏற்றுக் கொள்கிறோம்."

தணிகாசலம் திடீரென்று நிமிர்ந்து ஸ்ரீலஸ்ரீயின் கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

"அடியேனுடைய பாத காணிக்கை ஒன்று இருக்கிறது. ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றான்.

"காணிக்கையா! எதற்கு? உண்மையான அன்பும் பக்தியும் தான் இங்கு காணிக்கை. உள்ளத்தைக் கள்ளமற்றதாகச் செய்து அதையே எனக்குக் காணிக்கையாகக் கொடு. அப்பனே! வேறொன்றும் வேண்டாம்!"

தணிகாசலம் பதில் சொல்லாமல் திரும்பினான். சற்று தூரத்தில் ஒரு அறையில் இருந்த போர்வைமூட்டையைத் தூக்கிக்கொண்டு வந்து சன்னிதானத்தின் எதிரே வைத்தான். பத்திரமாக அவிழ்த்து அதிலிருந்து ஒரு மண்டையோட்டு மாலையை எடுத்தான்—எட்டு மண்டையோடுகளை ஒன்றாகக் கோர்த்த மாலை!

"என்ன இது!" எனத் திடுக்கிட்டது சன்னிதிகள்.

"சிவபெருமானுக்கு இந்த மாலையென்றால் ரொம்பப் பிடிக்கும்; அவருக்கு நேர் வாரிசு தாங்கள் அல்லவா?"—தணிகாசலத்தின் குரல் கடுமையாக மாறியது. "என்ன விழிக்கிறீர்கள்? உங்களுடைய கடுந்தவத்தைக் கலைத்ததற்காக நீங்கள் அளித்த தண்டனையின் சின்னம் இது. உங்கள் பிரமசரியத்தைக் குலைத்ததற்காக நீங்கள்

திருமணம்

செந்தமிழ்ப் பதிப்பகம் தோழர் திரு. தி. ந. பாலகிருட்டிணனுக்கும் — புதுக்கோட்டை சிவானந்தபுரம் திருவாளர் S. கருப்பையா அவர்களின் புதல்வி திரு. பாப்பம்மாளுக்கும் 30-11-49-ம் நாள் மாலை 5-மணிக்குத் திருமண விழா தொடங்கியது. தோழர் கோவை இளஞ்சேரன் அவர்கள்தலைமைதாங்கி விழாவைச் சிறப்புற நடத்திக் கொடுத்தார்கள். தோழர்கள் முருகு சுப்பிரமணியன், அகிலன், டி. கே. சீனிவாசன் ஆகியோர் வாழ்த்துச் சொற்பொழிவாற்றினர்கள். பல நண்பர்கள், வாழ்த்துப்பா, புத்தகம், பரிசு முதலியன வழங்கினர்கள். திருமணம் சீர்திருத்தமுறையில் இனிது நிறை வெய்தியது.

அளித்த தீர்ப்பின் முடிவு இது. —இந்தாருங்கள்" — மாலையை அவர் கழுத்தில் பிடிவாதமாகப் போட்டான்.

"நேற்று உங்களருகில் உறங்கியவள் இதோ, இங்கே உறங்குகிருள். பாருங்கள் அவளை! நினைவுக்கு வருகிறதா?—ஏன்? ஏன் இந்த மிருகத்தனம்? ஏன் இந்த வெறித்தன்மை? கடவுளின் பிரதிநிதியாகிய உங்களுடைய ஸ்பரிசம் பட்ட மலர் வேருென்றுக்கும் பயன் படக்கூடாதா? அல்லது உங்கள் நடத்தையின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் துணிவில்லாத வஞ்சகத்தின் சூழ்ச்சியா இது?"

அந்தப் பெண்ணின் பிரேதத்தை அவர் காலடியில் இழுத்து விட்டான். அப்போது திடீரென்று ஒரு அதிசயம் நடந்தது. ஸ்ரீலஸ்ரீ ஒரு சுற்றுச் சுற்றி அங்கேயே விழுந்து பிணமானர். நெஞ்சு அடைத்து விட்டது அவருக்கு.

ஃ ஃ ஃ

என்னுடைய தாத்தா "போதுமா தம்பி? இதுதான் கதை" என்ருர். அந்தத் தணிகாசலம் தான் அவருடைய தாத்தாவாம்! அப்புறம் நேரே வீட்டுக்கு வந்து முதல் வேலையாகக் கல்யாணம் செய்து கொண்டாராம். கடவுளிடம் அவருக்கு அபார நம்பிக்கை உண்டாம். ஆனல் கல்யாணம் செய்து கொள்ளாதவர்கள் தான் கடவுளின் வழியை அதிகமாகப் பின்பற்றமுடியும் என்ற பேச்சை அவர் நம்புவதில்லையாம்.

"லட்சத்தில் யாராவது இரண்டொருவர் வாழ்வில் முக்கிய லட்சியத்திற்காகப் பிரமசாரிகளாய் இருக்கலாம். அவர்களே விரும்பி ஏற்றுக்கொள்ளுகிற விஷயம் அது. கடவுள் பெயரைச் சொல்லிக் கட்டுப்பாட்டினல் புலன்களை வீம்புக்கு அடக்க முடியாது. கடவுளை நினைத்து மந்திரங்களை ஜபிப்பதைவிட, அவர்களுக்குக் கல்யாணமாகாத குறையை நினைத்து ஏங்கத்தான் பொழுது சரியாக இருக்கும்!" என்ருர் தாத்தா. அப்புறம் அந்த ஆதீனத்தின் நிலைபற்றியும் சொன்னர். அதற்கப்புறம் அது கலைந்துபோய்விட்டதாம். கைலாசவாசல் என்ற அந்தக் கிராமமே இப்போது கிடையாதாம்—போதுமா இந்தக் காதல் கதை?

டர்பன் ச. மு. பிள்ளை

இலங்கை வேந்தர்

இலங்கை நாடு இன்று தனிப்பட்ட ஒரு தீவாயிருக்கிறது. அதன் ஆட்சி வேறாக இருப்பதுடன், அதற்குரிய மக்களாகச் சிங்களவர்கள் இருந்து வருகின்றனர். இதற்குத் தமிழில் கடைச்சங்க காலத்திலிருந்து ஈழ நாடு என்று பெயர். கி. மு. 2378–ம் ஆண்டு வரை இலங்கை தமிழகத்தோடு இணைந்த நிலப்பரப்பாகவும், அந்நிலப்பரப்பு தமிழ் நாடாகவுமே இருந்தது. தென்கோடியிலிருந்த குமரிமலைதான் தமிழ் நாட்டின் தெற்கெல்லையாயிருந்து வந்தது. அதன்பின் ஏற்பட்ட கடற்கோள்கள் மூன்றால்தான் இலங்கை தனித் தீவாகப் பிரிந்ததுடன், தமிழ் நாட்டின் தெற்கெல்லையும் குமரி முனையில் வந்து முடிந்தது.

முதற் கடற் கோளால் இலங்கை தனித் தீவாகப் பிரிந்த பின்னரே, அத்தீவு இராவணன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இராவணன் என்ற பெயர் இறைவன் என்ற சொல்லின் சிதைவேயாகும். தமிழர்கள் தங்கள் மன்னரை இறைவர் என்று அழைப்பது வழக்கமாயிருந்தது. "இறைவன" என்ற ஒருமைப் பதம், ஆரியர்களால் ஒழுங்காக உச்சரிக்கக் கூடாமற் போய், "ராவண்" என்று உச்சரிக்கப் பட்டு, மீண்டும் தமிழ்ச் சாயலில் "இராவணன்" என்று மருவி வந்து விட்டது என்னும் உண்மையை, உக்கிசர்க் கார்காலேஜ் வங்காளச்சரித்திர வல்லுநர் திரு. நிரிபேந்திரநாத் குமார்தத் என்பார் "இந்தியாவை ஆரிய மயமாக்குதல்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இராவணன் ஆரிய சூழ்ச்சியால் கொல்லப்பட்ட பின், தமிழர் நாகரிகம் குன்றி, யாக்கர், நாகர், என்ற திராவிட மக்கள், இலங்கையில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

எனவே, இராவணன் ஓர் அசல் தமிழ் மன்னனாக இருந்து இலங்கையை ஆண்டு வந்தான். இராவணனுக்குப் பிறகு கி. மு. 543-ம வருடம வரைக்கும் இலங்கை நாடு சுயேச்சையாக யாக்கர், நாகர் என்ற பழந் திராவிட மக்களால் ஆளப்பட்டு வந்தது. அந்தக் காலத்தில், ஆரிய அரசனாகிய இராமன் இலங்கை மீது படையெடுத்து, வீடணன் என்ற இராவணன் தம்பிக்குப் பதவி ஆசை காட்டித் துரோகியாக்கி, அவன் செய்த துரோகத்தின் காரணமாக இலங்கையை வென்று கொண்டது முதல் இலங்கையில் ஆரியர்

பொதுக்கூட்டம்

புதுக்கோட்டை 30-11-49 அன்று மாலை 7-மணிக்குத் தோழர் தே. நாராயணன் அவர்கள் தலைமையில் திலகர் மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டம் தொடங்கியது. தோழர்கள் முருகு சுப்பிரமணியன், க. ஞானமுத்து, டி. கே. சீனிவாசன் ஆகியோர், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துவிடலாமென்று காங்கிரசார் கருதினால் அது அவர்களுக்கே கெடுதலாய் முடியுமென்பதை வலியுறுத்தியும், திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டின் நோக்கத்தையும் எடுத்துப் பேசினர், பொதுமக்கள் ஆரவாரத்துடன் இரவு 9-30 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

கள் பிரேவேசிக்கத் தொடங்கி, ஆரியநாகரிகத்தைதபரப்பினர். இந்த ஆரியக் கலப்பு ஏற்பட்ட பின் விஜயன் என்ற பாண்டிய நாட்டு வீரன் இலங்கை நாட்டின் இறைவனுனன். அவன் காலத்தில்தான் அங்நாட்டில் சிங்கள வமிசமென்ற ஒரு வமிசம் தோன்றியது.

விஜய மன்னனுக்குப் பின் 821 வருட காலம் வரை விஜயன் பரம்பரையினர் 15 பேர் வரிசைக் கிரமமாக ஆட்சி புரிந்து வந்தார்கள். இந்த ஆட்சிக்குப் ''பெரிய அரசாட்சி'' என்று பெயர். இந்தக் காலத்தில்தான் சிங்கள சமூகம் வளர்ந்தது. ''சிங்கள சமூகத்திற்குத் தனிப்பட்ட சரித்திரமோ கலைகளோ கிடையா. விஜயனும் அவன் சகாக்களும் இலங்கை வருவதற்கு முன், இலங்கையில் சிங்கள வம்சமென்று ஒரு வம்சமே இருந்ததில்லை'' என்று ஜான் ஸ்டீல் என்ற பெயர் பெற்ற சரித்திராசிரியர் எழுதுகிறார்.

மகாசன் என்ற மன்னன் இலங்கையை ஆண்டவரை விஜயன் வமிசஆட்சி யெனவும் அதற்குப் பெரிய ஆட்சிஎன வுமகூறபபட்டது. அதன பின் கீர்த்தி ஸ்ரீ மீவான் என்னும் அரசன் கி. பி 278 யிலிருந்து ஆளதொடங்கி, அவன் வழி 120 அரசர்கள் இலங்கையை கி. பி. 1799 வரை ஆண்டனர். இந்த ஆட்சியின இறுதி அரசர்தாம் ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கன் என்பார். இவரைப் பற்றியதுதான் இப்போது சிலர் நடத்திவரும் கண்டி ராஜா எனனும நாடகமும். இந்த 120 அரசர்கள ஆட்சி சிறிய ஆட்சி என்று கூறபபட்டுள்ளது.

இந்த விவரங்கள் சிங்களவர்களின முக்கிய நூல்களுள் ஒன்ருகிய ''மகா வமசா'' என்னும் நூலில் அடங்கியிருக்கின்றன. இந்நூலின முன்பாகம்-பெரிய ஆட்சி-'டாட்டு' என்ற சின அரசனுடைய மாமனுகிய 'மகானமோ' என்பவரால் இயற்றப்பட்டது. இதனை டர்னர் என்பார் 1836-ல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். சிறிய ஆட்சியாகிய 120 அரசர்கள் ஆட்சியைப் பற்றியது இரண்டாம் பாகம எனப்படும். இவ்விரு பாகத்திலுமாக 174 அரசர்கள ஆட்சி குறிப்பிடப பட்டுள்ளது இவ்வரசர்கள் 2392 வருடம் இலங்கையை ஆண்டிருக்கின்றனர். இவர்களுக்குப பின் 1800 முதல் இலங்கை ஆங்கிலேயர் ஆட்சிக்குட் பட்டு விட்டது.

உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு



19 சீதாலட்சுமி

மதுரையில், ஒரு தமிழ்த்தினப் பத்திரிகைக்கு நிருபராக இருந்த நேரம் அது. அந்தப் பத்திரிகைக்குக் காதல் செய்திகள், கன்னிப் பெண்களைக் கடத்திச் சென்ற செய்திகள், வீதியில் சென்றவனை விபசாரத்திற்கு அழைத்த விசாலாட்சியின் கதை ஆகியவற்றைத் திரட்டித் தருவது என் வேலை. அந்த முறையில் எனக்குப் பல இடங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. நான் திரட்டிக் கொடுத்த செய்திக் குவியல்களில், சீதாலட்சுமியின் கதை தான் மிகவும் சுவையானது. இதை அப்பத்திரிகை வெளியிடவும் மறந்து விட்டது. ஆகவே உங்களிடம் கூறுகிறேன்.

ஃ ஃ ஃ

மதுரையிலே செக்கடித் தெரு என்றால் எப்படிப் பட்டது என்று 'வில்ஸ்சிகரெட்டு' முதல் 'அசோகா சுருட்டு' வரைக்கும் நன்றாகத் தெரியும்! மைனர்கள் பவனிவரும் இடம்! மாஜி மைனர்கள் பவனிவந்த இடம்! அழகு, பிறர்கண்டு அனுபவிக்கத்தான் இருக்கிறது என்பதை நிரூபிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்ட ஒரு சில பெண் திலகங்கள் குடியிருக்கும் சௌகார் பேட்டை அது! பரத்தைகள், பாவிகள் என்று பாமர மக்கள் கூறுவதுண்டு! 'பணம் பிடுங்கிப் பேய்கள்' என்று படுத்தெழுந்த அசதிகள் கூறும். ஆனால் ஆரம்பகால உணர்ச்சி வேகங்களுக்கு அவர்கள் என்றும் ஏழாவது சொர்க்கத்திற்கு வழிகாட்டும் இன்ப வல்லிகளாகவே காணப் படுகிறார்கள்.

'செக்கடி'யின் மார்க்கட் நிலவரம் என்றைக்கும் மந்தமானதில்லை. நளினமான சரக்குகள்! எனவே நல்ல விலை! 'மலிவுப் பதிப்பு'கள் கிடையாது. ஓடியலுத்த உருவங்கள், கைவண்டிக் கந்தன், மூட்டை சுமக்கும் முத்தன் முதலியோர்கள் மட்டுமே நடமாடும் இந்திரலோகம் தனியே உண்டு! பற்பல ரோகங்கள், சீழ்வடியும் சின்னங்கள், சிரிப்பதாக நினைத்துக் கொண்டு, இளித்து நிற்கும் ஒடிசல்கள் அங்கு ஏராளம்.

ஆனால் செக்கடிச் சிங்காரத் தோட்டம் அப்படிப் பட்டதல்ல. உயர்ந்த வகுப்பு டிக்கெட்டுகளே விற்பனை செய்யப்

படும். அதிலும் சீசன் டிக்கட்டு கள் கிடையாது. மாலை நேர மானவுடன், அந்த மனோகர வல்லிகள், மோட்ச சாம்ராஜ் யத்திற்குச் செல்ல விரும்பும் மோகனை எதிர்நோக்கியிருப் பார்கள். ஈக்கள் விழுமென்று தெரியாமலா சிலந்திகள் வலை பின்னுகின்றன?

தினசரி ஒவ்வொரு வீட்டி லும் குறைந்தது மூன்று ஆட் டங்கள் நடைபெறும். அதுவே அவர்களுக்குப் போதுமான 'வசூலை'க் கொடுத்துவிடும். எனவே, அங்கு 'மாட்னிஷோ' கிடையாது.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற பழமொழிப் படி, அங்கே புதுச்சரக்குகளும் அவ்வப்போது இறக்குமதி செய்யப்படும்! கொள்முதல் அதிகாரிகள் நாலாபக்கமும் சென்று நயம் சரக்காகப் 'புக்' செய்து கொண்டு வருவார்கள். சொந்த ஊரைவிட்டு, வழி தெரியாமல்வந்துவிட்டவனிதா ரத்தினங்கள், அடுத்த வீட்டு ஆடவனை, ஆண்டவன் என்று கருதிக் கொண்டு, உற் றார் பெற்றோரை விட்டு, ஓடி வந்த உத்தமிகள், இன்னும், தள்ளாடிப் போன கிழங்கட்டு வாழ்க்கைப் பட்டுச "சுகம் எங்கே? எங்கே?" என்று தேடி, அலுத்துப் போய் வரும் ஆண டாள்கள், தப்பித் தவறி, தெரிந்தோ தெரியாமலோ, பஸ் ஸ்டாண்டுகளிலும், ரயில் நிலையங்களிலும், நின்று கொண்டு, கெண்டை விழி வீசிக் கொண்டிருக்கும் பொழுது, ஆபத் பாந்தவர் களாகிய நமது ஆண்டாள் புரத்துக் கொள்முதல் அதிகா ரிகள், அண்டையில் நெருங்கி, ஆறுதல் கூறி, செக்கடித் தெருவுக்கு அழைத்து வரு வார்கள்!

அடிக்கடி, உருப்படிகளைப் புதுப்பித்துக் கொள்வதும் வாடிக்கைக்காரர்களின் நன் மையைக் கருதித்தான். 'புதுசு' கள் புகுந்தவுடன், 'பழசு'கள் இந்திரலோகத்தை நாடவேண் டியது தான்.

செக்கடியைப் பற்றிய செய்தி விமர்சனம் இத்தோடு போது மென்று கருதுகிறேன். இனி, நாம் எடுத்துக்கொண்ட சீதா லட்சுமியைக் கவனிக்கலாம்.

மதுரை நீதி மன்றத்திலே வரும் பல வழக்குகளில் விபச் சாரம் செய்ததாக — செய்ய முயன்றதாக—செய்ய அழைத் ததாக—இன்னும் பல தினுசு களில் — வழக்குகள் வரும். தினந்தோறும், அபராதம் செலுத்தும், அகல்யாக்களை யும் சிறைக்குச் செல்லும் சிந் தாமணிகளையும் காணலாம்! ஒரு நாளைக்குக் குறைந்தது நாலைந்து வழக்குகள் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப் படும். அப்படி வந்த வழக்கு களில் ஒன்றுதான் தெருவில் சென்ற ஒருவனை விபச்சாரத் திற்கு அழைத்ததாகச் செல்வி சீதாலட்சுமியின மீது எழுந்த தாகும்!

பிறமாதர்களை நெஞ்சத்தால் நினைத்தாலும் அவளோடு விபச்சாரம் செய்ததற்குச் சமம் என்று உபதேசம் செய்யப் பட்ட நாட்டிலும் சரி, பிறன் இல் விழையாதே என்று பேசப்படும் நாட்டிலும் சரி, வியாபாரஸ்தலங்கள் அமைந்திருப்பது போல், விபச்சார விடுதிகள் அமைந் திருக்கக் காரணமென்ன?

பலகாரணங்கள் கூறலாம்-- பரம்பரை வார்சுகள், அரைப் பட்டினிகள், பொருத்த மில்லாத திருமணங்கள்—இப்படிப் பலப்பல. ஆனால் ஆடவர்கள்?

பொருத்த மில்லாத மணமும் அவர்களுக்குப் பொருந்தலாம். ஆனால் திருமண மாவதற்கு முன்பே "இன்பரகசியத்தை"க் காணத்துடிக்கும் இளங்காளைகள் பல உண்டு. வெளியூர்களுக்குச் சென்ற பொழுது வேதனையைத் தாங்க முடியாத சிமான்களு முண்டு. இன்னும் கௌரவத்திற்காகக் 'கிப்' வைத்துக் கொள்வோரு முண்டு.மேலும் அம்பலத்துக்கு வராத அற்புதங்கள் வேறு. பக்கத்து வீட்டுப் பழக்கம், அடுத்த வீட்டு நட்பு, எதிர் வீட்டு வசதி—இப்படிச் சில காதும் காதும் வைத்தாற் போல நடந்து வரும். இவையெல்லாம சில்லறை விஷயங்கள்!

அடக்க முடியாத ஆசை-- கட்டுக்கு மீறிய காமம்—வெறியின் வேதனையைத் தாங்க முடியாத ஆண்களும், அதேரகப் பெண்களும் விபச்சாரத்தை விருமபுகிறார்கள்! அது அவர்களுக்கு நிலாச்சோறு. அந்தவகையைச் சேர்ந்தவள் தான் சிதா!

வழக்கு ஆரம்பமாயிற்று! விசாரணைக் கூண்டிலே சிதா கொண்டு வந்து நிறுத்தப் பட்டாள். உள்ளத்திலே எத்தனை ஆழமான புண்கள் உள்ளன என்பதை அவள் முகத்தில் இருந்த புண்கள் பறைசாற்றின. நீதிபதி அவளை ஏற இறங்க ஒரு முறை பார்த்தார். முதலில் குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டது. பிறகு சாட்சிகள், போலிஸ் புலன்கள் முதலிய சடங்குகள படிப்படியாக நிறைவேற்றப்பட்டன. கடைசியில் நீதிபதி, "நீ ஏதாவது கூறவேண்டி யிருக்கிறதா?" என்று சிதாவை நோக்கிக் கேட்டார்.

அவள் பதில் சொல்லவில்லை. நீண்டதோர் பெருமூச்சு விட்டாள். சோகமும் ஏக்கமும் கலந்த வேதனை உள்ளத்திலிருந்து வெளிவந்த பெருமுச்சு! அந்தப் பெருமூச்சுக்குள ஒரு பெரிய 'ராமாயணம்' அடங்கி இருக்கிறது என்பதைப் பிறகுதான் நான் தெரிந்து கொண்டேன்.

நீதிபதி அவளுக்கு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை தந்தார். வறண்டதோர் சிரிப்பை, அவ்விடத்திலே, சிந்தி விட்டு, சிறைக்குச் செல்லச் சித்தமானாள். நான் 'நிருபர்' என்ற முறையில் அவளை அணுகினேன். வழக்கமான, வாய்ப்பாட்டுப்பாடி வாழ்க்கை வரலாற்றைக் கேட்டேன்

சொல்லித் தெரிந்து கொள்ளும் நிலையில் இல்லை அவளுடைய வரலாறு. ஆகவே அவள் எழுதிக் கொடுத்ததை அப்படியே தருகிறேன் உங்களுக்கு! படியுங்கள் மேலே!

"என் பெயர் சிதா! ஐம்பெரும் பத்தினிகளில் ஒருத்தி என்ற நினைப்பிலேயோ அல்லது வேறு எதனாலோ என் பெற்றோர்கள் அப்பெயரை எனக்குச் சூட்டினார்கள் என்று தெரியாது. ஆனால் எனக்கும ராமாயணத்தில் வரும் சிதைக்கும் ஒருசில ஒற்றுமைகள் இருக்கத்தான் செய்தன.

"சிறுவயதில் நான் மிகவும் செல்லமாக வளர்ந்ததாக

அப்பா அடிக்கடி சொல்வார். அந்தச் செல்லம் நான் பருவ மடைந்த பின்னர் எனக்குக் கிடைக்கவில்லை. ஏதோ ஒரு உணர்ச்சி என் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருந்தது. சிட்டுக் குருவியைப் போல மனம் சிறகடித்துக் கொண்டிருந்தது. பருவமடைந்த பெண்கள் படும் இன்பவேதனை! இது யார்க்கும் இயல்பு என்று கூற லாம்! ஆனால் பக்கத்து வீட்டுப் பரிமளம, அடைகாக்கும் கோழியைப் போல் வீட்டுக் குள்ளேயே அடைந்து கிடக்க என் கண்கள் மட்டும் வீதியில் மேய்வானேன்?

"ஆனால் கல்யாணமாகும் வரைக்கும நான் வீட்டில் நாணயமாகவே இருந்து விட்டேன். தப்புத் தண்டாவான காரியங்கள் ஏதும் நடைபெற வில்லை. வீதியைப் பார்ப்பதும் இரவில் வேதனையை அணைத்துக் கொண்டு தூங்குவதுமாக என் கல்யாணம வரைக்கும் காலத்தைக் கடத்தி விட்டேன். கல்யாணமும், ஒரு சுபயோக சுபதினத்தில் நிறைவேறியது.

"என் கணவன் பெயர் ராம கிருஷ்ணன, சீதைக்கு ராமன் கிடைத்தது போல! பெரியோர் களால் நிச்சயிக்கபபட்டது எங்கள் திருமணம். புரோகிதர் களால் பொருத்தம் பார்க்கப் பட்டது. நேரப் பொருத்தம, இடபபொருத்தம், பெயர்ப் பொருத்தம, வயதுப் பொருத்தம எல்லாம் பொருத்த மாகவே அமைந்து விட்டன. ஆனால் அவர்கள் கண்டறிய முடியாத 'பொருத்தம்' தான சரியாக அமையவில்லை! பாவம அதற்கு அவர்கள் தாம் என்ன செய்வார்கள்!

"பூமியின் அடிப்பரப்பிலே இன்னமும் நெருப்புக் குழம்பு ஓடிக் கொண்டிருப்பதாக நான் பூகோள பாடத்தில் படித்திருக் கின்றேன். ஆனால் அதை நாம் நேரில் பார்த்ததில்லையல்லவா? அதைப் போல என் உள்ளத் திலே ஓடிக் கொண்டிருந்த 'ஆசை' யென்னும் தீக் குழம்பை—விரக வேதனையை—வெறியின் வேகத்தை யாரும் அறியவில்லை! ஏன், என் கணவ ராலேயே அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதை என் முதல் இரவிலேயே தெரிந்து கொண்டேன்.

"முதல் இரவு பலருக்கு இன்ப இரவாகவும், மோகன இரவாகவும் அமைந்திருக்க லாம் ஆனால் என்னைப்பொறுத் தமட்டில் அந்த இரவு வெறும் 'முலாம் பூசிய' இரவாகவே முடிந்தது. இன்பத்தின் சாய லைக் கூட நான் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் என் கணவரின் நிலை எப்ப டியோ! ஒருவேளை அவர் இன் பத்தின் உச்சியைக் கூடக் கண்டிருக்கலாம்! பாவம்! இரண்டே—நிமிஷத்தில், ஐந்து மைல் ரேஸ் ஓடிவந்தவரைப் போல இளைத்துப் போய் அயர்ந்துவிட்டார். ஆனால் அதற்காக நான் வேதனையில் வெந்து சாவதா? விரகதா பத்திற்கு என்னை, நானே பலி யாக்கிக் கொள்வதா?

"முடியாது என்று அந்த இரவிலேயே முடிவு செய்து விட்டேன். எத்தனை நாள் இந்த அசதியோடு போராடி னாலும இன்பத்தின் முதற் படியைக்கூட என்னால் அடைய முடியாது. பெண்களின் ஆசை வேகத்தைத் தணிக்

கும் அளவுக்கு அவர் திராணியற்றவர். உருவத்திலே அவர் எனக்கு ஈடாக இருந்த போதிலும், உணர்ச்சி வேகத்தில் எனக்குக் கொஞ்சமும் ஈடாக மாட்டார்

"பூமியின் அடிப்பரப்பிலே ஓடும் அக்கினிக் குழம்பு எப்படி எரிமலை வழியாக வெளிப்படுகிறதோ, அதைப்போல, என் உணர்ச்சி வேகம்—விரகத்தீ—ஒரு எரிமலை வாயை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. ஏனென்றால், அவர் மாதத்திலே, மூன்று நாட்கள் என்னோடு சயனிப்பார். பாக்கி நாட்களில் அவரது படுக்கை வெளியே கிடக்கும்! இருட்டறையில் நான்! இடையிலே என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கும் மரக்கதவு! எந்த இல்லற நன்னூலைப் படித்துவிட்டு இந்த முறையைக் கையாண்டாரோ எனக்குத் தெரியாது. ஆனால் முடிவு என்ன தெரியுமா?

"இராமாயணத்திலே சீதையின் அழகிலே சொக்கிப்போய், இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றானும்! நானோ ஒரு இராவணனுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். காத்து அதற்காக, "இராவணன் வருவாரோடி" என்று இசைபாடிக் கொண்டிருக்கவில்லை. உடனே காரியத்தில் இறங்கினேன். இனிப்புள்ள இடத்தில் ஈக்கள் மொய்க்காமலா போகும்? பார்வை என்னும் சர்க்கரைப் பாகைத் தெளித்தேன். புன்சிரிப்பைத் தூவினேன். எத்தனையோ ஈக்கள்! எத்தனையோ வண்டுகள்! என்னைப் போலவே பல உணர்ச்சி வேகங்கள்! ஆனால் அவற்றில் பல, மதுக் கிண்ணத்தின அருகில் வருவதற்குள் மயங்கிக் கிறுகிறுத்துப் போய் விட்டன! ஒருசில கிண்ணத்தில் விழுந்து மாண்டன! மீதி, மருண்டோடின!

"சினிமா, நாடகக் கொட்டகை, கோயில், குளம் எங்கும் என் வலையைப் பரப்பியிருந்தேன். சிங்காரமான வலை! பட்டுப் பூச்சியென்று பாய்ந்து வந்தனர் பலர். ஆனால், நானோ, பசியோடிருக்கும் சிலந்தியாயிருந்தேன!

"குடும்பத்தில் இருந்து கொண்டே இத்தனை கூத்துக்களையும் நடத்தினேன. குருட்டு மாமியாரைத தட்டிக் கழிப்பது அவ்வளவு கஷ்டமல்ல. என் கணவர்தான, பாதிராத்திரிக்கு மேல் பட்டினத்தாராகி விடுவாரே! பிறகு என்னுடைய வேட்டைதான்! ஆனால் அக்கம பக்கத்து அமமாமிகள், தங்கள் வம்பளப்பிலெ வதந்தியாக என் விஷயத்தைக் கிளப்பிவிட்டு, பிறகு பக்க மேளத்தோடு வாத்யக் கச்சேரியே ஆரம்பித்து விட்டார்கள்!

"பிறகு கேட்கவேண்டுமா? அம்மாவும்மகனும் குசு குசுவென்று பேசிக் கொண்டார்கள். பிறகுஒருமுடிவுக்குவந்தவர்கள். போலச் "சீதா, நீ கொஞ்ச நாளைக்கு உன பிறந்தகததிலே இருந்துட்டுவா ஊரிலேஒன்றை ஒனபதாகத்திரித்துப பேசுவார்கள். பொல்லாத உலகமிது!" என்றார் அந்த ஏதுங் கேட்டவர்.

(அடுத்த இதழில் முடியும்)



எண்ணம் யாதோ?

வண்டினங்கள் மிரண்டிருக்கும் மானினங்கள்
　　பயந்திருக்கும் வாள்வேல் அம்பு
கண்டிருந்தால் கூர்மழுங்கிப் போயிருக்கும்
　　நஞ்சுடைய கண்கள் என்றன்
செண்டுநிகர் மெல்லிதயம் தனைத்துளைத்தே
　　காதலெனும் கீறல் தன்னை
உண்டுபண்ணிச் சென்றதனை ஆற்றுமெண்ணம்
　　அக்குமரிக் குண்டோ, யாதோ?

முழுமதியும் நாணத்தால் விரைந்தோடி
　　முகிலுக்குள் முகம றைக்கும்
செழுமையுள தாமரையும் திகைத்துப்போய்
　　ஆழ்ந்திருக்கும் சேற்றுக் குள்ளே!
அழுதஉளம் சிரித்துமகிழ்ந் தார்ப்பரிக்கும்
　　அன்னவளின் முகத்தைக் கண்டே
எழுதவொண்ணா ஓவியத்தை எழுதிவிட்டேன்
　　நெஞ்சில்அவள் எண்ணம் யாதோ?

மின்னலிடை வெட்டும்விழி இன்பமது
　　துளிர்க்குமிதழ், விம்மும் மார்பு!
என்னவென்று கூறிடுவேன் காதலெனும்
　　வெள்ளத்தில் இறங்கி விட்டேன்.
கன்னிமனம் எப்படியோ? காளையெனைக்
　　கரைசேர்க்கும் கருத்தும் உண்டோ?
இன்னுயிரைக் காப்பாளோ? சாகத்தான்
　　விடுவாளோ? எண்ணம் யாதோ?

— தமிழரசன்

காணோம்



வண்டுவரும் சோலையிலே தினந்தோறும் என்றன்
வள்ளிவரும் வேளையிலே வந்திருந்து வழியில்
கண்டுவரும் காட்சிகளை நினைவுகளாய் மாற்றி
காதல்வரும் நெஞ்சினிலே கட்டிவைத்தே அன்னாள்
கொண்டுவரும் இதழமுது குடித்தின்பம் கொள்ளக்
கொஞ்சிவரும் கோதைக்குக் கூறிமகிழ்ந் தின்பம்
உண்டுவரும் போதொருநாள் வாழ்க்கையிலே துன்பம்
ஒட்டிவரும் என்பதுபோல் கண்மணியைக் காணோம்!

சூடிவரும் மலர்த்தேனைச் சுவைத்துவரும் வண்டைச்
சுமந்துவரும் கூந்தலினைச் சொருகவரும் கையை
நாடிவரும் தும்பியினம் நறுமலரென் றெண்ணி
நகைத்துவரும்; வளையொலியால் நகர்ந்துசெலும் மீண்டும்
ஓடிவரும் கண்மலரில் உருள்விழியை வண்டென்
றுசாவவரும் சோலையிலே கோதையுடன் நானும்
கூடிவரும் போதொருநாள் வாழ்க்கையிலே துன்பம்
கூடிவரும் என்பதுபோல் கண்மணியைக் காணோம்!

கூம்பிவரும் ஆம்பலிடம் கொஞ்சிவரும் தென்றல்!
கொத்திவரும் குருகஞ்சிக் குதித்தோடும் மீன்கள்!
தேம்பிவரும் தாமரைமுன் சிரித்துவரும் நிலவு!
திறந்துவரும் செவ்விதழைச் செக்குமுத மாக்கே
சோம்பிவரும் என்னுள்ளத்தில் சுவைவெள்ளம் பாய்ச்சச்
சோலைவரும் கோதையுடன் காதலின்ப நெறியை
ஓம்பிவரும் போதொருநாள் வாழ்க்கையிலே துன்பம்
ஒட்டிவரும் என்பதுபோல் கண்மணியைக் காணோம்!

— வெ. குருசாமி

எஜமானி

— வ. சம்பந்தன் —



[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

அவளுக்கு நன்றாக ஞாபக மிருக்கிறது. அது நடந்து ஆறுமாதமாகி விட்டது. ஆனால் அவளால் மறக்கமுடிய வில்லை. ஒரு நாள் - இரவு மணி ஏழுதான் ஆகியிருந்தது. ஏதோ எடுபபதற்காகச் சாமான் அறைக் கதவைத் திறக்கும் பொழுது, சமயம் காத்துக் கொண்டிருந்த தேள் ஒன்று நன்றாக மாட்டி விட்டது அவள் கையில். துடியாய்த் துடித்துப் போனாள் புவனா. வலி தாங்க முடியாமல் துடித் தாள். நல்ல காலம் வீட்டில் எல்லோரும் இருந்தார்கள். சந்திரசேரன் மாடி அறையில் உட்கார்ந்து படித்துக் கொண் டிருந்தவன் — சப்தத்தைக் கேட்டு ஓடி வந்தான். அறைக் குள் ஓடித் தேள்கடி மருந்தைக் கொண்டு வந்து — கொட்டிய இடத்தில் வைத்துத் தண் ணீர் கொஞ்சம் விட்டான். சில நிமிடங்களில் வலி சற்றுக் குறைந்திருந்தது. "இப் பொழுது எப்படி இருக்கிறது, மாமி?" என்று புவனாவின் கையை லேசாகப் பிடித்துக் கொண்டே — ஆர்வத்துடன் கேட்டான் அவன். தேள் கொட்டின அதிர்ச்சியை விடப் பெரிய அதிர்ச்சி—அவன் தன் கையைத் தொட்டுத் தடவிய பொழுது ஏற்பட்டது அவ ளுக்கு. இளமை பொருந்திய ஆணின் ஸ்பரிசம் அவளு டைய சிந்தனையைத் தூண்டி விட்டது. என்னவோ விவரிக்க முடியாத ஒரு உணர்ச்சி—ஒரு உத்வேகம்—அவள் மனதிலே தோன்றியது. ஆனால் இதை யாரிடம் வாய்விட்டுச் சொல்ல முடியும் அவளால். காட்டில் காயும் நிலவு அவள். ஆனால் அதற்காக உணர்ச்சி — உத் வேகம் கூடவா இல்லாமல் போய் விடும்? அவள் மனம் என்னவெல்லாமோ நினைத் தது அதற்கபபுறம். தினம தன்னைத் தேள் கொட்டக் கூடாதா என்று கூட நினைத் தாள் அந்தப் பேதை. தொட் டுத் தாலி கட்டின புருஷர்— தன்மேல் உயிரையே வைத்தி ருப்பவர்—அவருக்குத் துரோ கம் செய்யவா? சே! கேவலம் தன் மனதைக் கட்டுப் படுத்த முடியாதவள் ஒரு பெண்ணா என்று திடப்படுத்திக்கொள்ள முயற்சிப்பாள். ஆனால் சிரித் துச் சிரித்துப் பேசும் சேகரன்— தன் இதயத்தைச் சித்ரவதை செய்வது அவளுக்குத் தெரி யாமலில்லை. கனனம் குழிய— களங்கமற்ற உள்ளத்தோடு— அவள் சிரிக்கும் சிரிப்பு—அவ ளுடைய இதயத்தைச் சுக்கு நூறாக்கி விட்டது. "மாமி, ராமன் வந்திருக்கான் தெரு

விலே—அவனுக்கு எவ்வளவு படி அரிசி கொடுக்க வேண்டும்'' என்று வீட்டு விவகாரமாக ஏதாவது வந்து கேட்பான் சேகரன்; மாமியிடத்தில் தான். பதிலே சொல்ல மாட்டாள் அவள். உடனே வார்த்தைகள் வெளியே வர ரொம்பவும் கஷ்டப்படும் அவனுடைய எழில் மிகு வதனம் அவளை மௌனமாக அடித்துவிடும். சில நிமிடங்கள் கழித்துத் தான் பதில் வரும் ... இப்டிச் சில நாட்கள்—

இந்த நப்பாசையைத் தூக்கித் தூர எறிந்து விட்டுப் பழைய புவனாவாக வாழத்தான் விரும்பினாள் அவள். ஆனால். அது லேசான காரியமா என்ன? பக்கத்திலே வைத்திருக்கிறது பலவகை உணவுப்பண்டம். பட்டினியாய்க் கிடக்கும ஒருவன் பககத்தில் இருந்தும் சாபபிடாமல் இருப்பானா? சாப்பிட முடியாவிட்டாலும் – மனதில் சாப்பிட வேண்டுமென்று எண்ணக் கூடவாமாட்டான்?

ஃ ஃ ஃ

எல்லாவற்றையும் தூக்கிஅடிக்கக்கூடிய சமபவம் – வேதனையையும் – இன்பத்தையும் ஒருங்கே கலந்து தரும் சம்பவம் அவளுடைய இதயக் கிண்ணத்திலே சுவைத்துச்சுவைத்துப் பருகும்-அந்தச்சமபவம் ...அப்பப்பா! அதை நினைத்தாலே புவனாவின் உடல்நடுங்க ஆரம்பித்துவிடும்! என்ன பயங்கரமான இரகசியம் அதில் பொதிந்து கிடக்கிறது! அன்றுமாலை மணி ஐந்துதான் இருக்கும். லீவில் கிராமத்திற்கு வந்தவன் மறுநாள் காலை சென்னைக்குப் புறப்பட வேண்டும். அவனுக்குக் கொடுத்து அனுப்புவதற்காக—புவனா அடுப்பங்கரையில் உட்கார்ந்து என்ன என்னவோ பலகாரம் செய்துகொண்டிருந்தாள். அவள் உள்ளம—எண்ணெயில் போட்ட பணியாரம் போல் கொதித்துக் கொண்டிருந்தாலும் — அதையெல்லாம் அடக்கிக் கொண்டு, காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள்; விசாலமும் கூடமாட ஒத்தாசையாய் இருந்தாள். அவளுடைய மனதிலும் ஒரே குதூகலம் தான் நிரமபியிருந்தது. தன் அத்தானுக்காகச் செய்யும் வேலையல்லவா?

பலகாரம் எல்லாம் செய்து முடித்து விட்டு—முகம் கழுவிப் பொட்டிட்டுக் கொண்டிருந்தாள் புவனா. முதலியார்



கூடத்தில் ஈஸிசேரில் உட்கார்ந்து என்னவோ படித்துக் கொண்டிருந்தார். எழுந்து தாராளமாக நடமாட முடியாத நிலை—படுத்த படுக்கையாகவே இருந்தார். விசாலம் வேலையை முடித்துக் கொண்டு—அடுத்த தெருவில் உள்ள தன் தோழியைப்பார்க்கப் போயிருந்தாள். கண்ணம்மா கடைவீதிக்குப் போயிருந்தாள். திடீரென்று—வானம் மப்பும் மந்தாரம் போட்டுக் கொண்டது. பளிச்சென்று காய்ந்து கொண்டிருந்த வானத்தில் இருள் சூழ ஆரம்பித்தது மேகங்கள் அலை மோதிக்கொண்டு வானில் பரவ ஆரமபித்தன. பெருத்த மழை இன்னும் சில நேரத்தில் பெய்வதற்கான அறிகுறிகள தென்பட்டன. அப்பொழுது தான் புவனாவிற்கு ஞாபகம் வந்தது. மேல்மாடியில் தளத்தில் கம்பு காய்ந்து கொணடிருந்தது. வீட்டில் ஒத்தாசைக்கு யாருமில்லை. விறு விறுவென்று முறத்தையும் சாக்கையும எடுத்துக் கொண்டு மேல்மாடிக்கு ஓடினாள். அப்பொழுது தான் திரும்பினான் சந்திரன் வெளியேயிருந்து. "இந்தாடா! சந்திரா—தளத்தில் கம்பு காயுது. மழை வரும் போலிருக்கு. உன மாமி ஓடியிருக்கா.போய் வாரிகொணடு வாருங்கள்! ஆட்கள் ஒருவரையும் காணோம்' என்று கத்தினார் முதலியார்.

அவசர அவசரமாகச் சாக்கில் கம்பை வாரிக் கொட்டினாள் புவனா. சாக்கைப் பிடித்துக் கொண்டு இருந்தான சேகரன். எல்லாக் கம்பையும் வாரியாகி விட்டது ஆனால் பாழும் மழை ஏமாற்றிவிட்டது. வானம் வெளிவாங்க ஆரம்பித்தது. மேகங்கள் கலைந்து விட்டன. மறுபடியும் முனபோல் மாலை வெயில் லேசாக அடிக்க ஆரம்பிததது. ஓடி ஓடி வேலை செயததில் புவனாவின முகத்தில் வேர்வைத் துளிகள்—ஒரு தனி அழகைக் கொடுத்துக் கொண்டிருந்தன. பொட்டு பாதிஅழிந்திருந்தது.

"அப்பாடா! இதற்குத்தானா இவ்வளவு ஆர்ப்பாட்டமும்—மழையாவது வரவாவது. கஷ்டபபட்டது தான மிச்சம" என்று கூறிக் கல கலவென்று சிரித்தான் சேகரன்.

புவனாவிற்கு என்ன பதில் சொலவதென்றே தெரியவில்லை. லேசான மாலை வெயில்—மந்த மாருதத் தென்றல் இன்னிசைக் கீதம் பாடிக் கொண்டிருந்தது. புவனாவின் வேதனை உள்ளம் சற்று திடப்பட்டது.

"அது கிடக்கட்டும். சந்திரா நாளைக்குப் பட்டணம் போய் விட்டால் அப்புறம ஆறு மாதம் கழித்துத்தான் வருவாயா?" அவள் குரலில் ஏக்கமும், பிரிவின் வேதனையும் எதிரொலித்தன.

"ஆம், மாமி! ஆறு மாதம் ஆகிப் பரீட்சை முடிந்துதான் வரவேண்டும. அதற்கு மத்தியில் எப்படி வரமுடியும்? எனக்கென்னவோ அந்த பாழாய்ப் போன பட்டணத்தை விட நம் கிராமம் தான் பிடித்திருக்கிறது"

"ஆமாம்! இப்பொழுது அப்படித்தான் சொல்வாய்—பட்டணத்திற்குப் போனதும்—இந்தப் பட்டிக்காட்டு மாமியைப் பற்றி நீ ஏன் நினைக்கப் போகி

ருய்?" உள்ளத்தைத் திறந்து பேசினுள் புவனு.

"நீங்கள் என்ன வேண்டுமானுலும் நினைத்துக் கொள்ளுங்கள்! உங்களை விட இந்த உலகில் எனக்கு மேலானவர்கள் யாரும் கிடையாது. இது பைத்தியக்காரத்தனமான வார்த்தை அல்ல. உண்மையாகச் சொல்கிறேன்"

வயதில் தன்னைவிடச் சிறியவளானுலும் — மரியாதையைக் கருதி—நீங்கள் என்றே பேசினுன் சேகரன்.

"நிஜமா! இந்தப் பேதைப் பெண்மீது அவ்வளவு இரக்கம் காட்டுபவர்கள் கூட இருக்கிருர்களா?"

சந்தர்ப்பம் சேர்த்து வைத்தது. மாலை வெயில். மனேகரமான மந்தமாருதத் தென்றல்—சித்திரத்தில் எழுதப் பெற்ற பதுமைபோல் நின்ருள் புவனு. கடித்துத்தின்று விடலாமா என்ற கன்னங்கள். பேசும் இரு கருவிழிகள். ஏக்கமும் இரக்கமும கொண்ட நயனங்கள். அமுதூறும் செவ்விதழ்கள். ஒரு மயக்கம் அவனுக்கு. என்ன செய்வது என்பது தெரியாமலே—புவனுவை இறுகக்கட்டி அணைத்து — அவளுடைய செவ்விதழ்களிலே காதல் கீதம் வாசித்தான் அவன். கட்டுண்ட சர்ப்பம்போலக் கிடந்தாள் மங்கை. ஒரே நிமிடம் தான். உலகம் மறந்து விட்டது. உருவம் மறந்து விட்டது. நினைவு மறந்து விட்டது. நிலை மறந்து விட்டது ஒரு நிமிடம் தான்! திடீரென்று அவனுடைய அணைப்பிலிருந்து விலகிக் கொண்டு ஒரே ஓட்டம் பிடித்தாள் புவனு! கீழே கட்டின கணவர் "ஏம்மா புவனு! கம்பை வாரிவிட்டீர்களா!" என்று கேட்டது கூட அவர் காதில் படவில்லை.

மறுநாள் அவன் சென்னைக்குப் போய்விட்டான். போகும் பொழுது தன் மாமியிடம் வந்தான். "நான் ஏதாவது தவறுதல் செய்திருந்தால் என்னை மன்னித்துவிடு, புவனு! நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுப் போய் விட்டான்.

அந்த மன்னிப்புக்கு இடமே இல்லை என்பது அவனுக்கு எப்படித் தெரியும்?.........

○

இன்று வாசல் ஓரம் தாழ்வாரத்தில் படுத்துக்கொண்டு அமுதைப் பொழியும் நிலவைப் பார்த்துக் கொண்டிருந்த புவனுவின் மனம் — பழங்கால எண்ண அலைகளை நினைவுக்குக் கொண்டு வந்தது. அந்த வேலைக்காரத் தம்பதிகள் — கண்ணம்மா—முனுசாமி--தோட்டத்தில் தான் கண்ட காட்சி— அவளுடைய பழைய கால சம்பவங்களைக் கிளறிவிடக் காரணமாயிருந்தன.

கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. "யார் இந்த நேரத்தில் வந்து கதவைத் தட்டுவது? யாராவது வேலைக்காரர்களாக இருப்பார்கள்" என்று எண்ணி எழுந்து போய்க் கதவைத் திறந்தாள். வெளியே சந்திரசேகரன் நின்று கொண்டிருந்தான். அவளுக்குத்தூக்கி வாரிப்போட்டது. இதற்குள் சந்தடியைக் கேட்டு விழித்துக் கொண்ட வேலைக்காரப்பையன் கந்தன் — குதிரை வண்டியிலிருந்து பெட்டி படுக்கையெல்லாம் உள்ளே கொண்டுவந்து

வைத்தான. சிலைபோல் நிற்கும் புவனாவைக் கண்டதும் அவனுக்கு என்ன தோனறியதோ! நேராக ஒரு வார்த்தையும் பேசாமல் உள்ளே வந்தான. முதலியார் விழித்துக் கொண்டார்.

"யார் சந்துருவா? என்ன் இப்படி திடீரென்று? பரீட்சை நாளைக்கென்று நேற்றுத் தானே லெட்டர் வந்தது?..." அவர் குரல் படபடத்தது.

"ஒன்றுமில்லை மாமா! எங்க பரீட்சையை இன்னும் ஒரு மாதத்திற்குத் தள்ளி வைத்து விட்டார்கள். கேள்வித் தாள்கள் எல்லாம் 'அவுட்'டாகி விட்டன. இன்று தான் சமாச்சாரம் தெரிந்தது. உடனே, அங்கிருப்பானே என்று மத்தியானம மூன்று மணி வண்டியில் புறப்பட்டு வந்து விட்டேன்."

புவனாவிற்கு ஒன்றுமே தோனறவில்லை. வந்தவனை 'வா' என்று கூடக் கூப்பிட முடியாமல் சிலை போல் இருந்தாள் அவள்.

"சந்துரு — சாப்பிட்டாயா? புவனா சாப்பாடு இருக்கிறதா?" முதலியார் அன்பொழுகக் கேட்டார்.

அப்பொழுது தான் அவளுக்குத் தான் அன்று இரவு சாப்பிடவில்லை என்பது ஞாபகத்திற்கு வந்தது. விளக்கை ஏற்றி வைத்து — இலையைப் போட்டு — ஒரு நிமிடத்தில் பரிமாறினாள். சட்டையை அவிழ்த்து விட்டு — கை கால் அலம்பிக் கொண்டு — சாப்பிட உட்கார்ந்தான். என்றைக்குமில்லாமல்-அன்று அவளுக்குக் கை நடுங்க ஆரம்பித்தது.

"என்ன மாமி! நீங்கள் இரவு சாப்பிடவில்லையா? இவ்வளவு மீந்து போச்சே! அல்லது நான் வருவேன் என்று ஜோஸ்யம் தெரியுமா என்ன?" என்று கேட்டு விட்டுச் சிரித்தான் சேகரன்.

புவனாவிற்குச் சுருக்கென்றது! அவள் சற்றுவது—ஒரு பத்து நிமிடத்திற்கு முன்னால் இப்படி நடக்குமென்று நினைத்தாளா? யார்தான் நினைத்திருப்பார்கள்!

"ஆமாம். பசியில்லை என்று நான் தான் சாப்பிடவில்லை. அதுவும் நல்லதாய்ப் போச்சு! இல்லையென்றால் நீ பட்டினி தானே இருக்க வேண்டும இப்போ!" என்று கூறினாள் புவனா. என்னவோ அவளையும் அறியாமல் அவள் கண்களில் கண்ணீர் கலங்கியது. அவனுக்கே ஏன்என்று தெரியாது. ஆனால் யாரும் அதைக் கவனிக்கவேயில்லை.

"அதோ, அந்தப் பையில் நல்ல ஆப்பிள் பழமாக வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன எடுத்துக் கொள்ளுங்கள என்று கூறினான் சந்திரன் சாப்பிட்டுக் கொண்டே.

பையை எடுத்து ஒரு ஆப்பிள் பழத்தை எடுத்தாள் புவனா! என்ன நினைத்தாளோ—அப்படியே கடித்துத் தின்ன ஆரம்பித்து விட்டாள் சிறு குழந்தை போல! அவள் மனதிலே அந்த வீட்டு எஜமானியின் உள்ளத்திலே ஒரு அசாதாரணமான அமைதி நிலவியது. ●

சிலப்பதிகாரக் காட்சிகள்

விசு. திருநாவுக்கரசு

21. கங்கையை நோக்கிப் பொங்கிய தமிழ்ப் படை

கூடலெனத் திரண்டது தமிழ்ப் படை. அதன் அலைபோல் வீசின கொடிகள். அவற்றினிடையே வங்கமோ என எண்ணத்தக்க ஒரு யானை. அதன் மீதமர்ந்த அம்பாரி மேலமர்ந்து சேர வேந்தர் செல்லுகிறார். படர்ந்த நெற்றி; அடர்ந்த புருவம்; அதன் கீழ் சுழன்று திரும்பும் பெருமிதக் கண்கள். அவை சினம்பெருகிச் சிவப்பேறி விட்டால் அகப்பட்ட பகைவர் ஊதிய சாம்பலாய் உருமறைந்துபோவர்.

பாடிமனை விட்டுப் பாசறை நோக்கிப் புறப்பட்ட பெரும படை கங்கைக் கரையிலே கடல் வந்து நிற்பதுபோல் நின்றது. கன்னரர் அனுப்பிய தோணிகள் கரையிலே அணி அணியாய், ஆயிரமாயிரமாய் நின்றன. அவை மூலமாய்த் தமிழ்ப் படை கரை கடந்தது. வடகரையிலே வடவராகிய கன்னரர் எதிர்கொண்டனர். எழுப்பிய ஆரவாரம் இமயம் வரை சென்று எதிரொலித்தது. தமிழ்ப்படை கன்னரர் நாட்டையும கடந்து பகைவர் நாட்டில் பாசறை கட்டிப் புகுந்தது. உத்தரன், உருத்திரன், சித்திரன், விசித்திரன், தனுத்திரன், சிங்கன், சிவேதன் என்ற வடநாட்டு அரசர் எல்லோரும் ஒன்று கலந்து ஒருமுகப்பட்டுத் 'தென்னாட்டவராகிய இத்தமிழரின் ஆற்றலைக்காண்போம்' எனவீரம்பேசினர். கனக விஜயர் சேனையுடன் சேர்ந்து சேர வேந்தை எதிர்த்தனர்.

வடகிசை மருங்கின்
  மன்னவ ரெல்லாம்
தென்றமிழ் ஆற்றல்
  காண்குதும் யாமெனக்
கலந்த கேண்மையிற்
  கனக விசயர்
நிலந்திரைத் தானையொடு
  நிகர்த்து மேல்வர

"பசிகொண்டு இரை தேட எழுந்த சிங்கம் போல் செங்குட்டுவன் எழுந்தான். யானைக் கூட்டத்தைக் கண்டு பிடரி மயிர் சிலிர்க்க எழுந்து, சினத்தோடு பாயும் சிங்கம் போல் பகைவர் படையில் கலந்தது தமிழ்ப்படை"

'வலியவந்த பகையை முறியடிக்க வேண்டும்.' இதுவே சேரனது எண்ணம். எதிர்கொண்ட கன்னரர் நூற்றுவர் தவிரக் கனகவிஜயர்க்குத்

துணையாக வடவரசர் அனைவருமே ஒன்றுகூடிச் சேரனை எதிர்த்தனர். பகைவர் பலர் என்பதும். பகைத்தெழுந்த சேரன் ஒருவனே என்பதும் ஆசிரியர் காட்டும்

இரைதேர் வேட்டத்து
எழுந்த அரிமா
கரிமாப் பெருநிரை
கண்டுளம் சிறந்து
பாய்ந்த பண்பில்

எனவரும் உவமையால் நாம் உணருகிறோம். பகைவரது படை பலத்தை மதிப்பிடுவதிலே உவமைகள் தக்க எண்ணத்தை உண்டுபண்ணுகின்றன. பகைவனை அலட்சியத்திலோ, இழிவிலோ வைத்து உவமை கூறினால் தம்மை எதிர்க்கத்தக்க தகுதியில்லாதவனோடு பெற்ற வெற்றியாகி விடும். அது பெருமை நல்கவும் மாட்டாது. பகைத்தெழுந்த பகைவரைப் பல யானைகளாக்கி எதிர்த்தெழுந்த சேரனைச் சிங்கமாக்கி மதிப்பிட வைத்த இளங்கோவின் புலமையை நாம இங்கும் உணருகிறோம.

போர்க்களத்திலே சூரியனுடைய கிரணங்கள் படாதவாறு கொடிகள் பந்தலிட்டுப பறந்தன. கொடிய ஓசையை உடைய பறைகள் கொட்டப்பட்டன. கொம்புகளும். சங்குகளும் ஊதப்பட்டன. இடி இடித்தது போல் ஒலி எழும்பும முரசு முழங்கியது இனிய ஓசை எழுப்பும் கஞ்சத்தாளம எங்கும் எழுந்தது. பலி கொள்ளும் முரசு அதிர்ந்தது. திசைகள் நடுங்கின. வில்லேந்திய வீரர், வேலேந்திய மறவர் அணிவகுத்துப் புகுந்தனர். பொருதனர். தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, கலந்து எதிர்க்கப்பல்லாயிரம் வீரர் மடிந்தனர். தலை கைகால் இழந்த நிலையில் பெருகிய இரத்தம் வெள்ளமாய்ப் பரவியது, வீரர் உடல்கள் மலை போல் குவிந்தன, தலை இழந்து கையிழந்து போன கவந்தங்கள் பேய்கள் எழுப்பிய தாளத்திற்குப் பொருந்து மாறு ஆடின. இவ்வாறு தமிழ் வீரர் பகைவர் படைகளைக் கொன்று குவித்தனர். ஆரிய அரசர் முன்பு அறியாதஒன்றை இப்பொழுது அறிந்தனர்.

எருமைக் கடும்பரி
ஊர்வோன் உயிர்த்தொகை
ஒருபகல் எல்லையின்
உண்ணும் என்பது
ஆரிய அரசர்
அமர்க்களத் தறிய
நூழிலாட்டிய சூழ்கழல்
வேந்தன்

"எமன் ஒருபகற் பொழுதிலே பல்லாயிரம வீரரது உயிரை உண்ண முடியும் என்பதை ஆரிய அரசர் இப்பொழுது அறிந்தனர்' இவ்வாறு அறிவித்தான் வீரக்கழல் புனைந்த சேரன். பல்லாயிரவரைப் பலி கொண்ட இப்போர் எஞ்சிய ஐம்பத்து நான்கு பேரையும் சேரவேந்தின் சினவலையிலே ஒனறு சேர்த்தது. அவருள் கனகனும் விசயனுமிருந்தனர். உயிர் பிழைத்து ஓட எண்ணினர்.

சடையினர் உடையினர்
சாம்பற் பூச்சினர்
பீடிகைப் பீலிப்
பெரு நோன்பாளர்
பாடு பாணியர்
பல்லியத் தோளினர்
ஆடு கூத்தர்
ஆகி யெங்கணும்

ஏந்துவாள் ஒழியத்
தாந்துறை போகிய
விச்சைக் கோலத்து
வேண்டுவயில் படர்தர

சடைபுனைந்து, காவியுடையணிந்து, சாம்பல் பூசி சைவத் துறவிகளாகி சிலர் ஓடி மறைந்தனர். இன்னும் சிலர் சமணத் துறவிகளாகப் பதுங்கினர். வேறுசிலர் பாணராய்ப் பாடி நகர்ந்தனர். அவர் பின்னே தோளில் சுமந்த இசைக்கருவிகளோடு தொடர்ந்தனர் பலர். ஆடும் கூத்தராய் வேடம் பூண்டு அஞ்சி ஓடினர். எதிர்த்தெழுந்த வீரர்கள் நகைக்கத் தக்கவாறு கோலம் புனைந்து உயிர் தப்பினர்.

யானையை எருதாகப் பூட்டி வாளைக் கோலாகக் கொண்டு வாளேந்திய உழவனாகிய செங்குட்டுவன பட்டபகை மனிதராகிய நெற்போரைக் கடாவிட்டான். வீரர் மறக்களம்பாடி அரசனை வாழ்த்தினர்.

இவ்வாறு போர் முடித்த செங்குட்டுவன் வந்த காரியத்தை எண்ணினான். எண்ணியதை எண்ணியவாறு செய்ய வல்ல சேரன்

வில்லவன் கோதையொடு
வென்றுவினை முடித்த
பல்வேற் றானைப்
படைபல ஏவிப்
பொற்கோட்(டு) இமயத்து
பொருவறு பத்தினிக்
கற்கால் கொண்டனன்
காவலன்

வில்லவன் கோதை என்ற அமைச்சனுடன் படைகளை ஏவிப் பொன்மயமான இமய மலையிலிருந்து இணையற்ற கண்ணகியார்க்கு உரியதொரு கல்லைக் கொணடுவரப் பணித்தான். இமயம் நோக்கிச் சென்ற படையினர் கையிலே பகையரசராகிய கனக விஜயர் பிடிபட்டனர். அவர் முடித்தலை மீது இமயமிருந்து எடுத்த கண்ணகியார்க்குரிய கல்லை ஏற்றிக் கொணர்ந்தனர். ஒரு பகற்பொழுதில் எண்ணற்ற உயிர்த்தொகையை எமனுக்கு உண்ணக்கொடுத்து இகழ்ந்த ஆரிய மன்னர்க்கு வீரம்காட்டி அறிவு புகட்டிய செங்குட்டுவன் கொடிய சினப் படையுடன் கங்கைப் பேராற்றின் கரைக்கு வந்து சேர்ந்தான். முறைப்படி கண்ணகியார் சிலையைக் கங்கைப் புனலிலே நனைத்துப் புனித மாக்கினான். கங்கைக்கரையின் தென புற வெளியிலே பாடி அமைத்துத் தங்கினான்.

வடபேர் இமயத்து
வான்தரு சிறப்பில்
கடவுட் பத்தினி
கற்கால் கொண்டபின்
சினவேள் முன்பில்
செருவெங் கோலத்துக்
கனக விசயர்
கதிர்முடி ஏற்றிச்
செறிகழல் வேந்தன்
தென்றமிழ் ஆற்றல
அறியாது மலைத்த
ஆரிய மன்னரை

தான் கூறிய சபதப்படி வெற்றிகொண்டான். அவ் வெற்றியாலே பகைவர் உயிர் தப்பி ஓடினர், வேடம் புனைந்து தப்பினர். தப்பிய கனக விஜயரையும் தமிழ்ப்படை கைப் படுத்தியது. கண்ணகியின் சிலையைக் கனக விஜயர் தலை மீது சுமத்திவரக் காணுகிறோம். 'யாகாவாராயினும் நா காக்க, காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு' என்பதற்கு எடுத்துக் காட்டாகக்கல் சுமந்து நிற்கும் கனக விஜயர்

மை கண்முன் வருகிறார்கள், அதே சமயத்தில் பவனி வருகிறான் செங்குட்டுவன். இந்தக் காட்சியை எண்ணி வீரம் கொள்ளுமாறு இளங்கோ உணர்ச்சி மயமாய்ப் புலப்படுத்துகிறார். அல்லாமலும் ஆரிய அரசர் சேர வேந்தர்க்கு மாளிகைகள், மணி மண்டபங்கள், பொன்புனை அரங்குகள் புனை பூம்பந்தர்கள் முதலியன அழகுற அமைத்து வழங்கினர்.

சேரன் போரிலே பட்ட வீரர்க்குப் புகழ்நிற்க நினைவெழுப்பினான். புண்பட்ட மறவர்க்குக் கருணை சொரிந்து வாகை நல்கினான். ஏனைய வீரர்களையும் அன்புடன 'வருக வருக' என அழைத்து வாகைமலர் சூட்டினான். சேரனது வீரத்தையும் வியத்தகு கொற்றத்தையும புகழ்ந்து புலவர் பாட அரியணை வந்து அமர்ந்தான். அதே சமயம் மாடலன் என்ற மறையவன வந்து புகுந்தான், வணக்கமும வாழ்த்தும் கூறினான். மேலும்

வாழ்க எங்கோ
மாதவி மடந்தை
கானற் பாணி
கனக விசயர்தம்
அடிப்படுத் தாண்ட
அரசே வாழ்கென

என்று கூறுகிறான். மாதவி பாடிய கானல் வரிப்பாடல், கனகவிசயரின் செருக்கை அழித்து அவர்களது முடித்தலையை நெறித்து விட்டது என்கிறான். இவ்வாறு கூறுமுகமாகச் சிலப்பதிகாரக் கதையின் விரிவுபிறந்த இடத்தை நயமாய்க் காட்டுகிறான். காதை காதையாய்ப் பெருகிக்காண்டங்களாய் உருக்கொள்ளக் காரணமாய் நின்ற நிகழ்ச்சி இதுவென உணருகிறோம். இந்த நிகழ்ச்சிக்கு முன்பு மாதவி—கோவலன் — இன்பக்களிப்பும் எக்களிப்பும் முற்றிலும் முடுக்கிவிடப்பட்ட வீணைத் தந்தி போல் அந்த எல்லைக்கு வந்துவிடுகின்றன. மாதவியின் கானல் வரிப்பாடல் அறுந்த தந்தியை வைத்து இன்னிசையை எழுப்பமுடியாதவாறு போல இனி வாழ்வில் இன்பம இல்லை எனப்பிரித்து வைக்கிறது. அதுவே கனகவிசயர் தலையிலும கல்லை ஏற்றிவைத்தது எனச் சுருக்கமாய்ப் புலப்படுத்தக் காணுகிறோம்.

கதையின் உயிர்நாடியை மாடலன் நமக்கு உணர்த்தவும் செய்கிறான்.

இவ்வாறு கூறும் மாடலனை நோக்கிய சேரன் "பகையரசர் அறியாது நகைக்கத்தக்க ஒன்றைக் கூறினாய். அதன பொருளென்ன" என்று கேட்கிறான்.

குன்றக் குரவர் கண்ணகியை மலைமீது கண்டதைக கூறிய பொழுது அருகிருந்த சாத்தனார் அவள் கதையை மதுரையிலிருந்து தொடங்கித் தாம கண்டதைச் சேரனுக்குக் கூறினார். மதுரைக் காண்டத்திலிருந்து – இடையிலிருந்து தொடங்கிய கதையை மாடலன் முதலிலிருந்து முக்கியமான நிகழ்ச்சிகளைச் சில வரிகளில் சுருக்கமாகக்கூறுகிறான்.

கானலந் தண்டுறைக்
கடல்விளை யாட்டினுள்
மாதவி மடந்தை
வரிநவில் பாணியோடு
ஊடற காலத்து
ஊழ்வினை உருத்தெழக்
கூடாது பிரிந்து
குலக்கொடி தன்னுடன்

மாட மூதூர்
மதுரை புக்காங்(கு)
இலேத்தார் வேந்தன்
எழில்வான் எய்தக்
கொலேக்களப் பட்ட
கோவலன் மனேவி
குடவர் கோவே
நின்னுடு புகுந்து
வடதிசை மன்னர்
மணிமுடி யேறினள்

புகார் நகரின் கடல் விளே யாட்டிலே மாதவி கோவலனை கலந்து கூடியதும், அங்கே கானல் வரி பாடியதும், பினனே ஊடியதும் ஒன்றுபட்ட உள் ளங்கள் இரண்டுபட்டதும் கொண்ட கண்ணகியைக் கோவலன் கண்டதும கண் ணகியாருடன் சிலம்புவிற்க மதுரை புகுந்து கொலேப்பட்ட தும பின்னே கண்ணகி மது ரையை எரித்து வஞ்சிநாடு புகுந்ததும் இப்பொழுது வட வாரியரின் முடிமீது வீற்றிருப் பதும் ஆகிய இந்நிகழ்ச்சிகளேச் சுருக்கமாய், விளக்கமாய்க் கூறுகிருன்.

சிலப்பதிகாரக் கதையின் ஏனேய நாடகமாந்தர் முடிவு களேயும் மாடலன் மூலமாகவே இங்கு இளங்கோ நமக்குக் காட் டுகிருர்.

தொடர்ந்து பேசும் மாட லன் பொதியம கண்டு குமரிக் கடலாடி மதுரை திரும்பியதை யும், அங்கே கண்ணகிக்கு அடைக்கலம் கொடுத்த மாதரி மதுரைத்தீயிலேபுகுந்து மடிந்த தும உண்ணு நோன்பிருந்து கவுந்தி அடிகள் உயிர்விட்ட தும ஆகிய மதுரை நிகழ்ச்சி களேக் கூறுகிருன் பின்பு தான் புகாரடைந்தபோது அங்கே கோவலன் தந்தை மாசாத்து வான் கொடுந்துயர் அடைந்து ஈட்டிய செல்வத்தை ஏழை எளியவர்களுக்கு வழங்கித் தான் துறவு பூண்டதும், அவன் மனேவி மகனே இழந்த வருத்தத்தால் மடிந்ததும், கண்ணகியின் தந்தை சமணத் துறவியானதும், 'இத்தனே துனபத்திலும இனி வாழேன்' எனக் கண்ணகியின் தாய் உயிர் விட்டதும் ஆகிய பின் நிகழ்ந் தனவற்றையும் எடுத்துப் பேசுகிருன். சிலப்பதிகாரத்தில் வரும் இத்தனே நாடகமாந்தர் களேயும், அவர்கள் அடைந்த முடிவையும் கூறியபிறகு 'மாதவி யாதாயினுள்?' என்ற வினுவும் பரபரப்பும் எழுவது இயல்பேயாகும். இத்தனே பேரோடும ஆளோடு ஆளாய்ச் சொல்லி விடக்கூடிய பாத்திரமா மாதவி? கண்ணகி கோவலன் வாழ்விலே புகுந் தும் புரிந்தும் உண்டாக்கிய மிகப்பெரிய மாற்றத்திற்கு இந்த மாதவிதானே காரணம். கண்ணகியின் வீர வாழ்வு நிகழ்ச்சிகளிலே படிந்த நம நினேவிலிருந்து மெல்ல நழுவி விட்ட மாதவியைப்பற்றி மீண் டும மாடலன் மூலமாக அறிய ஆவல் கொண்ட நமக்கு அத் தனே சுலபமாக, மேற்போக்கா கச் சொல்லிவிட ஒரு கவிஞு ஞல் எங்ஙனம் முடியும்?

மாதவி எத்தகைய நிலே யிலே இருக்கின்ருள்? கண்ணி னும் இனிய காதலன் கொலேப் பட்டான். கணவன் கள்வ னல்ல என உலகறியச்செய்த கண்ணகி வாழ்வின்ப மறியாது மறைந்தாள். கோவலனது பெற்ருேர் அடைந்த முடிவு அம்மாதிரியே. கண்ணகியின் தாய் தந்தையர் அடைந்த துன்பம். இத்தனேக்கும் காரண மாய் இருந்த தான் இனி யாது செய்வது? மாதவியைச் சூழ்ந்

துள்ள கொடுந் துன்பங்கள் அவளை இனி எத்தகைய வாழ்விலே வைக்கும் என்று சிலப்பதிகாரத்தை மூடிவிட்டு ஒரு கணம் நாம் சிந்தித்தோமானால் மாதவி இறப்பதைத் தவிர இருப்பதில் நியாயமில்லை என எண்ணமிடுவோம். அவள் முடிவை இதோ மாடலன் சொல்லுகிறான்.

... ... மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு
நற்றிறம் படர்கேன்
மணிமேகலையை
வான்துயர் உறுக்கும்
கணிகையர் கோலங்
காணா தொழிகெனக்
கோதைத் தாமம்
குழலோடு களைந்து
போதித் தானம்
புரிந்தறங் கொள்ளவும்

'இனியான் நல்நெறிநோக்கிச் செல்லுவேன். மிக்க துன்பத்தினைத் தரத்தக்க கணிகையர் வாழ்விலே மணிமேகலையைப் புகவிட மாட்டேன். கணிகையர் கோலத்திற்குரிய அணிமணிகளையும் கோதையையும் கூந்தலையும் விட்டுத் துறவு பூண்பேன். புத்தன் காட்டிய புதிய வாழ்விலே நிற்பேன்' என்று கூறுமுகமாக அவளடைந்த நிலையை மாடலன் கூறி முடிக்கிறான்.

நாம் கொண்ட எண்ணத்திலும் மாதவி வாழ்வு முற்றிலும் மாறுபட்டுத் தானிருக்கிறது. மாதவி ஏன் இந்த முடிவுக்கு வந்தாள் என எண்ணுமளவுக்குக்கூட நம்மிடம் பொறுமை இல்லாமற் போகிறது. அடைக்கலம் கொடுத்த கவுந்தி, பெற்ற மாதரி இவர்கள்கூட உயிர் விட்டபிறகு இத்தனை துன்பத்திற்கும் காரணமான மாதவி உயிர் விட்டிருக்க வேண்டும் என்று எண்ணவே தோன்றும். நம்மைப் போலவே மாதவியும் இவ்வாறு எண்ணி எண்ணியே இந்த முடிவுக்கு வந்திருக்கிறாள். அவசரப்படாது ஆழ்ந்து சிந்தித்தோமானால் நாமும் 'ஆமென்று' சொல்லும் படியாக ஆகிவிடும். மாதவி இறந்து சாதிப்பதைவிட இருந்து சாதிக்க வேண்டியனவுமிருக்கின்றன. தான் இறந்து விட்டால் மணிமேகலை சித்திராபதியால் கணிகையாக்கப் பட்டுவிடுவாள். தந்தை கொலைப் பட்டான். தாய் உயிர் விட்டாள். கணிகையாய் வாழகிறாள் என்ற ஊரார் பழிக்கு ஆளாக்க நேரும். இந்த இரண்டையும் தவிர்க்க மாதவி உயிர் வாழ வேண்டும். உயிர் வாழ்வதன் மூலம் தூயநெறியைப் பின்பற்றி, வந்த பழியைத் துடைக்க வேண்டும். இவை பொருட்டு மாதவி உயிர்வாழ வேண்டும் என்பது நியாயமாகவே தோன்றுகிறதல்லவா?

மாதவியின் முடிவு கூறிய மாடலன் சேரவேந்தனுக்குப் பாண்டிநாட்டில் நெடுஞ்செழியன் பிரிவுக்குப் பிறகு செங்கோல் ஏந்திய அவன் மகன் வெற்றிவேற் செழியன் புரிந்த செயல்களையும் விரிவாக் கூறினான். பொழுது சாய்ந்து வந்தது. அந்தி வானத்தில் செக்கர் பரவியது. வெண்பிறை மிதந்துவந்ததைச் சேரன் கண்டான். அருகிருந்த வானநூல் வல்லான் இதுதான் தக்கசமயம் என எண்ணி "வேந்தே! வஞ்சிநகர் விட்டு வந்து இனறோடு முப்பத்திரண்டு மாதங்களாகின்றன" என்றான். எல்லோரும் மாலைக்கடன் கழிக்க எழுந்தனர்.

சிறுகதை ஆசிரியர்

மாபஸான்

— மு. அண்ணாமலை —

1

'கற்பு' 'கற்பு' என்று பேசிக் கொண்டிருந்த நேரத்திலே பிரஞ்சு நாட்டிலே, நம்பிய கணவனை மோசம் செய்த நாரிமணிகளைப்பற்றி ஒருவன் எழுதிக் கொண்டிருந்தான. தெய்வீகக் காதல், தூய காதல் என்று எழுத்தாளர்கள் வர்ணித்துக் கொண்டிருந்த போது அவன 'விபசாரம—விபசாரிகள்' இவர்களைப்பற்றி வரைந்து கொண்டிருந்தான்.

அவன் பெயர்தான் கய் டி மாபஸான் (*Guy de Maupassant*) பிரஞ்சுக்காரனான மாபஸான் நம போன்ற நாட்டவர்க்கு மிகவும புரட்சிகரமானவனாகவே தென்படுகிறான். அவனுடைய கதை உறுப்பினர்கள் மக்களிலே கீழ்க்கடையாக மதிக்கப்படுகிறவர்களாயும. ஒழுக்கச் சீர்கேடுடையவர்களாயுமே காணப்படுகிறார்கள்.

அவன் வர்ணிக்கும் பல ஆபாசமான சித்திரங்கள் பிரஞ்சு நாட்டில் சாவ சாதாரணமாகக் காணக் கூடியவைகளே! மாபஸான் தான வாழ்ந்த சூழ்நிலையிலேயே தனக்கு வேண்டிய விஷயங்களை எடுத்துக் கொண்டான். அவனுடைய கதைகள் எந்த நீதியையும் போதிக்க வந்தவை அல்ல; ஆனால் அவை நாட்டின நிலை இன்னதென்று காட்டக் கூடியவை. பல்வேறுவிதப்பட்ட வாழ்க்கை சூழல்களையும, ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள 'வியாபார சம்பந்தத்'தையும, பல்வேறு வகைப்பட்ட உள்ளக் கோணங்களையும். அவனுடைய கதைகள் பேசின. பலர் கைவைத்தால் மதிப்புக் குறைவு என்று நினைத்துக் கொண்டிருந்த அந்த விஷயங்களில் அவன் கைவைத்துக் காட்டினான். அதில் கவர்ச்சி இருந்தது, நயமும நாசூக்கும் இருந்தன. திரை மறைவில் நடந்துகொண்டிருந்த பல காட்சிகளைக் காட்டினான். ஆனால் திரை கிழிக்கப்படவில்லை. அதில் பிரஞ்சு நாட்டுக்கேற்ற பக்குவமும் நாகரிகமும் இருந்தன.

எனினும் 18-ம நூற்றாண்டின் இறுதியிலும் 19-ம நூற்றாண்டின் முதற் பகுதியிலும் இருந்த ஒழுக்க நூல் வல்லராகள் அவன புத்தகங்களை மிகவும் கடிந்துரைத்தனர். இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும இவன் புத்தகங்கள் மொழிபெயர்க்கப்பட்டபோது பெரிதும் கண்டிக்கப்பட்டன. 'எழுதத் தகாத ஆபாசங்களை வர்ணித்தெழுதுகிறவன்' என்று அலட்சியமாகக் கூறினர்.

ஆபாசமான விஷயங்களை வர்ணிப்பதால் பிரஞ்சு நாட்டுப் பொது மக்களிடம் இவனுக்குச்

செல்வாக்கு ஏற்பட்டது. பாரிஸிலே 'ஒழுக்கம்' என்பது 'கனவுலகச் சரக்காக'வே இருந்தது. ஆபாசமாக எழுதுவது அங்கே சர்வ சாதாரணம். அது இல்லாவிட்டால் ஒரு புத்தகம் கூட விற்பனையாகாது.

சிறப்பாக மாபஸானிடம் இனிக்க இனிக்கக் கதை சொல்லும் திறமை இருந்தது. எடுத்த புத்தகத்தைக் கீழே வைக்காமல் படிக்கும்படியாக அவன் புத்தகங்கள் இருந்தன. இதனால் அவனுடைய கதைகளுக்கு 'மார்க்கெட்'டிலே நல்ல கிராக்கி ஏற்பட்டது. பத்திரிகை ஆசிரியர்கள் வரி ஒன்றுக்கு ஒரு பிராங்க் வீதம் விலை கொடுத்துக் கதைகள் பெற்றனர். இங்கிலாந்தில் இவனது புத்தகங்கள் நிறைய விலையாயின.

நாள் ஆக ஆக அறிஞர்களிற் பலரும் சகிப்புத் தன்மையோடுபடித்துப் பார்க்க ஆரம்பித்தனர். எல்லா விஷயங்களையும் எழுதினான். துணிச்சலாக எழுதினான். பிரஞ்சு நாட்டில் என்னென்ன கண்டானோ, என்னென்ன கேட்டானோ அவையெல்லாம் அவனுடைய கைத்திறமையில் உருவம் பெற்றன. அவனிடம் அலுப்புத் தட்டாமல் கதை சொல்லும் வன்மை இருந்தது. கதைகளுக்கிடையே 'குட்டி லெக்சர்'கள் அடிப்பதில்லை. எளிமை இருந்தது. வாசகர்களில் நூற்றுக்கு நூறுபேரும் கதையின் உட்பொருளைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அவனுடைய கதைகளுக்கு யாதொரு விதமான விளக்கங்களும தேவைப் படுவதில்லை. அவைதான் அவனது வெற்றியின் ரகசியங்களாக அமைந்தன.

ஃ ஃ ஃ

ஒரு குமாஸ்தா அவனுடைய இளம் மனைவியுடன் மிக மகிழ்ச்சியாகக் குடும்பம் நடத்துகிறான். அவர்கள் ஒருவருக்கொருவர் மிக அன்போடு கலந்து பழகுகின்றனர். அவனது மனைவிக்கு வைர நகைகள் அணிவதென்றால் விருப்பம் அதிகம். அவன ஏழைக் குமாஸ்தா தானே. போலி வைரங்கள் சில வாங்கி அணிவிக்கிறான். அவள் விருப்பத்திற்கு மாறாக அவன ஒன்றும் செய்வதில்லை. அவளைத் தனியாகவே சினிமா, நாடகம் முதலிய களியாட்டங்களுக்குப் போக அனுமதிக்கிறான்.



மாபஸான்

அவள் திடீரென்று ஒரு நாள் இறந்துவிடுகிறாள். 'கோ' என்று கதறுகிறான். ஏக்கமுற்று

வாடுகிறான். அவள் நினைவாகவே பல நாள் கழிகிறது.

பின் ஒரு கால் அவனுக்குப் பணமுடை வந்தபோது தன் மனைவியின் போலி வைரங்களை விற்கக் கடைக்குக் கொண்டு போகிறான். 10 அல்லது 15 பிராங்க் பெறுமானம் தான் இருக்கும் என்று கருதுகிறான். கடைக்காரன் வாங்கிப் பார்த்து 13 ஆயிரத்திற்கு மேல் மதிக்கிறான். அவனுக்குத் திடீரென்று மயக்கம் வந்துவிடும்போல் இருக்கிறது. எதிர்பாராத ஆச்சரியம் ஒரு பக்கம். திகைப்பு ஒரு பக்கம். இவற்றினால் ஏற்பட்ட குழப்பம். "இவ்வளவு விலை உயர்ந்த நகை தன் மனைவிக்கு எப்படிக் கிடைத்திருக்கும்?" என்ற கேள்வி அவனைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தது. அவன் வாங்கிக் கொடுத்தது போலி வைரங்கள் தாமே. அடுத்த கடைக்குள் நுழைகிறான். அதைவிட அதிகமாகவே விலை மதிக்கப் பெறுகிறது. திரும்பி வீட்டிற்கு வருகிறான. அதிர்ஷ்டம் வந்ததற்காக அவன் கும்மாளம் அடிக்கவில்லை. அதிர்ஷ்டம் ஒரு சூருவளிக் காற்றையும் உடனழைத்துக் கொண்டு வந்திருந்தது. "உயர்ந்த வைர நகையைத் தன் மனைவி எப்படிப் பெற்றிருப்பாள்?" என்ற கேள்விக்கு அவனால் மறுமொழி காண முடியவில்லை. மயக்கம் போட்டு விழுந்து விடுகிறான். மறுநாள் வருகிறான். தன் மனைவியின் அவ்வளவு நகையையும் விற்கிறான். அவனிடம் நிறையப் பணம் குவிந்து விட்டது. கடைக்காரன் வாங்கும் போது, "யாரோ தான் சம்பாதித்ததையெல்லாம் வைரமாக வாங்கி வைத்திருக்கிறார்கள்" என்று சொல்லுகிறான்.

கடைக்காரன் சொன்ன சொற்றொடரைப் பன்முறை சொல்லிப் பார்க்கிறான். "சம்பாதித்தது......"

அவனுக்குத் தெரியாமல் அவன் மனைவி என்ன வியாபாரம் செய்திருப்பாள்? அவ்வளவு ரகஸியமாக ஒரு பெண்ணால் என்ன வியாபாரம் செய்ய முடியும்?......

யாரிடம் தன் உள்ளம் முழுவதையும் ஒப்படைத் திருந்தானோ, யார் இறந்ததற்காகத் தேம்பித் தேம்பி அழுதானோ அவள் இப்படி ஒரு 'துரோகி' யாக இருந்திருக்கிறாள். அதை நினைக்கும் போது அவன் மனம் என்ன பாடுபடும் என்று எண்ணும் போது அவன் நிலை பரிதாபகரமாகவே இருக்கிறது. அவனை அவன் இப்பொழுது என்ன செய்ய முடியும்?

எந்தப் பெண்ணை நம்ப முடிகிறது? எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ?

இது மாபஸானின் போலி வைரங்கள் (*False gems*) என்ற ஒரு சிறுகதையின் சுருக்கம் இத்தோடு இந்தக் கதையை. மாபஸான் முடித்திருக்கலாம நாலைந்து வரிகள் மேலும் எழுதுகிறான்:

"ஆறுமாதங்களுக்குப் பிறகு அவன இரண்டாவது மணமசெய்து கொண்டான். அவனது இரண்டாவது மனைவி ஒழுக்கத்தினின்று எள்ளளவும் தவருதவள். அவளால் அவனுக்குத் துன்பமே மிகுந்தது."



உண்மைதானே! அவனது முதல் மனைவி இருக்கும போதும் நன்மையே செய்தாள். இறந்தபோதும் 'பொற் குவியலைக் காட்டி விட்டுத்தானே சென்ருள்.

முதல் மனைவி ஒழுக்கங் கெட்டவளாகவும், நம்பிய கணவனை மோசம் செய்தவளாகவும் இருந்தாலும் ஆசிரியரின் இரக்கமும் ஆதரவும அவள் பக்கமே இருக்கிறது. "கயமையாகவும் கீழ்த்தரமான ஒழுக்கமுடையவர்களாகவும் வருகிறகதாபாத்திரங்களே மாபஸானின் ஆதரவைப் பெறுகின்றன;" என்று டால்ஸ்டாய் குறைகூறுவது இங்கே நாம் நோக்கத்தக்கது.

கற்பு—ஒழுக்கம் இவை தவருத பெண்ணுல் துன்பமே அடைந்தான் என்று வலிந்து மாபஸான் எழுத வேண்டிய காரணம் என்ன? கற்பு முதலியவற்றில் அவன் நம்பிக்கை கொள்ளவில்லை. அது அவனுக்கு அர்த்தமற்றதாகவே பட்டிருக்க வேண்டும ஆனல் 'விபசார்ம பாபமானது' என்பதை அவன் மறுக்க விரும்பவில்லை. அதே நேரத்தில் அது 'வசதியானது' என்று கூறிக் கொள்ளுகிருன்.

கல்யாணமே வேண்டாம். பெண்களெல்லாம் பொதுவுடைமைச் சொத்துக்கள் என்ற பிளேட்டோவின் தீவிரப் பொதுவுடைமையை இவன் மனமார ஆதரிக்கிருன்.

O

இன்னுெரு கதை.

பிரானிஸா நகரின் அழகுத்தேவதை என்றகதையில்ஒருயூதப்பாதிரியின் மனைவியைபபறறி எழுதுகிருன். அவருடைய பெருமை, அவருடைய கடவுள் பக்தியிலே இல்லை; அவருடைய ஒழுக்கத்திலே இல்லை; அவருடைய கற்று மேம்பட்ட அறிவிலே இல்லை; ஒரு அழகான இளம் பெண்ணுக்குக் கணவனுக இருக்கிருேம் என்பதிலிருந்தது. அந்த யூதப் பாதிரி தன் நேரத்தைப் புத்தகங்கள் படிப்பதிலும் சிந்தனை செய்வதிலும் செலவிட்டுக்கொண்டிருக்கிருர். அவருடைய மனைவியைத் திருப்திப்படுத்த அவரால் இயலவும் இல்லை; அதற்காக அவர் முயலவும் இல்லை. அவள் மனங்கசந்துபோகிருள். வீதிச் சனனலையே பார்த்தபடி இருப்பாள்.

ஒரு நாள் அந்த ஞானியிடம் "கிருஸ்து எப்பொழுது மறுபடியும் பிறப்பார்" என்று கேட்டாள். அதற்கு அவர், "எப்பொழுது யூதர்கள் அனைவரும் பாபிகளாகவோ புண்ணியவான்களாகவோ மாறுகிருர்களோ அப்பொழுது கிருஸ்து பிறப்பார்?" என்ற பைபிள் வாசகத்தை எடுத்துரைக்கிருர். அவள், "எல்லோரும எப்படிப் புண்ணிய

வான்களாக முடியும். அது இயலாது. பாபிகளாக ஆவது தான் இயலக் கூடியது" என்கிருள்.

ஒரு நாள் பாதிரி வேற்றூர் சென்றிருந்தார். அப்பொழுது அவரது மனைவி ஒரு கடற்படைத் தலைவனுேடு சேர்ந்து தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிருள். எதிர்பாராமல் திரும்பி வந்துவிட்ட பாதிரி விஷயம் தெரியவே மிகவும் கொதிப்படைகிருர். "என்ன பாபம்? என்ன கொடுமை? என்ன துரோகம்" என்று அவர் கதறுகிருர். அதற்கு அவள் பயப்படவே இல்லை. துணிச்சலாகவே மறுமொழியளிக்கிருள். அதுவும் கிண்டலாகவும் நையாண்டியாகவும் இருக்கிறது. "கிறிஸ்து பிறக்க வேண்டாமா? அதற்கு என்னுல் ஆன கைங்கரியத்தை நான் செய்து முடித்தேன்" என்று சொல்லுகிருள்.

அனைவரும் பாபியானுல் ஆண்டவன் பிறப்பான்; ஆண்டவன் பிறக்கவேண்டும்; அதற்கான திருத்தொண்டை அவள் செய்து முடித்ததாகச் சொல்லும்போது, அந்தக் கதாபாத்திரத்தின் துடுக்கான பேச்சையும், அதனினும் மேலாக ஆசிரியரின் குறும்பையும் நாம் உணர்கிருேம்.

பாதிரியிடமே கேள்வி கேட்டு அவரிடமே மறுமொழியை வாங்கி, சரியான நேரத்தில் அதைத் திருப்பி அடிக்கிருள். பெண்ணின் மறுமொழியில் தான் கதையின் உயிரும் சுவாரஸ்யமும் இருக்கின்றன. அந்த மறுமொழி இல்லாவிட்டால் கதையில் ஒன்றுமில்லை- மாபஸானின் கதைகளில் பல இப்படிக் குயுக்தியான முடிவுகளாலேயே சிறப்பையும் கவர்ச்சியையும் அடைகின்றன.

பைபிள் வாசகத்திற்கு மாபஸானின் கதை விமரிசனம் நன்ருயிருக்கிறது!

O

தமிழ்நாட்டின் சிறந்த சிறுகதையாசிரியரான புதுமைப்பித்தன் மாபஸான் கதைகளை விரும்பிப் படிப்பதுண்டு. மாபஸானைப்பற்றி அவர் அடிக்கடி புகழ்ந்து கூறுவதுண்டென்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஒரு சமயம் வ. ரா. வும் புதுமைப்பித்தனும் ரயில் பயணம் செய்தனர். ஒரு ஸ்டேஷனில் ரயில் நின்றது. சாப்பிடவேண்டிய நேரம். புதுமைப்பித்தனிடம் பணம் இல்லை. வ. ரா. விடம் இரண்டு ரூபாய் வாங்கிக் கொண்டு சாப்பிடச் சென்ருர். சென்றவர் திரும்பி வரும்போது ஒரு புத்தகத்துடன் வந்தார். அந்தப் புத்தகத்தைப் பார்த்ததும், "ஏன் சாப்பிட வில்லையா?" என்று வ. ரா. கேட்டார்- அவர் புத்தகத்தைக் காட்டினுர். அது மாபஸானின் சிறுகதைகளாக இருந்தது. சாப்பாட்டை விடப் புதுமைப்



மனிதனும் மதமும்

மனிதனுடைய சிறந்த தொழில் நாணயமான கடவுளைச் சிருஷ்டிப்பது தான்!

*　　*　　*

மதமானது நண்பர்களுக்குப் பதிலாகப் பகைவர்களையே உண்டாக்கு கிறது.

*　　*　　*

அடிமைத்தனத்தின் மூலம் மோட்சத்தை அடைவது கேவலமானது.

*　　*　　*

பழமையை அழிக்கிறவர்கள் புதுமையை உண்டாக்குகிறார்கள்.

*　　*　　*

அறியாமைதான் துயரத்தின் தாய்!

— இங்கர்ஸால்

பித்தனுக்கு மாபஸான் கதைகளில் பிடித்தம் உண்டு. இந்த நிகழ்ச்சியை வ. ரா. புதுமைப் பித்தனைப்பற்றி எழுதிய கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

"கற்பு கற்பு என்று கதறுகிறீர்களே; இது தானய்யா பொன்னகரம்" என்ற புதுமைப்பித்தனின் வரிகள தமிழ் நாடு முழுதும் அறிந்தவை புதுமைப் பித்தன கதைகளைப் படிப்பவர்கள் இந்த வரிகளை ரஸிக்க மறப்பதில்லை. அதில் உள்ள துணிச்சலுக்காகத் தான் அவை பாராட்டப் பெறுகின்றன. இந்தத் துணிச்சல் மாபஸான் கதைகளைப் படித்ததனால் தான் உண்டாகியிருக்க வேண்டும். ஒழுக்கம் – கற்பு இவற்றை மனிதன் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருந்தால், துன்பக் கேணியில் அமிழ்ந்து கிடக்க வேண்டியது தான் என்று மாபஸான நினைக்கிறவன் ஆயிற்றே!

ரஷ்ய அறிஞர் லியோ டால்ஸ்டாயும் இவனுடைய கதைகளைப் படித்ததுண்டு. இவனுடைய கதைகளில் சிலவற்றைத் தழுவி ரஷ்ய மொழியில் அவர் கதைகள் எழுதியிருக்கிறார். மாபஸானின் கதைத் தொகுதி ரஷ்ய மொழியில் வெளிவந்தபோது, அதில் மாபஸானைப பற்றி ஏறக்குறைய 25 பக்கங்களுக்கு மேல் கொண்ட முன்னுரை ஒன்றை எழுதியிருக்கிறார். அதில் அவன் நாவல்களைப்பற்றி விமரிசனமும் செய்கிறார். டால்ஸ்டாய் இவனைக் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும், திறமைக்கு மெச்சியும் எழுதிச் செல்கிறார். இவனுடைய சிறுகதைகளைத் தான் டால்ஸ்டாய் பெரிதும் மதிக்கிறார். நாவல்களைக் குறைபாடுடையனவாகவே கருதுகிறார். சேம்பர்ஸ் வரலாற்று அகராதியினர் மாபஸானின் உண்மையான புகழ் அவனது நாவல்களினால் தான கிடைக்கக் கூடும என்கின்றனர்.

இவனுக்குச் சிறுகதை உலகம் ஒரு நிரந்தரமான இடத்தைக் கொடுப்பதிலே பெருமை உடையதாகவே இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

[அடுத்த கட்டுரையும் வரும்]



நான்காம் அத்தியாயம்

அக்டோபர் 15

வேலைக்காரன், மாட்டியிருந்த நாட்குறிப்பில் தேதியை மாற்றி வைத்தான்—ஆகஸ்ட் 5-ல் செய்தி கிடைத்தது, கல்கத்தாவில் தோல்வி யென்று! அக்டோபர் வரையிலும் அவர்கள் வாதம் வளர்ந்து விட்டது என்று அந்தக் 'காலண்டர்' சொல்லிக்கொண்டிருந்தது!

கிளைவ் மேஜையருகே சிகரெட் புகையை விட்டுக் கொண்டே காப்பியைச் சுவைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது வேலைக்காரன் வழக்கம் போலக் கடிதங்களைக் கொண்டுவந்து வைத்தான். இரண்டு கடிதங்கள் இங்கிலாந்திலிருந்து வந்திருந்தன. நண்பர்கள் எழுதியிருந்தனர்.

மற்றவை......?

அவைகளிலே ஒன்று கல்கத்தாவிலிருந்து வந்திருந்தது. ஆனால் அவனுக்குக் கல்கத்தாவிலிருந்து எழுதக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்?

...தாங்கள் தலைமை வகித்துப் புறப்படப் போவதாக அறிந்து மகிழ்ச்சி. உங்கள் வருகையை நாளும் எதிர்பார்க்கிறது கல்கத்தா — கல்கத்தா மட்டுமா? இந்திய உபகண்டமே! ஆம். இந்தத் துடுக்கு மிக்க துருக்கரின் வாலை ஒட்ட நறுக்க வேண்டும். முரட்டுக் குணம் படைத்த வரட்டு மூளை முகலாயர்களை விரட்டியடிக்க வேண்டும்.

நீங்கள் வியாபாரிகள், நாங்கள் அவர்களின் குடிகள்! நமது தொல்லைகளுக்கு எல்லையில்லை.

கல்கத்தாவில் என்னாலான ஒத்தாசைகள் அத்தனையும் செய்கிறேன். வருக, வருக...

இப்படிப் பொறிக்கப்பட்டிருந்த வரிகள் பல!

...நான் தலைமை வகிக்கிறேன் என்பது எப்படி இவ்வளவு விரைவில் கல்கத்தாவிற்குத் தெரிந்தது? ஒருவேளை இங்கேயே அந்த ஆட்கள்

இருக்கிறார்களோ...! இல்லா விட்டால் இவ்வளவு சீக்கிரம் எப்படி எழுதமுடியும்? எழுதிய ஆள் யார்? அமீன்சந்த்—அதே ஆள்! ஆகஸ்ட் 5-ல், செய்தி தெரிவித்திருந்த அதே ஆள் தான் இப்பொழுதும் எழுதி யிருக்கிறான். அவன் ஒரு மாயாவியோ? புரிந்து கொள்ள முடியவில்லையே...

ஆமாம், அவன் ஒரு வைதீக இந்து! இஸ்லாத்தின் விரோதி. ஆகவே, சுபேதாரை எதிர்க்கிறான். அதற்குப் பெரிய திட்டமிட்டு வேலை செய்கிறான். நிச்சயமாக அவன் ஆட்கள் சென்னையில் என்னைச் சுற்றி மட்டுமல்ல, ஜகமெங்கும் இருக்கிறார்கள். பெரிய சதிகாரக் கூட்டம் போல உலவுகிறார்கள். கோயில்களெல்லாம் அவர்கள் கோட்டைகள் தாமே! இந்துக் கோயில்களில் முகமதியன் நுழைய மாட்டான். முகமதியர் பள்ளிவாசலில் இந்து ஏன் நுழைகிறான்? சூழ்ச்சி செய்ய இடமா இல்லை...ஏராளம்!

அமீன் சந்த்—நமக்கு ஒரு நல்ல வேட்டை நாய். கல்கத்தாவில் கட்டாயம் வெற்றி!...

கிளைவ் தனக்குள்ளாகவே பெரிய 'பிளான்' வகுத்து விட்டான். அதனால்தான போலும் அவன் தலை தானே ஆடிற்று! எதிரில் காப்பி ஆறிக்கிடந்தது.

அவன் தான் விட்டுக் கொண்டிருந்த புகை மண்டலங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கிளைவ் அறிய மாட்டான் அமீன்சந்த் தலைமையிலே ஒரு 'ஜெராம்சந்த்' கூட்டம் வேலை செய்கிறது என்ற உண்மையை ......!

சொத்திழந்த அமீன்சந்த், தன் படத்தைக் கீழே போடாமல் ஆடும் நாகம் போலவே நடமாடினான். அவனுக்கு ஒரு பெரிய குழப்பம்...எப்படியாவது சுபேதாரை வீழ்த்தி விட வேண்டும என்று திட்டமிட்ட படியே வாழ்ந்திருந்தான. அவனது 'கள்ளபார்ட்டுகள்' எங்கெங்கும் இருந்தனர். அதனால் அவன எதையும் செய்யமுடிந்தது. சென்னையில் நடக்கும் செய்திகள் உடனுக்குடன் அவனுக்குக் கிடைத்துக் கொணடிருந்தன. அவனது மனத்திலே புதியதோர் திட்டம் புலப்பட்டது. வரும சென்னைப் படையினுதவியினால் சுபேதாரை அடக்கி விட்டு வேறொரு 'பொம்மை'யைச் சுபேதாராக்கி அவனைத் தன விருப்பமபோல ஆட்டிவைக்க வேண்டும் என்று ஆசைப் பட்டான். அதற்காகவே கிளைவுக்கு 'வரவேற்புமடல்' வாசித்துக் கொடுத்தான்! கிளைவும் அதனை மகிழ்ச்சியுடனே வரவேற்றான்.

ஐந்தாம் அத்தியாயம்

இருதரப்பு விவரங்கள்

என்ன ஆச்சரியம்...வெள்ளையர்கள் கல்கத்தாவை நோக்கி முன்னேறுகிறார்கள்!

அக்டோபர் 16, சென்னைக் கடற்கரையில் கம்பீரமாகக் கப்பல்கள் நின்று கொண்டிருந்தன. சிப்பாய்கள் எறும்புச் சரம்போல வந்து ஏறிக்கொண்டிருந்தார்கள். தொள்ளாயிரம் வெள்ளைவீரர்களும் பதினைந்து

இந்தியச் சிப்பாய்களும் அதில் இருந்தார்கள். கப்பல்கள் ஐந்தே தான், எண்ணிக்கையில்—கப்பல்கள் கிளம்பி விட்டன. கரையில் ஏராளமான வெள்ளையர்கள் நின்று கொண்டிருந்தார்கள். கைக்குட்டைகளாலும், தலைப்பாகையினாலும் விடைதந்தனர். கப்பல்கள் வர வரக் கரைந்து கொண்டே வந்து கடைசியில் கடலோடு கரைந்து விட்டனபோலும்!

கடலிலே காற்றோடுபோராடி, அலைகளுடன் வாதாடி, மலைகளுடன மன்றாடிக் கல்கத்தாவை நோக்கிக் கணத்திற்குக் கணம் முன்னேறிக்கொண்டிருந்தனர். ஒரு கப்பல் இன்னொரு கப்பலைவிடப் பல மைல்களுக்கு அப்பால் போய்க்கொண்டிருந்தது...இது வேறு தொல்லை! ஒன்றையொன்று இருந்து அழைத்துக்கொண்டு போக வேண்டியிருந்தது, ஐந்து கப்பல்களும் திக்குக்கொன்றாக வந்து கொண்டிருந்தன. என்ன செய்வது... எப்படி ஒன்று சேர்ப்பது...? அதுதான் அவர்களுக்குச் சிக்கலான பிரச்சினையாக இருந்தது!

பல தொல்லைகளுக்கிடையே பல்டா என்ற இடத்தை அடைந்தனர்......ஆனால் வர வேண்டிய இரண்டு கப்பல்கள் கண்ணுக் கெட்டியவரையில் பார்த்தும் தெரியவில்லை! கம்பர்லாந்து, மார்ல்பரோ......... என்ற பெயருடைய அந்தக் கலங்கள் எங்கு வழிதவறித் தவித்தனவோ........... அவர்களுக்குப் புரியவில்லை ஆனால் அவைகள் தாம் முக்கியமான நாவாய்கள்...........ஏனெனில் அவைகளில் ஒன்றில் இருநூற்றைம்பது வெள்ளைப் பட்டாளத்தார் இருந்தனர். மற்றொன்றில் தரைப்படை வீரர்களில் பெரும்பாலோர் இருந்தனர். ஆகவே அவை இல்லையேல், அவர்கள் தோல்வியிடம் தான் அடைக்கலம புக வேண்டும்! அங்கே இருந்த கில்பேட்ரிக் படையோ சிதைந்து சீரழிந்து, இடிந்த மண்டபம் போல நிலைகுலைந்து கிடந்தது. ......பம்பாயிலிருந்து வரும் என்று அவர்கள் கனவு கண்ட படையுதவி வர வில்லை.

ஆனால் துள்ளிக் கொண்டிருந்த கிளைவ் எதற்காகவும காத்திருக்க வில்லை. உடனே சுபேதாரின் நடவடிக்கைகளைக் கண்டித்து, எச்சரித்து...ஒரு முடங்கல் விடவேண்டும என்று துடித்தான்! அப்படியே வெள்ளையர் தலைவர்களும் சுபேதாருக்கு ஒரு நீண்ட முடங்கலை எழுதியனுப்பினர்.

காகிதத்தூது கிளம்பியது சுபேதாரைச் சந்திக்க...அந்த நேரத்தில் சுபேதார்...?

கல்கத்தாவில் வெகு ஆடம்பரமாக வெற்றிவிழாக் கொண்டாடினன். பாதுஷா ஷா ஆலத்தின் அன்றைய வீரப்பேச்சு, வீரவுணர்ச்சி அவன காதுகளில் ஒலித்தது...கண்களின் முன் வந்து நர்த்தன மாடிற்று. உடனே டெல்லிக்குச் செய்தியனுப்பினன். டெல்லியிலேஒரே கொண்டாட்டம்! பாதுஷாவே முன்னிருந்து நடத்தினன் இந்த வெற்றித்திருநாளை...... வெள்ளையரின் அழிவு அழுகை நாளை!

பெருமையைப் பெரிதாகக் கொண்டான் — பிறவற்றிலே சுபேதார் ஸ ராஜ் ஏமாந்தான்! ஏன்...?

அவனது துலாக்கோலில் கல்கத்தா மிகவும் பாரமாக இருந்தது! உலகத்திலேயே அது போன்ற பணக்காரப் பட்டினம் இருக்காது என்று எண்ணினான். கொள்ளை கொள்ளையாகச் செல்வத்தை வாரிக் குவிக்கலாம் என்று கனவுக் கணக்குப் போட்டான். ஆனால் கிடைத்த பொருள்கள் கற்பித்த பாடம், அவனது தராசின் தரம் குறைவு என்பது தான்! சுபேதார் வருகையை அறிந்து சிலர் ஓடிவிட்டனர். அமீன்சந்தின் 'ஜோரம்சந்த்' கூட்டத்தார் குழப்பத்தை முதலாக வைத்துக் கொள்ளையை வியாபாரமாக்கி மறைந்து விட்டனர், அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு! மேலும் அந்த ஆண்டு சம்பெனி வியாபாரமும் வெகு மட்டம்! அமீன்சந்த் சொத்து பறிமுதலில் கிடைத்ததும் குறைவுதான்...நான்கு இலட்சம் வெள்ளிப் பணங்கள், வேறு சில வணிகப் பொருள்கள்......... அவ்வளவேதானே! சிப்பாய்களும், இராணுவத் தலைவர்களும் தின்றது, 'அமுத்தல்' கொள்ளைக்கு. ஆளான்னது போக மிச்சப்பட்டது எச்சில் மாதிரிதான்— அதுதான் கிடைத்தது சுபேதாருக்கு! இந்தக் குறைந்தக் கொள்ளையை அடித்து முடிப்பதற்குள் அந்தக் கைதிகளை— ஹால்வெல் கூட்டத்தாரை—கசக்கிப் பிழிந்தார்கள்.

சுபேதாருக்குப் பெருத்த ஏமாற்றந்தான் உண்மையில்... ஆனால் அடக்கி விட்டோம் ஆணவக்கார அந்நிய நாட்டுக் கும்பலை என்ற திருப்தியோடு திரும்பினான்...முந்நூறு வீரர்கள் மட்டும் அக்கு காவலுக்காகத் தங்கினர். மோனிசந்த் என்பவன் நிர்வாகத் தலைவனாக நியமிக்கப்பட்டான்.

கல்கத்தாவைச் சூறையிடச் சுபேதார் வருகிறார் என்று ஆங்கிலேயர் பிரஞ்சுக் காரருக்கும், டச்சுக் காரருக்கும் செய்தியனுப்பினார்கள்.....உதவி வேண்டி, ஒற்றுமையான எதிர்ப்பு முன்னணி அமைக்கலாம் என்று எண்ணி!...சுபேதார் வெளிநாட்டு வியாபாரிகளாகிய நமக்குப் பொது எதிரி ...ஆகவே போர் தொடுப்போம் சேர்ந்து, புறங்காட்ட ஓட்டுவோம் வாரீர்...என்று கூவினர். டச்சுக்காரர்........... வாயடைத்திருந்தனர். பிரஞ்சுக்காரர்.............கல்கத்தாவைக் காலி செய்யுங்கள், நாங்கள் வருகிறோம், வந்து காப்பாற்றுகிறோம்..,என்றனர். ஆனால் அவர்களையும் விடவில்லை சுபேதார்.

என்ன செய்தான்? பொக்கிஷத்தை நிரப்புங்கள் என்று கட்டளை பிறப்பித்தான். பணிவான உடன்படிக்கைகள் மூலம் தப்பித்துக் கொள்ள முயன்றனர், முடியவில்லை. தங்கள் நிலைமையை நலமாக்க மலைபோலப் பணத்தைக் கொட்டினர். டச்சுக்காரர் நாலரை இலட்சத்தை யள்ளித் தெளித்தனர். பிரஞ்சுக்காரர் மூன்றரை இலட்சத்தைக் காணிக்கை யாக்கினர். படையுதவியும் பண்ணினர்.

ஆனால் சுபேதார் கல்கத்தாவைக் காப்பாற்ற எத்தகைய முயற்சியும் எடுக்கவில்லை. இங்கிலாந்த சிறு நாடு என்று கருதியோ என்னவோ கவலையற்றிருந்தான். கடுமையான கட்டளைகளுக்குக் கீழ் ஆங்கி

லேயர்கள் மீண்டும்வரலாம்என உத்தரவிட்டிருந்தான். ஏனெனில் அரசாங்கப் பொருள் வருவாயில் ஒரு திடீர்க் குறைப்பு ஏற்பட்டதைச் சமாளிக்கவே இந்தக் கட்டளையும் பிறந்திடலாயிற்று!

வெள்ளையரின் துடுக்குக் கடிதம் கிடைத்தது......சுபேதார் ஆத்திரத்தில் கூத்தாடினன். தனது படைகளை மூர்ஷிடாபாத்தில் கூட்டினன.......... "நாட்டோரே, நல்லிளங் சிங்கங்களே...........எனபடைவீரரே, தீரரே கேளீர்! வெளி நாட்டு வெள்ளை தேதோலர்கள், அந்த சோதாக்கள் முனனேறுகிருர்களாம். அவர்களின் மதிகெட்ட போக்கை, சிறுபிள்ளைத் தனத்தை உடனே அடித்து நொறுக்கிவிட வேண்டும். என் இளம சூரரே, களம் நோக்கிப புறப்படுங்கள். இந்தப் புது முறுக்குடன் வரும் பரங்கியருக்கு விலா எலும்புகள் நோகின்றனவாம். அவர்களின் முதுகெலும்பு முறுகிக்கிடக்கிறதாம். அதற்குத் தக்க மருந்து நமது வாட்கள் தடவட்டும், அவர்களின் ஆசையில் நெருப்பை வளர்ப்போம்......" என்று பொறிபறக்கப் பேசினன். வீரர்கள் வெகுண்டெழுந்தனர்.

ஆரும் அத்தியாயம்

மோனிசந்த்


அமீன்சந்த் ஒரு கொடிப் பாதை வழியாக வந்து கொண்டிருந்தான. பக்கத்தில் ஒரு ஆண்டிப் பண்டாரம் பேசிக்கொண்டே தொடர்ந்தான்.

அது அடர்த்தியான காடு... அங்கு உடைந்து போன காளி சிலேயும், அதன் ஓட்டைக் கோபுரமுந்தான் மனிதர்களுக்குரிய சொத்து... அமீன் சந்த்துக்குக் காளி கோயில் தான் தங்கு மடம் போலும்! கல்கத்தாவிலே ஒன்று... இங்கே மற்ருென்று! அமீன் சந்த் அங்கு வருவான், போவான். பகற் கொள்ளைக்கு வெள்ளையுடையைவிடக் காவியுடை அதிக உதவியும், பாதுகாப்பும் தருகிறதல்லவா? அதனல் தான் அவனுடன் வந்த ஆள் அந்த ஆள் மயக்கி யாடையிலே புகுந்து கொண்டிருந்தான் போலும்! அந்த இடம் பல்டா என்ற இடத்தைச் சேர்ந்தது. இப்பொழுது இருவரும் பெரிய ஏற்பாட்டுடன் தங்கள் இருப்பிடத்தை விட்டுக் கிளம்பினர்.

அமீன்சந்த் கிளைவைச் சந்திக்க விரும்பினன்......ஆனல் அவனது ஆதரவை இழுக்கத் தக்கதோர் திட்டத்தைப் போட்டபடி! கிளைவ் அடுத்தபடி போரிட வேண்டும். அவனை முழுவதும் எதிர்க்க வேண்டிய தலைவனைப் பற்றிய உளவை அவனுக்குச் சொல்லிக் கொடுத்தால் கிளைவ் உடனே அவனை நம்புவான்......பிறகு எந்தச் செயலும் எளிதில் எண்ணியபடி முடியும்!

கிளைவை எதிர்க்கப் போகும் தலைவன் யார்? அவனைப் பற்றிய உளவுதான் என்ன?

சுபேதாரின் ஆணையின்படி அப்பொழுது கல்கத்தாப்



பகுதியைக் காத்து வந்த தலைவன் மோனிசந்த்...... அவன்தான் இப்பொழுது கிளைவை ரணகளத்தில் சந்திக்க வேண்டும்...... உடனே, தவக்கமின்றி; ஏனெனில் சுபேதார் மூர்ஷிடாபாத்தில் தங்கியுள்ளான் அவன் மோனிசந்த்துக்குத் துணையாக ஒரு சிறு படையும் கொடுத்துள்ளான்.

அவனது சிந்தனை சுழன்றது...

ஒரே சமயத்தில் இரண்டு துருவங்களைச் சந்திக்க இரண்டு அமீன் சந்த்துகள் தேவை... அப்படிக் கிடைத்து விட்டால் அவனது வஞ்சகத் திட்டம் வெற்றி பெறும். ஒரு கல், இரண்டு கனிகள்—.. யோசித்தான்! ஆண்டி ஒரு அமீனசந்த், தானொருவன......ஆக இருவர் கிடைத்து விட்டனர்! கிளைவ் கல்கத்தாவிற்குப் புதியவன்...ஆள் முகந்தெரிந்தவனுக இல்லை. ஆகவே ஆண்டி அமீன்சந்த். இந்தச் சமயத்திற்கு மட்டும்!

"சோணி......"

அட, சோணிசந்த்தா ஆண்டி உருவில உள்ளான்... அடையாளமே தெரியவில்லையே!

"தலைவ......"

"இன்று நீ ஒரு கணப் பொழுதிற்கு அமீன்சந்தாக வேண்டும்"

"தங்கள் கட்டளை...எதைச் சொன்னாலும் அடியேன் செய்யச் சித்தமாக இருக்கிறேன்"

காதோடு காதாக எதையோ ஓதினான். பிறகு பிரிந்தனர்.

அவர்கள் நின்று பேசிக் கொண்டிருந்த மரத்திற்கருகில் உள்ள புதிரிலிருந்து ஏதோ ஓசை கேட்டது. அமீன்சந்தின் 'எலிக் காதுக்கு' அந்தச் சிறு ஒலியுங் கேட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இருட்டிலும் ஒளிவிடும் நீல மணிக் கண்களை ஏன் அப்படி ஓட்டவேண்டும் ... எங்கெங்கும் அவன் பார்வை பாய்ந்தது. ஆனால் என்ன வென்று மட்டும் புரிந்து கொள்ள முடியவில்லை. அவனுக்குச் சந்தேகம் வலுத்தது.........ஆகவே ஓசைகேட்ட பக்கத்தில் ஓடி ஓடிப் பார்த்தான். வெகு தூரத்தில் ஒரு மனித உருவம் போவது போலத்தெரிந்தது... அவன் திடுக்கிட்டான்!

(தொடரும்)

உலகப் போர் இனி உண்டா?

ரா. தணலன்

சென்ற கட்டுரையின் தொடர்ச்சி இது.

உலகம் இன்று இரண்டு பேரணிகளிலே, போரணிகளிலே பிரிந்து நிற்கிறது என்பது பத்திரிகை படிக்கும் எந்த மனிதனும் அறிந்ததே. இதற்கு முன்பெல்லாம் போர் என்றால், அதில் ஈடுபடும் நாடுகள் சாகஸமாக மற்ற நாடுகளைத் தமக்குத் துணை சேர்த்துக் கொள்வது வழக்கம். ஆனால் சென்ற யுத்தத்திலும் இன்றைய நிலைமையிலும் இந்தச் சாகஸச் சதிகளுக்குப் பதிலாக புதிய தத்துவம் ஒன்று அணிகளைத் திரட்டி இருக்கிறது என்பதைச் சிறிது யோசித்துப் பார்க்கும் யாரும் புரிந்து கொள்ள முடியும்.

போருக்கு வித்தாக இருப்பது முதலாளித்துவம். இதுவரை நடந்த எல்லாப் போர்களின் சரித்திரமும் முதலாளித்வப் போட்டியில் வந்த அடிதடிச் சண்டைகளேயாகும். முதலாளித்வம தனது ஆதிக்க வேட்டைக்காக ஆயிரக் கணக்கான பாமர மக்களை வதைத்த தன் சரித்திரங்களேயாகும்.

ஆனால் 1917ம் ஆண்டிற்குப் பிறகு புதியதான சக்தி ஒன்று முளைத்தது. அது அடிமைப் படுத்தப்பட்ட ஜாதிக்கும் ஆளத்தெரியும் என்று நிரூபிக்கக்கிளம்பியது. அதுஒடுக்கப்பட்டவர்க்கமும் ஊராளத்தகுந்த நிலையில் ஓங்கி நிற்க முடியும் என்று அறை கூவக்கிளம்பியது. அந்தச் சக்தி சுயநலம் கொண்ட தனி மனிதருக்காகவே சமுதாயம் என்ற நிலைமையை அடித்து நொறுக்கி மனிதரில் பலர்—உழைப்பவர், உண்டாக்குபவர், விளைவிப்பவர்களான—அந்த மிகப்பலர் வாழ்வதற்காகவே சமுதாயம என்ற புதியதொரு தத்துவத்தை நிலைநாட்டியது.

பலரை ஏமாற்றப் பகவானைக் காட்டிப் பகட்டித் திரிந்த பாதிரி வர்க்கத்தைப் பதைக்கச் செயதது அந்தச் சக்தி. கடவுள் அருளால் மனிதரில் சிலர் கண்ய வாழ்வுற்றனர், மற்றவர் கடையர் ஆகினர் என்ற கொள்கைகளை உடைத்தெறிந்தது அந்தச்சக்தி. மதத்திற்கும் பணத்திற்கும் முட்டாக்குப் போட்டு மூலையில் உட்காரவைத்துவிட்டு மனித வர்க்கத்திற்கு, ஆண் பெண் அடங்கலுக்கும விடுதலை அளித்தது அந்தச்சக்தி வாழ்வாவதுமாயம் மண்ணாவது திண்ணம். ஆனால் நீங்கள செத்துக் கொணடிருங்கள், நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற முதலாளித்வ வாதக்காரர்களின்

முகத்திலே தாரை வாரிப் பூசி உண்மைக்கு ஒளியூட்டியது அந்தச் சக்தி.

அன்று முதலாளித்துவம் பதைபதைத்தது. ஐயோ தனி மனித சுதந்திரம் பறிபோகிறதே என்று தகிடுதத்தம் செய்தது. மதம் மடிகிறதே என்று ஒப்பாரி வைத்து ஓலமிட்டது. ஊரைக் கட்டிக்கொண்டு முற்றுகை போடக் கிளம்பியது. ஆனால் தோல்வியுற்றது.

முளையாகக் கிளம்பிய அந்தச் சக்தி மரமாக வளர்ந்து வந்ததை முதலாளித்துவம கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தது. அந்தச் சக்தி ஒருவாறு தன்னைத் தான் சமாளித்துக் கொள்ளும் நிலைமை அடைந்து வருகையிலே சென்ற யுத்தம் வந்தது.

சென்ற யுத்தமும் ஏகாதிபத்தியப் போட்டியின் உருவத்திலேயே ஆரம்பமாகியது. 1917-ம் ஆண்டில் முதற்பெரும் போரின் முடிவிலே ஆங்கில, அமெரிக்க, பிரெஞ்சு முதலாளித்வ அரசாங்கங்கள் ஜெர்மானிய முதலாளித்வ அரசாங்கத்தைத் தலைகுப்புறக் கவிழ்த்து விட்டன; மீண்டும் ஜெர்மானிய முதலாளித்வம் தமமோடு வியாபாரப் போட்டிக்கு வரமுடியாத வகையிலே அதனுடைய காலனி அடிமை நாடுகளை எல்லாம் பறித்துத் தமக்குள் பங்குபோட்டுக் கொண்டன. தாங்க முடியாத கடன் சுமையை வைத்தன. ஜெர்மானிய முதலாளித்வம் அதல பாதாளத்திலே விழுந்தது. ஆனால் அதனுடைய முதலாளித்வ ரோஷம் அழிந்து விடவில்லை. தன்னுடைய சொத்து, சுகம், அடிமைகள் முதலிய எல்லாவற்றையும இழந்துவிட்ட ஜெர்மானிய முதலாளித்வம் மற்றவர்கள் மேல் பழி வாங்கத் துடித்துக்கொண்டிருந்தது. அதன் உள்ளத்திலே புகைந்துகொண்டிருந்த துவேஷத் தீ ஹிட்லரின் உருவத்திலே கொடிய வல்லமை வாய்ந்த ஒரு ஆயுதமாகத் திரண்டது.

இதற்கு இடையிலே, பிரெஞ்சுப் புரட்சிக் காலத்திலிருந்து உருவாகி வந்த வர்க்கப் போராட்டங்களில் முளைத்த அந்தப் புதிய சக்தி அநதந்த நாடுகளிலே ஆளும் முதலாளித்வ அண்ணன்மார்களுக்கும் ஆளப்படும் பாட்டாளித் தம்பிமார்களுக்கும் நடந்து வந்த சச்சரவுகளின் வளர்ச்சியிலே 'கிளைத் தெழுந்த அந்தப் புதிய சக்தி' சோவியத் யூனியனின் உருவத்திலே உருவாகி வந்தது.

முதலாளித்வ ஜெர்மனிக்குத் தனது வியாபாரததை நடத்த, தனது ஆட்சியைநடத்த, சம்பிரதாய விருதுகளோடு எல்லா முதலாளிகளையும் போல் பவனிவர, அடிமை நாடுகள் வேண்டும என்று ஹிட்லர் நினைத்தான். தனது காலனி நாடுகளைப் பிடுங்கிக் கொண்ட ஆங்கில அமெரிக்கப் பிரெஞ்சு முதலாளிகளின் பல்லைப் பிடுங்கிக் கையில் கொடுக்க வேண்டும் என்ற ஆத்திரம் அவனுக்கு இருந்தது. ஆனால் அதே சமசமயத்தில முதலாளித்வத்திற்கே பரம வைரியாகத் தோன்றி நாளும் நாளும் முன்னேறி வரும் பாட்டாளி வர்க்கத்தின் சோவியத் யூனியன் அவன் கண்களை உறுத்தியது.

மற்ற அண்ணன்மார் நாடுகள் "சே இந்தக் கூலிக்காரபபசங்க ராஜாங்கம் எத்தனை நாளைக்கு நடந்து விடும்...பார்க்கலாம்" என்று கேலிசெய்தபடி அலட்சியமாக இருந்தன. ஆனால் முதலாளித்வ முன்னோக்குடன் பார்த்த ஹிட்லரால் ரஷ்யாவைப் பற்றி அவ்வளவு அலட்சியமாகக் கருதிவிட முடியவில்லை.

அதே சமயத்தில் ஆங்கில அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் வேகமாக வளர்ந்துவரும் இந்த இரண்டு சக்திகளையும் பார்த்துக் கொண்டிருந்தன. தங்களால் அடிமைப்படுத்தப்பட்ட பயல் மீண்டும தலை தூக்கவாவது என்று ஜெர்மானியரைப் பார்த்து அவர்கள் கறுவினர். அடிமை வர்க்கம் ஆளும வர்க்கமாக நிலைக்கவாவது...என்று ரஷ்யாவைப் பார்த்துப பதைதத்தனர்.

ஹிட்லர் வெகு வேகமாக முன்னேறினான். இன்றைய அமெரிக்காவைப் போல் பயங்கர ஆயுதங்களைச் செய்து வைத்திருப்பதாகப் பறைசாற்றிக் கொண்டான். நினைத்தால் வாரக் கணக்கில் உலகத்தையே தன்னால் ஆக்கிரமித்துக் கொள்ள முடியும என்று தமுக்கடித்துவிட்டான். ஹிட்லரின் புயல் படைகளையும், மின்னல் படைக்கலங்களையும் கண்டு மற்ற ஏகாதிபத்தியங்கள் பயந்தன. இருந்தாலும் அவனும் முதலாளித்வ இனம் தானே. வேண்டுமானால் ரஷ்யாவை அடிமையாக்கி வைத்துக் கொள்ளட்டும் என்று அவர்கள் ஆரம்பத்தில் நினைத்தனர். ஹிட்லரும் மிரட்டியே தனது அண்டை நாடுகளை ஆக்கிரமித்துப் பலம் சேர்த்துக்கொண்டு சோவியத் நாட்டை வாரி விழுங்கி விடலாம் என்று தான நினைத்திருந்தான் அதனாலேயே அவன், தான் ரஷ்யாவுடன் செய்துகொண்ட ஆக்கிரமிப்பு ஒப்பந்தத்தையும் மீறி ஆறே மாதங்களுக்குள் ரஷ்யாவைத் தாக்கினான. ஆனால்,

ஜெர்மனியின வளர்ச்சி வேகம் ஆங்கில அமெரிக்க அச்சை அச்சுறுத்தியது. இந்தச் சுண்டைக்காய் தேசத்தில் நின்றே இவன் இத்தனை அட்டூழியங்கள் புரியக் கூடுமானால் இவனுடைய பலம் அதிகரித்து விட்டால் நாம் எல்லோரும இவனுடைய இச்சைப்படி ஆடவேண்டிய பொமமைகளா ஆகிவிடுவோம் என்று ஆங்கில அமெரிக்க ஏகாதிபததியங்கள் எண்ணின. சோவியத்தின் சக்தியைப்பற்றி அவர்கள் எப்பொழுதுமே குறைவாக மதிபபிட்டிருந்தனர். எனவே சக்தி மிக்கதாய் உள்ள ஜெர்மனியின் அழிவையே முதலாவதாக நாட வேண்டும் என்று தீர்மானித்தனர்.

இந்தத் தத்துவம் தான் சென்ற போரின் நடவடிக்கைகளுக்குப் பின்னால் நின்றது.

முதலாளித்வத்தின் பொதுப் பகைவனான சோவியத்தைத் தாக்கியவுடன் மற்ற முதலாளித்வ நாடுகள் தன்னோடு சேர்ந்து கொள்வார்கள் என்று ஹிட்லர் எண்ணினான். ரஷ்யாவைத் தாக்கினவுடன் மற்றவர்களுக்கு அறைகூவல் விடுத்தான. பாரசூட் மூலமாகத் தனது பிரத்யேக துதாக 'மாஸ்லி'யை லண்டனுக்கு அனுப்பி வைத்தான்.

ஆங்கில அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் யோசித்தன. ஹிட்லர் பிரான்சைப் பிடித்து விட்டான். ரஷ்யாவில் மின்னல் வேகத்தில் முன்னேறுகிறான். ஏறக்குறைய ஐரோப்பா முழுவதும ஹிட்லரின் காலடியிலே விழுந்து விட்டது. இன்னும் ஆங்கில அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் யோசனை செய்து கொண்டே இருந்தன. பெயரளவுக்குச் சோவியத் யூனியனுடன் ஒப்பந்தம செய்து கொண்டு உதவி செய்வதாகப் பறைசாற்றியபடி இவர்கள் பாட்டிற்கு யுத்தத்தை ஆப்ரிக்காவிலும் பசிபிக்கிலும் மாத்திரமே நடத்திக் கொண்டிருந்தனர். சென்ற யுத்த காலத்திலே 1939 முதல் 1943 வரை ஆங்கில அமெரிக்க பீரங்கி ஒனறு கூட ஐரோப்பாவை நோக்கித் திருப்பப்பட வில்லை. ஒரு கப்பல் கூடப் படைகளுடன் ஐரோப்பாவை நோக்கிச்செல்லவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

புதிதாகத் தோன்றிய இந்த இரண்டு சக்திகளும், நாஜி ஜெர்மனியும் சோவியத் ரஷ்யாவும அழியட்டும். வலுவிழக்கட்டும அதன் பின் நாம யோசிப்போம் என்று சர்ச்சில் தன் முதலாளித்வ இரும்பு நெஞ்சத்திலே எண்ணிக் கொண்டிருந்தான்.

மாஸ்கோவிலே, ஸ்டாலின் கிராடிலே, லெனின் கிராடிலே நாஸிப் படைகள் கொன்று குவிக்கப்பட்டன. நாஸிகள் செய்த அட்டுழியங்களுக்குப் பழிக்குப் பழி என்று ஆர்த்தெழுந்து அழித்து ஒழிததுக் கொண்டு முன்னேறியது, செஞ்சேனை. அந்தக் கணத்திலே தான் ஆங்கில அமெரிக்கப் படைகள் பிரான்ஸிலும் இத்தாலியிலும் கால் வைத்தன. முதலாளித்வம் செய்த மாபெரும் தவறு அதுதான்.

அந்தச் சமயத்தில் பிரிட்டனிலிருந்த முதலாளித்வவாதிகள் ஹிட்லருக்கு உதவி செய்து சோவியத் யூனியனைத் தலைகுப்புறக் கவிழ்க்க வேண்டும என்று விரும்பினர். ஆனால் அதற்குள் வளர்ந்துவிட்டிருந்த மககளின சக்தி அவர்களை அபபடிச் செய்ய விடவில்லை. பொதுஜன உணர்ச்சி ரஷ்யாவுக்கு அனுதாபமாகப் பெரிய பணிசெய்தது. அந்தப் பொதுஜன உணர்ச்சிதான் முதலாளித்வ நாடுகளுக்குத தங்கள் சவக்குழிகளைத் தாங்களே வெட்டிக் கொள்ளுமா தலைவிதியை நிர்ணயம செய்து கொள்ளவும் செய்தது.

நேரில் ஆங்கில அமெரிக்க முதலாளித்வ நாடுகளும் சோவியத் யூனியனும் ஒரு அணியில் நினறு வெறறிபெறறன. இந்த இடைக்காலத்திலே முதலாளித்வ நாடுகளில் மக்களின் முனனேற்றம் திகைப்படையச் செய்வதாக இருந்தது. வல்லமை வாய்ந்த தொழிற்சங்கங்களும விவசாயிகளின் சபைகளும் தோன்றின. பலர் உழைக்கச் சிலர் வாழும் சமுதாய அமைப்பு மனிதத் தன்மைக்கே இழுக்கானது என்ற உணர்ச்சி பரவியது. ஆண்டை அடிமை நிலை அடித்தொழிக்கப்படவேண்டும் என்ற உணர்ச்சி பெருக்கெடுத்தோடியது.

உலகில் வாழும் இருநூறு கோடி மக்களும் சோஷியலிஸ தத்துவங்களைப் புரிந்து கொண்டனர். முதலாளித்வம் சொந்த வீட்டிலேயே தீப்பற்றிக் கொண்டது என்பதைப்புரிந்து கொண்டது.

அந்தச் செந்தீ அல்பேனியா, பல்கேரியா, செக்கோஸ்லேவேகியா, ருமேனியா, போலந்து, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்த முதலாளித்வ அரசாங்கங்களைத் தொடக்கத்திலேயே பொசுக்கி விட்டது. சியாங்கின் அமெரிக்க அடிமைச் சிறையை விடுதலை செய்து முதலாளித்வத்தின் மூச்சை ஒடுக்கி விட்டது. அந்தத் தீயின் வெப்பம் உலகிலுள்ள அத்தனை நாடுகளையும் தகித்துக் கொண்டு வருகிறது. அதன் சுடர் முதலாளித்வ அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் கண் கூசச் செய்கிறது.

இதே சமயத்தில் முதலாளித்வ நாடுகளின் பொருளாதார நெருக்கடியையும், பொது ஜன எழுச்சியையும் கூர்ந்து கவனித்தாகவும் வேண்டும். இந்த நாட்டிலே நடைபெற்ற தொழிலாளி விவசாயிகளின் போராட்டங்கள் எல்லாமுமே அஹிம்சை பேசி அரசுகண்ட நமது நேர்மையாளர்களால் துப்பாக்கி முனையில் அடக்கப்பட்டது என்பதை நாம் அறிவோம். முதலாளித்வத்தின் பகல் கனவு அது. வெடிகுண்டைக் கண்டால் பொடிபபயல்கள் நடுங்கி விடுவார்கள் என்பது. அந்தப் பகல் கனவிலேயே தான் இன்று முதலாளித்வ நாடுகள் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. உலகிலே உள்ள பாட்டாளி நாட்டைப் பொசுக்கிவிட......

ஆனால், அது நடைபெறுமா ... சோவியத் யூனியனைச் சுற்றிலும், மேற்கு ஜெர்மனி, மேற்கு ஐரோப்பிய நாடுகள், ஸ்பெயின் வட ஆப்பிரிக்கக் காலனிகள், இத்தாலி கிரீஸ், துருக்கி, பாரசீகம், ஆப்கானிஸ்தான், இந்தியா, பர்மா, மலேயா, கிழக்கு இந்தியத் தீவுகள், ஜப்பான், தென் கொரியா, கானடாவில் இருக்கும் அலாஸ்கா, க்ரீன்லாந்து ஆகிய இவ்வளவு நாடுகளிலும் அமெரிக்கா தனது ராணுவ, விமான தளங்களை அமைத்து வருகிறது. அணு குண்டுகளும் விமானங்களும் கொண்டு வாரக் கணக்கில் சோவியத் நாட்டை, அதன் மக்கள் அத்தனை பேரையுமே அழித்து விடலாம் என்று பகற் கனவு கண்டு கொண்டிருக்கிறது.

போர்க் கருவிகளைப் பெருக்கித் தளங்களையும் அமைப்பதுடன் இந்த நாடுகளிலே இருக்கும் கம்யூனிஸ்ட்டுகளை ஒடுக்குவதற்கும அமெரிக்கா முயற்சித்து வருகிறது. ஆனால் சோஷியலிஸத்தின் வீழ்ச்சி மனித இனத்தின் வீழ்ச்சி என்பதைப் புரிந்து கொண்டுள்ள உலக மக்கள் இதை அனுமதிப்பார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம.

பாம்பாட்டி



ஆடு பாம்பே! ஆடு பாம்பே! —படமெடுத்(து)
ஆடு பாம்பே!
பாம்புக்குப் பயமில்லை —நல்லபாம்பே!
பசிக்குப் பயந்திடுவேன் —நாகப்பாம்பே
பாட்டில் மயங்கிடுவாய் —நல்லபாம்பே!
பசிக்கு மருந்தறியேன் —நாகப்பாம்பே

என்று மகுடியில் பாட்டொலி ஊரில் எந்த மூலையில் கேட்டாலும் சின்னஞ் சிறியவர்களும் பெத்தப் பெரியவர்களும், வித்தியாச மில்லாமல் வேடிக்கை பார்க்கக் கூடி விடுவார்கள். பாம்பாட்டி வீரப்பனை உங்களுக்குத் தெரியுமா? தெரியாது!

குள்ளமான வடிவம். நிறத்தில் கருப்பு. முகத்தில் ஒரு முரட்டுத் தோற்றத்தை உண்டாக்கும் கரு கரு வென்று வளர்ந்த மீசை! தலையில் பெரிய மூண்டாசு. இனிமேல் ஒட்டுப் போட்டுத் தைக்க இடமில்லாத சட்டை. முழங்கால் வரை ஏறி நிற்கும் வேட்டி. ஒருகையில் மகுடி. தோளின் பின் புறத்தில் இரண்டு கூடைகள். அதில் தான் வயிற்றுக்குச் சோறு போடும் வளர்ப்புப் பிள்ளைகளான இரண்டு பாம்புக் குட்டிகள். வீரப்பனை அறிமுகப் படுத்த இவை போதும்.

பாம்பாட்டி வீரப்பன் அருமையாக மகுடி வாசிப்பான். புதிய கொடூரமான பாம்புகள் கூட அவன் வாசிப்பில் சொக்கிவிடும். உயிர்ப் பிராணிகளில் மிகக் கொடியது பாம்பு என்று சொல்லுவார்கள். பசிக் கொடுமைக்குப் பயந்த வீரப்பன் பாம்பாட்டிப் பிழைத்து வந்தான்.

ஏதோ அதில் நாலுகாசு கிடைத்தது, குடும்பச் செலவுக்குப் போதும் — இல்லை — இல்லை, குடும்பச் செலவை வரும்படிக்குத் தக்கபடி சரிக்கட்டிக் கொண்டான்.

வீரப்பனுக்கு ஒரே ஒரு பையன். அருமையான பிள்ளை. மாணிக்கம் என்றால் மாணிக்கந்தான்! அழகான சிறுவன்.

தகப்பனார் செய்கிற தொழிலில் தானே சாதாரணமாகப் பிள்ளைகளுக்கு அக்கரையிருக்கும். அதனால் தான் அந்தக் காலத்தில் ஐயர் மகனை ஐயர் என்றும் வண்ணான் மகனை வண்ணான் என்றும், செட்டியார் மகனைச் செட்டியாரென்றும் தொழிலை வைத்துச் சாதியைப் பிரித்தார்களாம். பரம்பரையாக ஒரே தொழிலைப் பார்ப்பதனால் தொழில் அபிவிருத்தி ஏற்படுமென்று நம்பினார்களாம்! ஆனால் தொழில் அபிவிருத்தியைக் காட்டிலும் உயர்வு தாழ்வு என்ற மனப்பான்மைகளும், சண்டை சச்சரவுகளுந்தான் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. மேலும் அன்று பிரித்து வைத்த முறைப்படியா இன்று தொழில்கள் நடைபெறுகின்றன! இந்தக் காலத்தில் தொழிலை வைத்துச் சாதியைப் பிரித்தால் வக்கீல் ஜாதி, டாக்டர் ஜாதி என்று ஜாதிகளைப் பெருக்கிக் கொண்டே போக வேண்டும். டாக்டர் மகனை டாக்டர் என்று சொல்ல வேண்டும். அது நடக்குமா? நடக்கவே நடக்காது. எந்தத் தொழிலுக்குப் போகிறார்களோ அந்தத் துறையில் தேர்ச்சியும் அனுபவமும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான்பட்டங்களை மாட்டிக் கொள்ளலாம்.



ஜாதிப்படி தொழில்செய்யவேண்டுமானால் பாம்

பாட்டி மகன் பாம்பாட்டியாகத்தானிருக்க வேண்டும். ஆனால்வீரப்பனுக்குத் தன் மகனும் இந்த 'அபாயகரமான' தொழிலில் பிரவேசிப்பதில் விருப்பமில்லை. நாலு எழுத்தைப் படிக்க வைத்து வேறு துறையில் திருப்ப எண்ணியிருந்தான். அதன்படி பையனும் பள்ளிக் கூடத்திற்குப் போய் வந்து கொண்டிருந்தான். இருந்தாலும் விடுமுறை நாட்களில் அப்பா இல்லாத சமயம் மகுடியை ஊதிக் கொண்டிருப்பான். வீரப்பன் இரண்டு மூன்று தடவை கண்டு, மகுடியைத் தொடக்கூடா



தென்று கண்டித்திருக்கிறன். கண்டிக்கக் கண்டிக்கப் பையனுக்கு அதிலே ஒரு அடங்காத ஆர்வம். ஒருநாள் இப்படித்தான் மாணிக்கம் மகுடியை வைத்து ஊதிக் கொண்டிருந்தான்

'மாணிக்கம்' என்று கத்திக் கொண்டே வந்தாள் மரகதம். மரகதம் அடுத்த வீட்டுக் குழந்தை. மாணிக்கத்தின் விளையாட்டுத் தோழி.

மாணிக்கம் பேசவில்லை. மகுடிச் சத்தந்தான் கேட்டது.

"பெரிய பாம்பாட்டி மாதிரி ஊதுகிறனே!"

"அட, பாம்பாட்டிக்கு என்ன குறைச்சல்!"

"உனக்கு என்ன தெரியும்?"

"எனக்கு என்ன தெரியாது?"

"புதுப்பாம்பு பிடிக்கத் தெரியுமா?"

"என் தெரியாது, பாம்பிருக்குமிடத்தைக் காட்டு; நான் பிடித்துத் தருகிறேன்" என்று பையன் வீறுப்போடு மகுடியைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விட்டான்.

உலகந் தெரியாத இரண்டு சிறிய குழந்தைகளும் கொஞ்சங் கூட அச்சமில்லாது பக்கத்திலிருந்த தோட்டத்திற்குச் சென்றன. அந்தத் தோட்டம் ஒரே புதர்க் காடாயிருந்தது. பையன் மகுடியை ஊத ஆரம்பித்தான். மரகதம் சுற்றிலும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"அம்மாடி பெரிய பாம்பு" என்று ஒரே கத்தாகக் கத்தினாள் மரகதம். மாணிக்கம் பாம்பைக் கண்ட அதிர்ச்சியில் மகுடியைக் கீழே போட்டு விட்டான். குழந்தைகளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. திரும்பி ஓடி விடுவதற்கும் கால்கள் வரவில்லை.

ஆடிக்கொண்டே வந்த கருநாகம் மாணிக்கத்தின் தோள்வரை கிளம்பி ஒரு கொத்துக் கொத்திற்று. 'அப்பா' என்று அலறி விழுந்தான் குழந்தை. 'ஐயோ மாணிக்கம்' என்று அவனைத் தாங்கிக் கொண்டது பெண் குழந்தை. கருநாகத்தின் இரண்டாவது கொத்து பெண் குழந்தையின் காலில் விழுந்தது. இரண்டு குழந்தைகளும் சுருண்டு விழுந்தன. நெடு நேரமாகியும் குழந்தைகளைக் காணாத பெற்றோர்கள் தோட்டத்திற்குத் தேடி வந்தார்கள். பாம்புப் புற்றருகில் செத்துக்கிடந்த செல்வங்களைக் கண்டார்கள்.

அவர்கள் மனம் என்ன பாடு பட்டிருக்கும்! வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டார்கள்; முட்டிக் கொண்டார்கள்; மோதிக்கொண்டார்கள். என்ன செய்வது? செத்தவர்கள் பிழைப்பதுண்டா? பாம்பாட்டி வீரப்பன் மனம் வெறுத்துப் பரதேசி வீரப்பனானான்.

குழந்தைகளே! மாணிக்கத்திற்கும் மரகதத்திற்கும் நேர்ந்த பரிதாபகரமான முடிவைப் பார்த்தீர்களா? வீரப்பன் சொற்படி கேட்டிருந்தால் இந்த முடிவு ஏற்பட்டிருக்குமா? நீங்கள் சுயமாகச் சிந்திக்கச் சக்திபெறும்வரை எந்தக் காரணத்தைக் கொண்டும் மூத்தோர் சொல் வார்த்தையைத் தட்டி நடக்காதீர்கள். உலக அனுபவமில்லாத உங்களுக்குப் பெரியோரின் கட்டளைகள் நன்மைக்கு வழிகாட்டியா யிருக்கும்!

வளரும் இலக்கியம்

தெய்வப்புலவர் திருவள்ளுவர்

இப் புத்தகம் திருவள்ளுவர் வரலாற்றைக் கூறுகிறது. '2000 ஆண்டுகட்கு முன் வாழ்ந்த திருவள்ளுவருக்கு வரலாறேது?' என்று கேட்கலாம். திருக்குறள் ஒன்று கொண்டே வள்ளுவரின் வாழ்க்கை வரலாற்றை எழுத இயலும் என்று யாழ் நூல் கண்ட பேராசிரியர் விபுலானந்த அடிகளார் எழுதிக் காட்டினர். அவ் வழிபற்றி, திருக்குறட் கருத்துக்களைக் கொண்டே, வள்ளுவர் வாழ்க்கையைச் சித்திரிக்கிருர் திரு. ஔவை. சு. துரைசாமி அவர்கள். திருக்குறளின் பொழிப்புரையோ, தேனூறும் செந்தமிழோ எனும்படி நூல் இனிய நடையில் இயன்றுள்ளது. பரம்பரைக் கதைகள், வள்ளுவர் பற்றி எழுந்த புராணங்கள் முதலியவற்றையும் குறிப்பிட்டு, அவை ஆராய்ச்சிக்குப் பொருந்தாதனவாய் இருப்பதையும் தெளிவுற எடுத்துக் காட்டுகிருர் ஆசிரியர். தமிழகத்தின் தனிப்பெரும் புலவராக என்றென்றும் வீற்றிருக்கும் திருவள்ளுவரின் வரலாற்றை—கட்டுக்கதை கலப்பின்றி—ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளவேண்டியது இன்றியமையாதது. அதற்கு இந்நூல் பெரிதும் துணையாகும். இன்னென்று, நம் நாட்டில், ஒரு வழக்கம் என்னவென்ருல், ஒருவரை உயர்ந்தவரென்று கூறவேண்டுமானல் அவரைத் தெய்வமாக்குவது வழிவழியாக வழக்கமாகி விட்டது. பெரும் புலவர் என்ருே, உயர் புலவர் என்ருே கூறுவதை விடுத்துத், 'தெய்வப் புலவர்' என்று கூறியது 'சமயப் பற்று' மிகுந்ததால் என்றே கருதுகிருேம். இவ் வழக்கம் நீங்க வேண்டும். இந்நூலின் விலை ரூ 1. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட். 1/140 பிராட்வே, சென்னை—1.

தமிழ்ச் சங்கங்களின் வரலாறு

தமிழ்ச் சங்கங்கள் பற்றி இருந்து வரும் குழப்பமான எண்ணங்களை நீக்க வல்ல ஒரு புத்தகம் இது என எண்ணினேம். ஆனல் குழப்ப நிலை இப் புத்தகம் கற்றபின் நீடிக்கலாயிற்று. ஆசிரியர், கடைச் சங்க காலம் முடியப் பத்துச் சங்கங்களைப் பற்றிய செய்திகள் தருகிருர். இவற்றில் கடைச்சங்கம் ஒன்று பற்றிய செய்தியே சிறிது தெளிவானதாக இருக்கிறது. மற்றவை குழப்பத்தையே வளர்க்கின்றன. கந்த புராணம், பாரதம், இராமாயணம் முதலிய புராண

இதிகாசங்களும், பிறபல கட்டுக் கதைகளும், ஆசிரியருக்கு வரலாற்று வடிவாகக் காணப்படுகின்றன. கடற் கோள்கள் நிகழ்ந்தன என்பதையும் கூறி, கடலைச் சகரன் வெட்டினன் கங்கையைப் பகீரதன் வெட்டினன் என்பது போன்ற செய்திகளையும் கூறுகிறார் ஆசிரியர். இவை பொருந்தாக் கூற்றாக இருப்பதுடன், ஒரு கருத்துக்கொரு கருத்து முரணாகவும் இருக்கிறது. இராவணனை அரக்கனென்று குறிப்பிட்டவர், கண்ணபிரானையும் அரக்கனென்றே கூறுகிறார். இது போன்ற கூற்றுக்களாலும் இதிகாச புராண, கட்டுக்கதைகளை ஆதாரமாகக் கொள்வதாலும் இந்நூல் ஆராய்ச்சி நூலாகத் தோன்றவில்லை! கட்டுக் கதைகளின கோவையாக இருக்கிறது. ஆசிரியர் துடிசை கிழார் அ. சிதம்பரனார். விலை ரூ 2—0—0 தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்லிமிடெட் 1/140 பிராட்வே சென்னை—1.

"இதுவோ எங்கள் கோவை"

கோயமுத்தூர் பற்றிய வரலாற்று நிகழ்ச்சிகள், புராணங்கள், கட்டுக் கதைகள், கர்ண பரம்பரைக் கதைகள் முதலியனவும், இன்று நகர் சிறந்து விளங்குவதன் காரணமும, நகரில் உள்ள மன றங்கள் பள்ளிகள், தொழில் நிலையங்கள், மருத்துவ விடுதிகள், சிறைச்சாலைகள், கல்லூரிகள் முதலியன பற்றிய விவரங்களும் பிறவும் சேர்த்து, படிப்பதற் கினிய முறையில் எழுதி வெளியிட்டிருக்கிறார் கோவைக் கிழார், சி. எம். இராமச்சந்திரன் செட்டியார். கோவையைத் தம் ஊராகக் கொண்ட பலருக்கு இந்நூல் சிறிது பெருமையையும், நெஞ்சு நிமிர்ந்த நிலையையும் மகிழ்ச்சியையும் சேர்க்கும் என்று சொல்லத் தேவையில்லை. பிற ஊராரும், கோவை பற்றிய விவரங்களை அறிந்து கொள்வதற்கு இந்நூல் ஒரு கருவியாகப் பயன்படும். கோணியம்மன் கதையைக் கூட விரிவாகக் கூறிய ஆசிரியர், இன்று உள்ள தமிழ் விஞ்ஞானி ஜி. டி. நாயுடுவைப் பற்றியும, அவர்தம் ஆக்க வேலைகளைப் பற்றியும் கூறாது விட்டுவிட்டாரே என்ற குறையொன்று தான். அடுத்த பதிப்பில் விஞ்ஞானியைப் பற்றி விரிவாக எழுதிச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். விலை ரூ 2. கோவை நிலையப் பதிப்பகம் 4/89, திருச்சிப் பாதை, கோயமுத்தூர்.

சுடாத நெருப்பு

தோழர் கு. திரவியம் (ரவி) அவர்கள், பல பத்திரிகைகளில் எழுதிய கவிதைகளின் தொகுப்பே 'சுடாத நெருப்பு' என்ற இப் புத்தகம். சுடாத நெருப்பு என்ற காவியத்துடன் நூல் தொடங்குகிறது. காதற் கணவனைப் பிரிந்த அரசி நெருப்பிற் குதிக்கும் போது தடுத்த சானறோர், அரசி கைமமை நோன்பு பூண்டு கடமையைக் காக்க வேண்டுமென்று வேண்டுகிறார்கள். "கைம்மை, விதவை கொடுந் தமிழ்ச் சொற்கள்" என்று கூறித் தீயில் பாய்கிறாள். கணவற் பிரிந்த அவளுக்குத் தீ, தடாக நீரினும தண்மை மிகுந்த சுடாத நெருப்பாகத்

தோன்றுகிறது. இன்னும் 'இந்தி வெள்ளமதைத் தடுப்பீர்' என்ற தலைப்புள்ள கவிதையில், உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலத்தையே உதறித் தள்ளும் தமிழர் நாட்டில் இந்தியைப் பரவச் செய்ய முடியுமா என்று சவால் விடுகிறார் ஆசிரியர். ஒவ்வொரு கவிதையின் கருத்தையும் விரித்துரைத்தாற் பெருகும்! முடிவாகச் சொன்னால், கவிதைகள் அனைத்தும் புத்துலகக் கருத்துக்களடங்கியவை. சிட்டைப் பார்த்துப் பேசும் போதுகூடச் சிந்தனையலைகளைப் பாய்ச்சுகிறார் ஆசிரியர். இது போன்ற நல்ல கருத்துக்கள் நாட்டில் பரவ வேண்டும். 'திரவியத்தின் சொல்லரிய தாம தொண்டுக்கென்ன கைமாறு அறிவோம நாம' என்று கவியரசர் பாரதிதாசனே தம் முன்னுரையில் கூறுகிறார். நல்ல தொகுதி. விலை ரூ 1—4—0. தமிழ்ப் பொழில் 31, சிம்மக்கல் தெரு, மதுரை.

ஏழையின் அரசியல்

இன்று நம்நாட்டின் அரசியலுக்குக் 'குடியரசு' என்ற அழகான பெயர் சூட்டப்பட்டிருந்தாலும், செல்வர் கைப் பொம்மையாக இருக்கிறது. அது உண்மையில் குடி மக்களின அரசாக என்ன வழி என்பது பற்றிய வழிகாட்டியே இப் புத்தகம் என்னலாம். ஆட்சி கைமாறி இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் நாட்டுக்கு விளைந்த நன்மைகளை எண்ணிப் பார்த்தால் ஒன்றுகூட இல்லை யென்பதை உணருகிறோம். புகைவண்டி நிலையங்களில் இந்திப் பெயர் எழுதிவிட்டதால் புகையைக் கூடக் காணாத அடுப்புகளில் சோறு பொங்கி வழியவில்லை. காரணமென்ன? ஆட்சியாளருக்கு மக்களின் நிலைபற்றி அக்கரையில்லை. கொண்டது கொள்கையாய்க் கண்டது கோலமாய்த் திரிந்து வருகின்றனர். இந்த இழிநிலை மாறப் புதுப் பாதை வகுக்கவேண்டும். ஏழையின் அரசியல் அரியணை ஏற வேண்டும். எனவே வாழ வழி வகுக்க ஒன்றாக வாருங்கள் என்ற அன்பழைப்பை மக்களுக்கு விடுக்கிறார் ஆசிரியர் எஸ். சதாசிவம். விலை அணா எட்டு. இன்ப வாழ்வுப் பதிப்பகம், ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.

திருக்கோயிலும் திருத்தமும்

திரு. ரா. பி. சேதுப் பிள்ளை மு. வரதராசனார், ம. பொ. சி மா. இராசமாணிக்கம், அ. கி பரந்தாமனார், ரா. நடேச நாயக்கர், வி. நடேசன் ஆகியோரின் கருத்துரைகள் அடங்கிய நூல் இது. வரதராசனாரும், ம. பொ. சி யும், பரந்தாமனாரும், சீர்திருத்தம் பற்றிக் கருத்துக் கூறமற்றுள்ளோர் கோயிற் பெருமைகளையே பெரிதாகக் கூறுகின்றனர். வரதராசனார், ம. பொ. சி. இருவரின் கருத்துக்களைச் சமயத்தார் ஏற்பாராயின், தழைத்தினிதோங்குக என்று வாழ்த்த வாழ்த்த நலிந்துவரும் சைவம் வளரா விடினும், நிலைத்தாவது நிற்கும். இக்கருத்துத் திரட்டை வெளியிட்ட மன்றத்தாரைப் பாராட்டுகிறோம். விலை 6 அணா இளைஞர் நல்லறமன்றம், 107, கந்தசாமி கோயில் தெரு, சென்னை—12

—வேத்தரசன்